## ஒன்றிணைந்த திண்மக் கழிவு முகாமைத்துவம் கழிவுப் பிரச்சினைக்கு சிறந்த தீர்வாகும்

கலாநிதி பரீனா ருஸைக்
புவியியல் துறை விரிவுரையாளர்,
கொழும்பு பல்கலைக்கழகம்

07



மாயக்கல்லி: 10



மலையில் செதுக்கப்படும் இனவாதச் சிலை

06



சூதீன் எனும் ஒரு நல்லாசிரியர்


# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
www.meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 368 • 05 மே 2017 வெள்ளிக்கிழமை • ஷஃபான் 1438 • விலை 40.00







# யுனெஸ்கோவில் மீண்டும் பலஸ்தீனின் காலை வாரி விட்டது இலங்கை



இஸ்ரேலினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காஸா, ஜெரூஸலம் பகுதிகளில் இஸ்ரேலின் நடவடிக்கைகளை கண்டித்து யுனெஸ்கோ தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த செவ்வாயன்று, அல்ஜீரியா, எகிப்து, லெபனான், மொரோக்கோ, ஓமான், கட்டார், சூடான் நாடுகள் இணைந்து கொண்டு வந்த இந்தத் தீர்மானத்துக்கு 22 நாடுகள் ஆதரவாக வாக்களித்துள்ளன.

பிரேரணையை முன்வைத்த ஏழு அரபு நாடுகளுடன் ரஷ்யா, சீனா, பிரேஸில், ஸ்வீடன், தென் ஆபிரிக்கா, ஈரான், மலேசியா, மொரீஷியஸ், நைஜீரியா, செனகல், பங்களாதேஷ், பாகிஸ்தான், வியட்நாம், நிகரகுவா, சாட் குடியரசு ஆகியன இஸ்ரேலைக் கண்டிக்கும் இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தன.

அமெரிக்கா, ஜேர்மனி, இத்தாலி, இங்கிலாந்து, ஹொலன்ட், லிதுவேனியா, கிரேக்கம், பரகுவே, உக்ரைன், டோகோ ஆகிய 10 நாடுகள் தீர்மானத்துக்கு எதிராக வாக்களித்துள்ளன.

பிரான்ஸ், இந்தியா, இலங்கை உட்பட 23 நாடுகள் இஸ்ரேலைக் கண்டிக்கும் இந்தத் தீர்மானத்துக்கு வாக்களிக்காமல் ஒதுங்கிக் கொண்டுள்ளன. (பக்.14)



## தமிழ்க் கூட்டமைப்புடன் பேசிய பின்னரே தீர்மானம்

**- மீளழைக்கப்பட்டது தொடர்பில் ஐயூப் அஸ்மின்**



வடக்கும், கிழக்கும் இணைந்தாலும் முஸ்லிம்களுக்கு தென்கிழக்கு அலகு என்ற ஒன்று இருக்கக் கூடாது என்ற விடயத்தில் தமிழ் மக்கள் உறுதியாக இருக்க வேண்டும் என தமிழ்க் கூட்டமைப்பின் மேதினக் கூட்டத்தில் உரையாற்றிய த.தே. கூட்டமைப்பின் நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் வடமாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மின் அவரது கட்சியினால் மீள அழைக்கப்பட்டுள்ளார். (பக்.14)

## பலஸ்தீன சிறைக் கைதிகளுக்கு ஆதரவாக பெருமளவில் கையொப்பம்

இஸ்ரேலிய சிறைகளில் அடைக்கப்பட்டு தற்போது உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 1500 பலஸ்தீன் சிறைக் கைதிகளதும் போராட்டத்துக்கு ஆதரவாக இலங்கையிலுள்ள பலஸ்தீன தூதரகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட கையொப்பம் திரட்டும் நிகழ்வில் நூற்றுக் கணக்கில் மக்கள் பங்கெடுத்து வருவதாக தூதரக அதிகாரி அஷ்.ரிஹான் அமீரலி தெரிவித்தார்.

இஸ்ரேலினால் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்ட தமது பூமிக்காகவும் முஸ்லிம்களின் புனித ஸ்தலமான பைதுல் முகத்தஸை மீட்டெடுப்பதற்காகவும் போராடி வருகின்ற பலஸ்தீனர்களை இஸ்ரேல் சிறைப்பிடித்து சித்திரவதை செய்து வருகிறது. இந்தப் பலஸ்தீன சிறைக் கைதிகள் தினம் ஏப்ரல் 17 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டதில் இருந்து 1500 க்கும் மேற்பட்ட பலஸ்தீனக் கைதிகள் தமக்கு நியாயம் கோரி உண்ணாவிரதப் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். (பக்.14)

## மலையகத்துக்கு கணித, விஞ்ஞானம் கற்பிக்க இந்தியாவில் இருந்து ஆசிரியர்கள்



மலையக பாடசாலைகளில் கணித, விஞ்ஞான பாடங்களை கற்பிக்க இந்தியாவில் இருந்து ஆசிரியர்கள் அழைத்து வரப்பட விருப்பதாக கல்வி இராஜாங்க அமைச்சர் வி. இராதா கிருஷ்ணன் தெரிவித்துள்ளார். இந்திய உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஊடாக இதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் கூறினார்.

மலையகத்தில் உள்ள 25 கணித, விஞ்ஞான பாடசாலைகளும், 35பாடசாலைகளும் அபிவிருத்தி செய்யப்படும். இவற்றுக்கு போதிய வசதிகளை பெற்றுக்கொடுக்க முடிந்தபோதிலும், கணித விஞ்ஞான பட்டதாரி ஆசிரியர்களை பெறுவது கடினமாக உள்ளதென தெரிவித்தார். இது பற்றி இந்திய உயர்ஸ்தானிகராலயத்துடன் பேசி ஆசிரியர்களை தருவிக்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் அவர் கூறினார்.

## மஸ்லஹா அடிப்படையில் திருத்தங்களை கலந்துரையாட ஜம்மியதுல் உலமா இணக்கம்

முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்த வேண்டிய பகுதிகளை மஸ்லஹா அடிப்படையில் கலந்துரையாடுவதற்கு அகில இலங்கை ஜம்மியதுல் உலமா இணக்கம் தெரிவித்திருக்கிறது. கடந்த 30 ஆம் திகதி நீதியரசர் ஸலீம் மர்ஸூப் தலைமையிலான் குழுவினருக்கும் அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவுக்கும் இடையிலான சந்திப்பிலேயே இவ்வாறு இணக்கம் காணப்பட்டுள்ளது. இந்தச் சந்திப்பில் ஜம்மியதுல் உலமாவின் அதிகமான அங்கத்தவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

1956 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்கள் தேவையில்லை என்ற நிலைப்பாட்டில் அகில இலங்கை ஜம்மியதுல் உலமா இருந்த போதிலும், ஷாபிஈ மத்ஹபுடைய நிபந்தனைகளுக்குட்பட்ட வகையில் மனித நலனை முற்படுத்திய (மஸ்லஹா) திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்பதில் இந்தச் சந்திப்பின் போது உடன்பாடு காணப்பட்டுள்ளது.

திருத்தப்பட வேண்டிய விவகாரங்களை மஸ்லஹா அடிப்படையில் கலந்துரையாடுவதற்கான முதலாவது கூட்டம் நேற்று (வியாழன்) மாலை 4.00 மணிக்கு நடைபெற ஏற்பாடாகியிருந்தது. (பக்.14)

## நீர்வளத்துக்குப் பாதிப்பாம். மலையக மக்களின் காணிகளையும் வனப்பாதுகாப்புக்கு அபகரிக்க முயற்சி

அரசாங்கத்தால் கைவிடப்பட்ட நிலையில், காணிச் சீர்த்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான மொனறாகலை மாவட்டம், மொனறாகெலே மற்றும் அலியாவத்தை தோட்டங்களில் 5, 6 தலைமுறைகளாக வாழ்ந்து வரும் தோட்டத் தொழிலாளர்களை அங்கிருந்து பலவந்தமாக வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இயற்கை நீருற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகக் கூறி இம்மக்களை வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகளை வனப் பாதுகாப்புத் திணைக்களம் மேற்கொண்டு வருகிறது. இந்தச் செயற்பாட்டில் உள்ளூராட்சி நிறுவனங்கள், மாவட்ட செயலகம் என அனைத்தும் களத்தில் இறங்கியுள்ளன. (பக்.14)








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பறிபோகும் பங்குகள்

- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்

எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு
என்னென்னவோ சாதிக்கிறீர்கள்!
சம்பந்தன் ஐயா,
சபாஷ் ஐயா உங்களுக்கு!

இருபத்தொரு பேரிருந்தும்
இடி விழுந்தாற்போல்
மௌனம் இங்கே.

சமூகத்தின் சூட்டை
தணித்துவிடுமோ
சூடான அறிக்கைகள்?

பரம்பரைப் பங்குகள் கூடப்
பறிபோய்க் கொண்டிருக்கின்றன.
பங்காளிக் கட்சிகள்
பார்த்திருக்கையிலே

'அம்பாறை மாவட்டம்
எங்கள் கோட்டை'
இல்லை வெறும் ஓட்டை.
ஓஸோன் படை போல
ஓட்டை விழுந்த கோட்டை

இம்சைவாதிகளினால்
அகிம்சை புத்தருக்கு
மாயக்கல்லி மலையிலே
சிலை வைப்பு.

முஸ்லிம்களின் காணியிலே
விகாரை அமைக்கும்
முயற்சியில்
விகாரமகாதேவியின்
புதல்வர்கள்

புத்தபிரான் இருந்திருந்தால்
பௌத்தத்தின் பெயரால்
பேயாட்டம் ஆடும்
எத்தர்களை
தடியெடுத்தாவது
தடுத்திருப்பார்.

பதவி விக்கட்களை மட்டும்
பாதுகாத்துக் கொண்டு
சமூக விக்கட்களை
பறிகொடுத்து வருகின்றனர்
முழு அமைச்சர்,
முதலமைச்சர்
மற்றும் அத்தனைபேருமே.




பூர்வீக காணிகளில் வசித்த முஸ்லிம்களை அவர்களின் விருப்பமின்றி அப்புறப்படுத்தி இறக்காமம், மாணிக்கமடு பிரதேசத்தின் மாயக்கல்லி மலையில் பௌத்த மடாலயம் அமைப்பதற்கான முஸ்தீபு மற்றும் அத்துமீறிய காணி அபகரிப்பு போன்றவற்றை தடுக்கின்றோம் என்கிற வகையிலான முன்னெடுப்புகள், அரசியல் விஜயங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று முடிந்திருக்கின்றன. ஆனால், தீர்வு?

"Justice delayed is justice denied"

## தேசத்தைக் கட்டியெழுப்பும் மூன்று தூண்கள்

இவ்வாறும் கூறலாம்: உணவு, பாதுகாப்பு, கல்வி
இம்மூன்று பகுதிகளையும் கட்டியெழுப்புபவர்களை நாடு கௌரவமான சம்பளம் கொடுத்து கண்ணியப்படுத்தாத வரை அந்நாடு வளர்ச்சியை நோக்கி நகரப் போவதில்லை.

- ரிசாத் நஜ்முதீன்

## லண்டன் தமிழ்ச் சங்கத்தில் பகைமறப்பு காலம்: உரையாடல் தொடர்கிறது.




அண்மையில் வெளியிடப்பட்ட சிராஜ் மஷ்ஹூர் அவர்களது படைப்பான 'இலங்கை: இது பகைமறப்பு காலம்' நூல் தொடர்பான கருத்தாடல் நிகழ்வொன்று, எதிர்வரும் 06.05.2017 சனிக்கிழமையன்று லண்டன் தமிழ்ச் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.

போருக்குப் பிந்திய இருநூல்கள் என்ற வகையில் அவரது இந்த நேர்காணல் நூலும், 'புலிகளுக்குப் பின்னரான தமிழ் அரசியல்' எனும் நிலாந்தனின் நூலும் கலந்தாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

சமீபத்தில் மறைந்த எழுத்தாளர் அசோகமித்திரனின் எழுத்தாளுமை குறித்தும் இந்நிகழ்வில் கருத்துப் பகிர்வுகள் இடம்பெறவுள்ளன.

புத்தகங்களின் கருத்துக்களை அப்படியே ஏற்க வேண்டும் என்பதல்ல. புத்தகங்கள் படித்து முடிப்பதற்கல்ல. அவை உரையாடலின் சாத்தியத்தை அதிகரித்துக் கொண்டே இருக்க வேண்டும். அவை தொடர்பான மாற்றுக் கருத்துகள் முன்வைக்கப்பட வேண்டும். புத்தகங்கள் புதிய சிந்தனைகளைக் கிளர்த்த வேண்டும் என்ற நூலாசிரியர் சிராஜ் மஷ்ஹூரின் விருப்பத்துக்கேற்றாற்போல இது நிகழ்கிறது.

தமிழ்மொழிச் சமூகங்களின் செயற்பாட்டகத்தினரின் ஏற்பாட்டில் நடக்கும் இந்நிகழ்வை சிறப்பாக நடத்துவதற்கான முயற்சிகளை லண்டனில் இருந்து எம். பௌசர் எடுத்து வருகிறார்.

## எத்தனை காலத்திற்கு ஏமாற்றப்படுபவர்களாகவே இருக்கப் போகிறோம்?

- Sajeeth Amsajeeth



மாயக்கல்லி மலையை பார்வையிடுவதற்காகச் சென்றபோது, அங்கு ஏராளமான கலகம் அடக்கும் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். மலையினை நெருங்க முடியாதபடி அங்குமிங்கும் சில இளைஞர்கள் அமர்த்தப்பட்டிருப்பதையும் அவதானித்தோம்.

மாயக்கல்லி மலையில் சிலை வைப்பதற்கான முதல் அங்கீகாரம் யாரால் வழங்கப்பட்டது? முஸ்லிம்கள் மட்டும் வாழ்கின்ற ஒரு பிரதேசத்தில் இதற்கான அனுமதியினை யாரால் வழங்க முடியும்? இதற்காக வழங்கப்பட்ட விலை என்ன? என்பவற்றை மக்களே சிந்திக்க வேண்டும். தயாகமகே ஆரம்பத்தில் எவ்வாறு செயற்பட்டார் என்பதும், சிலையினை அகற்றுவதால் தன்னுடைய நிலைப்பாடு எவ்வாறு இருக்கும் என்பதனையும் அவருடைய பேச்சுக்கள் நிரூபித்தன.

அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் வழங்கிய 23000 வாக்குகள் எவ்வாறு முஸ்லிம்களுக்கு எதிராக திரும்பின என்பதற்கு இவ்விடயம் தக்க சான்று. மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களால் தீர்க்க முடியாத பிரச்சினையாக மாறியிருக்கின்ற இவ்விடயத்தில் மக்களை பலியாக்க முனையும் முயற்சி நடைபெறுகிறது. போராட்டங்கள் எனும் பெயரில் குளிர் காய முயற்சிக்கும் அரசியல் வியாபாரிகளின் தந்திரங்களுக்கு மக்கள் பலியாகி விடக் கூடாது. எத்தனை காலத்திற்கு ஏமாற்றப்படுபவர்களாகவே இருக்கப் போகிறோம்?

புனித பூமியாக நிலங்கள் அடையாளப்படுத்தப்படும் போது, அவை சார்ந்த நில அளவும் புனித பரப்பினில் சென்று விடுகின்ற அபாய நிலை தோன்றக் கூடும். இவ்விடயத்தில் மிக அவதானமாக போராட்டக்காரர்கள் செயற்பட வேண்டியுள்ளது. மலையில் வைக்கப்பட்ட சிலையினை மீண்டும் அகற்றுவதென்பது மிகச் சவாலான விடயம். சில நேரங்களில் சாத்தியமாகாத விடயமும் கூட. ஆனால் விகாரை அமைத்தல் என்பது பண்பாட்டு ரீதியான அடையாளங்களை முன்வைத்து, நில அபகரிப்பினை மேற்கொள்வதற்கான முயற்சியாக நோக்க முடியும். அதிலிருந்து முதலில் 400 மீற்றர்களை உள்வாங்கி, இருப்பிடம், வழிபாட்டுத்தலம், விரிவாக்கக் கூடம், பொது நிறைவேற்றக் கூடம் போன்றன அமைக்கப்படுவதற்குப் பெருத்த நிலப்பரப்பின் தேவை அவசியமாகிறது. அவை கூட ஒரு சமாச்சாரமாக இல்லாவிட்டாலும் அவற்றுக்கான அரசியல் சிந்தனை, செயற்பாடு என்பன முழு அம்பாறை மாவட்டத்திற்கான புனித பூமிகளின் அஸ்திவாரங்களாகும்.

இவற்றினை போராட்ட வழி நிலையில் நின்று தடுக்க முயற்சிப்பதானது ஆரோக்கியமான விடயமல்ல. இக்கால போராட்டங்களின் இழுபறி நிலையினை நாம் அவதானிக்காமலில்லை. இன்றைய கால போராட்டங்கள் எல்லாம் வெறும் சாதாரண நிகழ்வுகளாகவே இருக்கின்றன. தமிழர் தரப்பிலிருந்து இதற்கான பாடத்தினை நாம் நாள் தோறும் காண்கிறோம். இதற்காக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் காரமான உத்தரவு ஒன்றே போதுமானது. ஆனால் அதனை பெற்றுக் கொள்வதில் சவால்களே அதிகம். இன்னும் சொற்ப காலத்தில் துட்டகைமுனுவின் வரலாற்று அடையாளம் கொண்ட ஆவணத்தினை மாயக்கல்லி மலையிலிருந்து தொடக்கி வைப்பார்கள். அதன் பிறகு எம்மால் விகாரைகளை பார்வையிட மட்டுமே முடியும்.

சுமூகமான தீர்வென்பது போராட்டங்களால் நிகழ்ந்து விடாது. பட்டதாரிகள், தோட்டத் தொழிலாளர்கள், காணாமல் போனோர் உறவினர்கள் என தீர்வுகளை எட்டாத தசாப்தங்கள் கடந்த போராட்டங்கள் ஏராளம். அதில் ஒன்றுதான் மாயக்கல்லி மலையும். இப்பொழுது பொதுபல சேனா இவ்விடயத்தில் மூக்கை நுழைத்திருப்பது பற்றி நாம் சாதாரணமாகக் கடந்து விட முடியாது. அவற்றின் பின்னால் இருக்கின்ற திரைமறை அரசியலின் எதிர் நோக்கு மிக அபாயகரமானது.

மாயக்கல்லி மலையில் அமர்ந்திருக்கும் புத்தர் சாதாரணமானவரல்ல. அடுத்த தேர்தலில் எமது தலைவர்களின் வாக்கு வங்கியினையும், வாய் வங்கியினையும் நிர்ணயிக்கக் கூடியவர்.

## தீகவாபி பரிவார சைத்திய ரஜமகா விகாரையின் பிரதம பௌத்த பிக்கு வண: போத்திவெல சந்தானந்த தேரர் தெரிவித்தது...

''எந்த இனமாக இருந்தாலும் மற்றொருவரின் காணியில் அத்துமீறி பௌத்த விகாரை நிர்மாணிக்குமாறு புத்தபெருமான் ஒருபோதும் கூறவில்லை.''

''நீண்ட காலமாக மாயக்கல்லி முஸ்லிம்களின் அவர்களது பூர்வீக காணிகளில் வசித்தோரை அவர்களின் விருப்பமின்றி அப்புறப்படுத்தி விகாரையை அமைக்க வேண்டிய அவசியமில்லை. மாணிக்கமடுவுக்கு அருகிலேயே தீகவாபி உள்ளதால் இங்கும் ஒரு விகாரை அவசியமில்லை. தொல்லியல் சின்னங்களை பாதுகாக்கும் பொறுப்பு எல்லா இனங்களையும் சார்ந்தது. இதனை ஒரு குறிப்பிட்ட குழுதான் பாதுகாக்க வேண்டிய தேவையில்லை.''

'மாணிக்கமடு மாயக்கல்லி விடயத்தினால் அம்பாறை மாவட்ட கணிசமான சிங்கள மக்கள் கவலையடைந்துள்ளனர். பௌத்த மக்கள் தமிழ்-முஸ்லிம் மக்களுடன் என்றுமே நல்லுறவைப் பேணி வருகின்றனர். அவர்கள் இந்நாட்டுப் பிரஜைகள் எமது சகோதரர்கள்.''

''மேலும் தீகவாபியைச் சுற்றிலும் பல விகாரைகள் உள்ளன. ஆனால் புத்த பெருமானை வணங்குபவர்கள் மிக குறைவானவர்களே!. இந்நிலையில் மற்றுமொரு விகாரை மாணிக்கமடுவில் எதற்கு?''

''மஹிந்த சிந்தனைக்குட்பட்ட பௌத்த பிக்குகளின் எதேச்சதிகார போக்கே இது. எமது மாவட்ட மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் இருக்கிறோம். ஞானசார தேரர் இங்கு வர வேண்டிய அவசியமில்லை. இதனைப் பார்க்க அவர் யார்? அவர் இனங்களைத் தூண்டிவிடும் ஒரு குழப்பக்காரர். ஏனைய இனங்கள் மத்தியில் வாழும் கணிசமான பௌத்தர்கள் இவரது கொள்கையை ஆதரிக்கவில்லை. எனவே முஸ்லிம்கள் அவதானத்துடன் நடந்துகொள்ளுங்கள்.''

''இந்த நாடு பௌத்தர்களுக்கே சொந்தமென சிலர் கூறுகின்றனர். ஆனால், புத்த மதத்தை இலங்கைக்கு கொண்டு வந்த மஹிந்த தேரர் கூட் தேவநம்பிய திஸ்ஸ மன்னனிடம் இந்த நாடு எல்லா உயிர்களுக்கும் சொந்தம். உமக்கு மாத்திரமல்ல. ஆனால் இந்த நாட்டை நிர்வகிக்கும் பொறுப்பே உமக்குரியது. என்றார் என்பதையும் போத்திவெல சந்தானெந்த தேரர் நினைவுபடுத்தினார்.

நன்றி: இணையம்




''பாதையை மாற்றும் போதை'' என்ற கருப்பொருளில் அகுரஸ்ஸ கொடபிடிய பிரதேச மாணவ மாணவிகளின் எதிர்காலத்தை செம்மைப்படுத்தும் நோக்கில் சமூகத்தின் முக்கிய மூன்று கூறுகளாகிய மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களை இணைத்த ஒரு வழிகாட்டல் நிகழ்ச்சியொன்றை ''தேசத்தின் ஆதரவாளர் சங்கம்'' மாறை/கொடபிடிய ஸாதாத் மகா வித்தியாலத்தில் 24.04.2017 ஆம் திகதி ஏற்பாடு செய்திருந்தது. இந்நிகழ்வில் மாணவர்களுக்கான வளவாளராக பாதிஹ் நிறுவனத்தின் விரிவுரையாளர் அஷ்ஷெய்க் எம்.எச்.எம். ரஷாத் (நளீமி) கலந்து சிறப்பித்தார். ''இளம் சந்ததியினரை குறிவைக்கும் ஆட்கொல்லி போதை'' என்ற தலைப்பில் அவரது விரிவுரை அமைந்தது.

ஆசிரியர்களுக்கான வளவாளராக மனூஸ் அபூபக்கர் (Counsellor ministry of empowerment and Welfare) கலந்து சிறப்பித்தார். ''ஆரோக்கியமான வகுப்பறையை கட்டமைப்பதில் ஆசிரியர்களது வகிபாகம்'' என்ற தலைப்பில் உரையாற்றினார்.

பெற்றோர்களுக்கான வழிகாட்டல் நிகழ்ச்சியை அஷ்ஷெய்க் ஜே.எம். இக்ராம் (Al-Fassy, lecture of Al Minathul Fasiyya Arabic college) நடத்தினார். ''போதைப்பொருள் அற்ற சமூக உருவாக்கத்தில் ஆரோக்கியமான குடும்ப ஒழுங்கு'' என்ற தலைப்பில் அவரது விரிவுரை அமைந்தது.

மேற்படி வழிகாட்டல் நிகழ்ச்சியில் அதிதிகளாக அக்குரஸ்ஸ பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி (OIC), பொலிஸ் பரிசோதகர் (IP) அபேவிக்ரம, கொடபிடிய கிராம சேவகர் S.W. குணசேகர, அதுரலிய பிரதேச சபை சுகாதார பரிசோதகர் (PHI) S. சம்பத், பள்ளிப் பரிபாலன சபை தலைவர் H.L.M. பாரூக், பாடசாலை அதிபர் M.F.A. வஸீர் மற்றும் சங்கத்தின் தலைவர், செயலாளர், பொருளாளர் உட்பட சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களும் கலந்து சிறப்பித்தனர். ஊர் மக்களது பாரிய ஒத்துழைப்புடன் நடைபெற்ற இந்த நிகழ்வில், இளம் சந்ததியினரை போதையில் இருந்து பாதுகாக்க வேண்டிய சில முக்கிய தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டது. (தகவல்: இப்னு அசாத்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச் சட்டமும் மறக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களும்

• மரிசா டி சில்வா



முதலில் அவர்கள் என் ஆடைகளைக் களைவார்கள். கைகளை முதுகிற்கு பின்னால் கட்டி கூரையிலிருந்து தலைகீழாக தொங்கவிடுவார்கள். பின்னர் அடிக்கத் தொடங்குவார்கள். ஒவ்வொருவரும் தவணை முறைப்படி கைகளில் என்ன கிடைக்கிறதோ அதைக் கொண்டு அடிப்பார்கள். தடிகள், உலோகக்கோல்கள், சில நேரங்களில் மரக்கதிரைகளினாலும் அடிப்பார்கள். பின்பு இன்னோர் இரவு வந்தது. கைகளை முதுகிற்கு பின்னால் கட்டினார்கள். பொலித்தீன் பையினால் தலையை மூடி, பற்றவைத்த சிகரட்டினால் அதனை எரித்தார்கள். அந்த வேதனையை தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.''

இது ரவியின் கதை. தோட்டத்தொழிலில் ஈடுபடும் ஒரு தமிழர். அவர் கடத்தப்பட்டு, துன்புறுத்தப்பட்டு தகுந்த காரணமின்றி 'பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ்' தடுத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் 5 வருடங்களுக்கு பிறகு விடுவிக்கப்பட்டார். அவருக்கெதிரான அனைத்து குற்றச்சாட்டுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன. ரவியின் கதை, தேசமெங்கும் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டு அல்லாடிக் கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கானோரின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது. பலர், எந்தவிதமான முடிவுமின்றி பலதரப்பட்ட குற்றச்சாட்டுக்களுடன் போராடிக்கொண்டும் தொடர் வழக்கு விசாரணைகளினால் அல்லாடிக்கொண்டும் இருக்கிறார்கள். குற்றவாளிகளென தீர்ப்புக்குள்ளான சிலரும் ஏற்கனவே தடுத்துவைக்கப்பட்டிருந்த காலப்பகுதிக்கும் அப்பால், தமது தண்டனை காலத்தையும் கழிக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

''தமிழீழ விடுதலைப் புலிகளுடன், எனக்கு எந்தவிதமான தொடர்பும் இருந்ததில்லை. நான் பிறந்து வளர்ந்தது முழுவதும் கண்டியில்'' என்று ரவி கூறினார். ''எனது சகோதரர் இராணுவத்திற்காக மரதன் ஓட்டப்பந்தயத்தில் பங்கேற்பவர். அதனால், சுற்றுப்புறத்தில் எல்லோருக்கும் எங்கள் குடும்பத்தை தெரியும். அவர் காற்றைப் போல் ஓடுவார்.''

2008இல் கைதுசெய்யப்பட்டதன் பின்னர், ரவி குற்றப்புலனாய்வுத்துறை அதிகாரிகளால், 3 மாதங்கள் தொடர்ச்சியாக கொடூரமாக சித்திரவதை செய்யப்பட்டு, வலியை மேலும் தாங்கிக்கொள்ளமுடியாத பட்சத்தில் சிங்களத்தில் எழுதப்பட்டிருந்த ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றில் கையொப்பமிடுவதற்கு உடன்பட்டார். அதன் உள்ளடக்கம் என்னவென்று இன்னுமே அவர் அறியாதிருக்கிறார். கையொப்பமிட்ட அடுத்த கணமே சித்திரவதை நிறுத்தப்பட்டு நான்கரை வருடகாலம் தடுத்துவைக்கப்பட்டிருந்தார் (எந்த குற்றச்சாட்டிலும் குற்றவாளியெனதீர்ப்புவழங்கப்படாதபடியால்).

### பயங்கரவாத தடைச் சட்டமும் உத்தேசிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும்

கடுமையான தீவிரவாத எதிர்ப்பு சட்டமான, பயங்கரவாத தடை சட்டத்தை நீக்கும்படி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆர்வலர்களின் நீண்டகால கோரிக்கை பலனளிக்காமலேயே இருந்து வந்துள்ளது. பொதுவாகவே இந்த சட்டம், தனிமனித உரிமைகளையும் சுதந்திரத்தையும் மீறுகிறதென நாம் அறிந்திருப்பினும், அதில் அதிகமாக அச்சுறுத்தும் அம்சங்கள் இவை: பொலிஸ் அதிகாரிகளிடம் சட்ட ஆலோசனை அற்ற ஒப்புதல் வாக்குமூலம், நீதித்துறையின் மேற்பார்வையற்ற நீடித்த நிர்வாக தடுப்புக்காவல், சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் மிகையான அதிகாரம், அத்துடன் வலிந்து காணாமல் ஆக்கப்படுவதற்கும் திட்டமிட்ட சித்திரவதைகளுக்கும் ஏதுவான சூழல் உருவாக்கப்படல். மேலும், பயங்கரவாதத் தடைச்சட்டமானது, எதிர்ப்புப் போராட்டம், பேச்சு சுதந்திரம், கூட்டங்கூடுதல் ஆகியவற்றை அடக்குவதற்கும் பரவலாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

செப்டெம்பர் 2015 இல் அரசாங்கமானது, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மறுபரிசீலனை செய்து நீக்கி, அதற்குப் பிரதியீடாக, சிறந்த சமகால சர்வதேச சட்டங்களுக்கு அமைய பயங்கரவாத - எதிர்ப்பு சட்டமொன்றை உருவாக்குவதற்கான அர்ப்பணிப்புகளை மேற்கொண்டிருந்தாலும், பயங்கரவாதத் தடைச்சட்டத்தை மறுபரிசீலனை செய்வது தொடர்பில் பொதுமக்களின் கருத்துப் பெறல் மற்றும் தகவல் வழங்கல் போன்ற விடயங்களில் முற்றிலும் ஒரு இருட்டடிப்பான பாங்கினையே கொண்டிருந்தது.

மேலும், ஒரு குழப்பகரமான கட்டமாக, ''இலங்கையின் உத்தேசிக்கப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் கொள்கை மற்றும் சட்டக் கட்டமைப்பு'' என்கிற தலைப்பில் ஆவணமொன்று தற்போது உத்தியோகபூர்வமற்ற முறையில் பொதுப் பரப்பில் வெளிவந்து, முதல் வாசிப்பிலேயே, பயங்கரவாத தடைச் சட்டத்தை விட பலமடங்கு பிரச்சினைக்குரிய தொன்றாக தென்படுகிறது. ஏற்கனவே பாரிய அச்சுறுத்தலாக இருந்த கூறுகளை இந்த உத்தேசிக்கப்பட்ட பயங்கரவாத - எதிர்ப்பு சட்டமானது மேலும் பலப்படுத்துகிறதென தோன்றுவதுடன் வேறும் பல புதிய அம்சங்களையும் எட்டு பக்க நீளத்திற்கு முன்வைக்கிறது.

அரசாங்கமானது, இந்தச் சட்டத்தின் இருப்பை இன்னமும் உத்தியோகபூர்வமாக உறுதிசெய்யவில்லை. எனினும், பயங்கரவாத - எதிர்ப்புச் சட்டத்தின் வரைவொன்று நாடாளுமன்றத்தின் மேற்பார்வை குழுவின் முன்னிலையில் தற்போது இருக்கிறதென எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் குறிப்பிட்டிருக்கிறார்.



### பெயரற்ற மனிதர்கள், மறக்கப்பட்ட முகங்கள்

பயங்கரவாதத் தடைச்சட்டமானது மோதல்கள் இடம்பெற்ற காலங்களிலேயே பாரிய அளவில் பயன்படுத்தப்பட்டிருப்பினும், அது இன்னமும், போராட்டக்காரர்களுக்கும் குறிப்பாக தமிழ் மக்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கும் ஒன்றாகவே இருந்துவருகின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதாகி சிறைச்சாலைகளில் அல்லல்படும் பல கைதிகளின் நிலையையே இந்தப் பதிவு சுருக்கமாக எடுத்துக்காட்டுகிறது. சிலர் 19 வருடங்களாக வழக்கு விசாரணைகளில் எந்த முடிவுமின்றி விளக்கமறியலிலும், வேறும் சிலர் குற்றம் சுமத்தப்படுவதற்கு முன்னரே 15 வருடங்கள் தடுத்துவைக்கப்பட்டும், ஏனையோர் சுமார் 400 - 500 வழக்கு விசாரணைகளினால் அலைக்கழிக்கப்பட்டுக் கொண்டும் எந்தத் தீர்வுமின்றி இருக்கின்றனர்.

ரஜனியின் தந்தை 1998ஆம் ஆண்டு, புகழ்பெற்ற கண்டி தலதா மாளிகை குண்டு வெடிப்பு சம்பவத்துடன் தொடர்புடையவர் என்கிற சந்தேகத்தின் பேரில், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். 5 வருடங்களுக்குப் பின் 2003 இல், அவர் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டு மரணதண்டனை விதிக்கப்பட்டது. ''அவரைக் கொண்டு செல்வதற்கு அவர்கள் வீட்டுக்கு வந்தபோது எனக்கு வயது பத்து. அந்தச் சம்பவம் நேற்று நடந்ததுபோல் எனக்கு இன்னும் நினைவிருக்கிறது'' என்கிறார் ரஜனி.

''தைப் பொங்கல் பண்டிகைக் காலப் பகுதிகளில், திருகோணமலையிலிருந்து நீண்டகாலமாக தொடர்பற்றுப்போன உறவினர்கள் என்று கூறிக்கொண்டு நாங்கள் இதற்கு முன் கண்டிராத இரு மனிதர்கள் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார்கள். அவர்கள் என் தந்தையை 'பாப்பா' (சித்தப்பா) என்று அழைத்தார்கள். அவர்கள் ஒரு லொறியை செலுத்திக் கொண்டு வந்து, வியாபாரத்திற்காக கண்டிக்கு வந்திருப்பதாகவும் இந்த இடம் பழக்கமில்லாதமையினால், நகர்ப்புறங்களுக்கு வண்டியைச் செலுத்திச் சென்று தங்களுக்குச் சுற்றிக் காண்பிக்கும் படியும் என் தந்தையிடம் கேட்டுக்கொண்டார்கள். அதற்குப் பணம் செலுத்துவதாகவும் கூறினார்கள். எனது தந்தை, மாதம் ரூபா 15,000 மாத்திரமே சம்பாதித்ததால் அந்த மேலதிக வருமானத்தை வரவேற்றார்.

கண்டியின் சோதனைச் சாவடிகளில் லொறி நிறுத்தப்பட்ட சந்தர்ப்பங்களிலெல்லாம், வாகனம் அந்த இரு மனிதருக்கு சொந்தமாயிருந்தபோதும் கூட, தனது தந்தையின் விபரங்கள் மட்டுமே பதியப்பட்டதாக ரஜனி நினைவுபடுத்தினார்.

''[illegible] அதிக பிரியமாக இருந்தபடியால் பலமுறை நானும் அவர்களுடன் நகரத்திற்கு சென்றிருக்கிறேன். அவ்வாறு, இறுதியாக நகரத்திற்கு சென்ற பயணத்தின்போது அவர்கள் ஒரு இடத்தில் லொறியை நிறுத்திவிட்டு எனக்கு ஐஸ்கிரீமும் வாங்கிக்கொடுத்துவிட்டு திரும்பி வரும்வரை லொறியிலேயே இருக்கச் சொன்னார்கள்.

அவ்வாறு திரும்பிவந்தபோது, எனது தந்தை மதுபானம் அருந்தி போதையில் நிற்கக்கூட முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தார். ஆனால் அந்த இரு மனிதர்களோ சாதாரணமாகத்தான் தென்பட்டனர். எனது தந்தையை லொறியில் ஏற்றியதும் அந்த மனிதரில் ஒருவர் எனது தந்தையின் சட்டைப்பையில் இருந்து ஏதோ ஒரு பொருளை எடுப்பதை நான் அவதானித்தேன். ஆனால், அது என்னவென்று கண்டறியுமளவுக்கு எனக்கு அப்போது விவரம் போதவில்லை. பின்பு அவர்கள் என்னையும் என் அப்பாவையும் வீட்டில் இறக்கிவிட்டு, லொறியை செலுத்திக் கொண்டு சென்றுவிட்டனர். அதற்குப் பின் நாங்கள் அவர்களை காணவோ அவர்களிடமிருந்து எதுவும் கேள்விப்படவோ இல்லை'' என்றவாறு கலங்கிய கண்களுடன் தனது தந்தையுடன் கழித்த கடைசி வாரத்தை நினைவுக்குக் கொண்டு வந்தார் ரஜனி.

''ஒரு வாரத்திற்கு பின்னர் தலதா மாளிகையில் ஒரு குண்டுவெடிப்பு இடம் பெற்றது. குற்றப்புலனாய்வுத் துறையிலிருந்து அதிகாரிகள் என் வீட்டிற்கு வந்து அப்பாவை வெளியே அழைக்கும்படி கூறினார்கள். அவர் வந்ததும் அவரிடம் வாகன ஓட்டுனர் அனுமதிப் பத்திரத்தைக் கேட்டார்கள். அவர் வீட்டினுள் சென்று பின்னர் வெளியே வந்து வழக்கமாக வைக்கும் இடத்தில் அதனைக் காணவில்லை எனக் கூறினார். ஓட்டுனர் பத்திரம் காணாமல்போனதைக் குறித்து ஏன் பொலிஸில் முறைப்பாடு செய்யவில்லை எனக் கேட்டதற்கு, அவர்கள் விசாரிக்கும்வரை அது காணாமல் போயிருப்பதைக் குறித்து தான் அறிந்திருக்கவில்லை என அவர் பதிலளித்தார்.

விகாரையின் சுற்றுப்புற வளாகத்தில் எனது தந்தையின் ஓட்டுனர் அனுமதிப் பத்திரம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாகவும் அதுகுறித்து விசாரித்துவிட்டு திருப்பி அனுப்புவதாகவும் கூறிவிட்டு அவரை அழைத்துச் சென்றார்கள். பின்பு அவரை கைவிலங்கு பூட்டப்பட்ட நிலையிலேயே வீட்டுக்கு திரும்பக் கொண்டுவந்து வீடு முழுவதும் சோதனை செய்தார்கள். அதற்குப் பின்னர் அவரை கொண்டு சென்றுவிட்டார்கள். ஆறு மாதங்களுக்கு அவர் எங்கிருக்கிறாரென்று எங்களுக்குத் தெரியவில்லை. அவரிடமிருந்து எந்தத் தகவலும் வரவில்லை. அவர் உயிரோடு இருக்கிறாரா இல்லையா என எதுவும் அறியாத கவலைக்கிடமான நிலையில் இருந்தோம்'' என அவர் கூறினார்.

கடைசியாக கொழும்பிலுள்ள பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவில் இருப்பதாக, நன்கறிந்த ஒருவரினால் தெரிய வந்ததும், அவரைப் பார்க்கச் சென்றோம். எங்களைக் கண்டதும் அப்பா அழத்தொடங்கினார். ''விகாரையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பை நான்தான் திட்டமிட்டதாக அவர்கள் கூறுகிறார்கள்'' என்றார். 21 தடவைகள் உடற்பாகங்களுக்கு சூடுகாட்டியதாகவும், மேலிருந்து கீழே தொங்கவிட்டு அடித்துத் துன்புறுத்தி நகங்களைக்கூட கழற்றியதாகவும், பல வருடங்கள் கழித்து எனக்குக் கூறினார். நான் சிறுபிள்ளையாக இருந்தமையினால் எனக்கு தாக்கம் ஏற்படக் கூடாதென்று, சமீபத்திலேயே அப்பா இவையெல்லாவற்றையும் என்னிடம் கூறினார். தான் நிரபராதியென்று கெஞ்சியும் பலனின்றியே, நோவை மேலும் சகிக்க இயலாமல் வாக்குமூலத்தில் கையொப்பமிடுவதற்கு உடன்பட்டிருக்கிறார்.

''ஆங் போம்ப கஹபு எகாகே லமய்யனவா'' (குண்டுவைத்தவரின் பிள்ளைகள் செல்கிறார்கள் பாருங்கள்) என்கிற அக்கம் பக்கத்தினரின் வசைச்சொற்களுக்கு ஆளாக நேர்ந்ததினால், ரஜனியும் அவரது சகோதரியும் தினமும் பாடசாலைக்கு நடந்து செல்வதற்குப் பயப்படுவார்கள். அவர்களது தாயார் 10 வருடங்களுக்கு முன்பே இறந்து போயிருந்தபடியினால் அவர்களிருவரையும் பராமரிப்பதற்கு எவருமிருக்கவில்லை. அவர்களின் உறவினரொருவருடன் வசித்து வந்தபோதிலும், அவருக்கும் மூன்று பிள்ளைகள் இருந்தமையினால் அன்றாடத் தேவைகளை பூர்த்திசெய்வது கடினமாக இருந்தது.

''ஒரு நிரபராதியை சிறையிலடைக்கும் இந்த உலகத்தில், வேறு எதனை எதிர்ப்பார்க்க முடியும்? சட்டம் ஒரு நிரபராதியை தண்டித்தால், பின்னர் குற்றவாளியை யார் தண்டிப்பார்?'' என இயலாமையுடன் தொடர்ந்தார் ரஜனி.

கொடிய சித்திரவதையினால் பாதிக்கப்பட்ட இன்னொரு நபர், யோகேஸ். 8 வருடங்கள் தகுந்த காரணமில்லாமல் தடுத்துவைக்கப்பட்டு பின்னர் 2016 இல் குற்றச்சாட்டுக்கள் நீக்கப்பட்டு விடுவிக்கப்பட்டவர். அவரும் தோட்டங்களிலிருந்து வந்தவர், 2008 இல் கைதானவர். ஆனால், 2012 இலேயே அவர் மீதான குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டது. கண்டி பொலிஸ் நிலையத்தில் மூன்று மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த யோகேஸ் கூறுவதாவது, தாம் பயங்கரவாதப் புலனாய்வுப் பிரிவினரால் கிட்டத்தட்ட ஒவ்வொரு இரவும், கடுமையான சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும் (உயர்வலு மின்கம்பிகளினால் மின்சாரம் பாய்ச்சப்பட்டதாகவும்), அத்துடன் பொய்யான வாக்குமூலத்தைப் பெறுவதற்காக வெற்றுக் காகிதங்களில் கையொப்பமிடும்படி வற்புறுத்தப்பட்டதாகவும் தெரிவித்தார்.

பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டதாகவும் ஆயுதங்களை வைத்திருந்ததாகவும் யோகேஸ் மீது குற்றம் சுமத்தும் வகையில் இந்த வெற்றுக் காகிதங்கள் பின்னர் நிரப்பப்பட்டன. ஒரு சந்தர்ப்பத்தில் 15-20 நிமிட மின் அதிர்ச்சியினால் அவருக்கு இரத்தம் கசியத் தொடங்கியதும் சிறைச்சாலை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டார். பொது வைத்தியசாலையில் தன்னை அனுமதிக்கும்படி கேட்டுக் கொண்டபோதும் கூட சிறைச்சாலை அதிகாரிகளினால் அவரது வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டது.

இறுதியாக, சட்டத்தரணிகளுடன் பேசுவதற்கு அனுமதிக்கப்பட்டதும் தனக்கு நடந்த தாக்குதல்களையும் மின்அதிர்ச்சி வழங்கப்பட்டது குறித்தும் தெரிவித்தார். சட்டத்தரணிகள் அவரது உடலில் இருக்கும் தடயங்களையும் விரல் முறிவடைந்து இரத்தம் கசிந்திருப்பதையும் அவதானித்தார்கள்.

### அவர்களின் விடுதலைக்கான அயராத உழைப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்கள் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் இருவகையானவை: முதலில் தடுப்புக்காவல் உள்ளடக்கும் சித்திரவதையின் பயங்கரம். அடுத்து, விடுவிக்கப்பட்டதன் பின்னர் இயல்பு வாழ்க்கைக்கு திரும்புவதிலுள்ள போராட்டம்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களுக்காகவே பணிபுரியும், கண்டி மனித உரிமைகள் அலுவலகத்தின் சட்ட ஒருங்கிணைப்பாளர் லூசிலி அபேகோன் பொதுவாக நிலைமைகள் எவ்வாறு செயற்படுகிறது என விளக்குகிறார். உதாரணத்திற்கு 2007 இல், திகன பகுதியில் இடம்பெற்ற கிளைமோர் தாக்குதலைத் தொடர்ந்து பொலிஸார் ஒரு கிராமத்தில் தமிழ் இளைஞர்களை கைதுசெய்தனர். (பக்.06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வேடிக்கை தினம்

ஐரோப்பாவின் மறுமலர்ச்சியைத் தொடர்ந்து ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியின் விளைவாக தொழில்துறையில் வேகமான மாற்றங்கள் ஏற்பட்டு வந்த வேளையிலேயே 1886 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதியில் தமது வேலை நேரம் வரையறுக்கப்பட வேண்டும் என்று தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கினார்கள். இதன் தொடராக 1890 மே முதலாம் திகதியிலிருந்து இத்தினம் தொழிலாளர் தினமாக உலகம் முழுவதும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

உலக நாடுகளில் பல இடங்களில் நடைபெற்ற மே தின ஊர்வலங்களில் தொழிலாளர்களின் உரிமைகளை வேண்டி கோஷங்கள் எழுப்பப்பட்டமை நூற்றாண்டு கடந்தும் தொழிலாளரது உரிமைகள் அவர்களுக்கு பூரணமாக வழங்கப்படாமையை எடுத்துக் காட்டியது. இது ஒரு தொடர்ச்சியானதும் நிலையானதுமான போராட்டம் என்பதனை இந்தச் செய்திகள் உலகுக்கு உணர்த்தின.

ஆனால் இலங்கையில் தொழிலாளர் தினம் நகைப்புக்கிடமாக அரசியலால் காவு கொள்ளப்பட்ட ஒரு மேடையாகவே தொடர்ந்தும் நடந்து முடிகிறது. அரசாங்க நிறுவனங்கள் அனைத்திலும் தொழிலாளர்களது உரிமைகளைப் பேணுவதற்கான தொழிற்சங்கங்கள் இயங்கி வருகின்றன. இவைகளில் மிகப் பெரும்பாலானவை ஏதோவொரு அரசியல் கட்சிக்கு ஜால்ரா போடுபவைகளாகவே இருந்து வருகின்றன. ஒரே நிறுவனத்தின் தொழிலாளர்கள் வெவ்வேறு கட்சிகளின் தொழிற்சங்கங்களாகப் பிரிந்து தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுமளவுக்கு தொழிலாளர் போராட்டங்கள் அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளன.

இனிவரும் காலங்களில் நிரந்தர ஊழியர் என்ற ஒன்று இருக்குமோ எனும் அளவுக்கு ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர்கள் பெருகி வருகின்றனர். இந்த மேன்பவர் ஆதிக்கத்துக்கு எதிராக டெலிகொம் மேன்பவர் ஊழியர்கள் தொடர்ச்சியான போராட்டமொன்றை நடத்தினார்கள். அதேபோல அண்மையில் இடம் பெற்ற பெற்றோலியம் ஊழியர்களின் போராட்டமும் நாட்டில் பாரிய பாதிப்பைச் செலுத்தியது. ரயில் எஞ்சின் சாரதிகள் தொழிற்சங்கப் போராட்டம் நடத்தப் போவதாக எச்சரித்திருந்தார்கள். இவை அனைத்தையும் விட இந்தியாவுடன் மேற்கொள்ளப்படவுள்ள எட்கா ஒப்பந்தத்தினால் இலங்கைத் தொழிற்சந்தையில் பெரும் தாக்கம் ஏற்படப் போவதாகவும் அனேகமான இலங்கைத் தொழிலாளர்கள் தொழிலற்றவர்களாக மாறப் போவதாகவும் ஜேவீபி உட்பட்ட ஏராளமான தொழிற்சங்கங்கள் போராட்டம் நடத்தின. ஊழியர் படையில் சேர வேண்டும் என்பதற்காக வேலை இல்லாப்பட்டதாரிகளும் தொழில் வேண்டி போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்தத் தொழிற்சங்கப் போராட்டங்கள் எதற்கும் ஆளும் இரு கட்சிகளும் தீர்க்கமான எந்தத் தீர்வையும் வழங்கவில்லை. இந்நிலையில் தொழிலாளர் தினத்தில் இந்த எந்தத் தொழிற்சங்கமும் தொழிலாளர்களின் இந்த உரிமைகளுக்காக குரல் கொடுக்காமல் இருந்தது நகைப்புக்கிடமானது. மாற்றமாக ஆளுகின்ற இரண்டு கட்சிகளுக்கும் எதிராக தொழிற்சங்கப் போராட்டம் நடத்தியவர்கள் எல்லாம் இரண்டு கட்சிகளினதும் மே தினக் கூட்டங்களில் கலந்து கொண்டு கட்சிகளுக்காக கூப்பாடு போட்டது அதனிலும் இனிமையான வேடிக்கை. மே தினத்தன்று ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் வெளியிட்ட பிரகடனங்களில் கூட தொழிலாளர்களின் இந்தப் பிரச்சினைகளுக்கு எந்தத் தீர்வுகளும் உள்ளடக்கப்படவில்லை என்பது வேதனையான வேடிக்கை. இப்படி ஒரு வேடிக்கை தினமாக இலங்கையில் மேதினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

தொழிலாளர்கள் ஒரு சக்தியாக பிரவாகமெடுக்காமல் அரசியற் கட்சிகளின் பின்னால் சோரம் போகும் காலமெல்லாம் தொழிலாளர்கள் கோமாளிகளாவே இருந்து விடப் போகிறார்கள். தொழிலாளர்கள் காலத்துக் காலம் முன்னெடுக்கின்ற தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு இதனால் மக்கள் மத்தியில் பெறுமானம் அற்றுப் போவதற்கு வாய்ப்பிருக்கிறது. உழைக்கும் வர்க்கமே நாட்டின் முதுகெலும்பு என எல்லா மேதினச் செய்திகளிலும் நாட்டுத் தலைவர்கள் செய்திகளை வெளியிடுகிறார்கள். இந்தப் பெருமையை காத்துக் கொள்வதற்கு தொழிலாளர் வர்க்கமே முன்வர வேண்டும். உழைக்கும் மக்கள் யாவரும் ஒருவர் பெற்ற மக்களே என ஒன்றிணைந்து குரல் கொடுக்கும் போது தான் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

இந்த வகையில் அடுத்த மேதினத்தை அரசியற்கட்சிகளின் மேடையாக மாற்றாமல் தொழிலாளர்களின் தினமாக மாற்றுவது தொழிலாளர்களின் ஒற்றுமையிலேயே தங்கியிருக்கிறது.

## கடன் பொறியில் சிக்கியுள்ள இலங்கை:

# மீட்கும் போராட்டத்தைத் துரிதப்படுத்துவது அவசியம்

• பேராசிரியர் நிமல் சதரத்ன

கடன் தவணையையும் அதற்கான வட்டியையும் செலுத்துவது பாரதூரமான பிரச்சினையாக உருவாகும் அளவுக்கு இலங்கையின் வெளிநாட்டுக் கடன் சேர்மானம் தாக்குப் பிடிக்காத நிலையை எட்டியுள்ளது. குறிப்பாக கடந்த தசாப்த காலத்தில் அதிகரித்து, கடந்த காலம் முதல் சிறுகச் சிறுகச் சேர்ந்து, இன்று 47 பில்லியன் டொலர் அளவிலான வெளிநாட்டுக் கடனாக அது எகிறிக் காணப்படுகிறது. இக்கடன் தவணைகளையும் வட்டியையும் செலுத்துவதற்கு மீளவும் எமக்கு கடன்பெற வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இதனை கடன் பொறி என்பதாகவும் அடையாளபடுத்த முடிகிறது.

### கடனையும் வட்டியையும் செலுத்துதல்

கடன் சேவைச் செலவு என்பதாக அறிமுகப்படுத்தப்படுகின்ற, வருடாந்தக் கடன் மற்றும் வட்டித் தவணைக் கட்டணத்தின் அளவு, 2015 இல் 1.8 பில்லியன் டொலராகக் காணப்பட்டது. இத்தொகை கடந்த வருடமாகும் பொழுது 2.4 பில்லியன் டொலராக விருத்தியடைந்தது. இத்தொகை இவ்வருடத்தில் ஓரளவு குறைவைக் காண்பித்தாலும் கிட்டிய எதிர்காலத்தில் சுமக்க முடியாத வகையில் அது அதிகரிப்பதற்கான சாத்தியம் உள்ளது. உதாரணமாக, 2018-19 காலப்பகுதியாகும் பொழுது அத்தொகை 4 பில்லியன் டொலர் வரையில் அதிகரிப்பதற்கான சாத்தியம் உள்ளது எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

பெறப்பட்டுள்ள கடன் தொகையில் அதிகளவான பங்கு, அதிக செலவுமிக்க, பிரயோசனமளிக்காத, உற்பத்திகளை மேம்படுத்தாத உட்கட்டுமான திட்டங்களுக்குப் பயன்படுத்தியிருப்பது, கடனும் வட்டித் தவணைகளும் இவ்வளவு விசாலமாக அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது.

### வெளிநாட்டு கடன்தொகையின் அதிகரிப்பு

2000-2009 இடைப்பட்ட காலப்பகுதியில் வெளிநாட்டு கடன்தொகை வெகுவாக அதிகரித்துள்ளது. 2000 இல் 9 பில்லியன் டொலராகக் காணப்பட்ட வெளிநாட்டுக் கடன் 2009 ஆம் ஆண்டாகும் பொழுது 18.6 பில்லியன் டொலராக அதிகரித்துள்ளது. அதன் பின்னர் கடந்த ஐந்து வருடத்திற்குள் அத்தொகை இரண்டு மடங்கினையும் விட அதிகரித்ததோடு, 2014 ஆம் ஆண்டாகும் பொழுது 42.9 பில்லியன் டொலராக எகிறிக் காணப்பட்டது. அதனை மொத்த தேசிய உற்பத்தியின் சதவீதமாக நோக்கினால் 53.6 வீதமாகும்.

புதிய அரசாங்கத்தின் கீழும் கடந்த இரண்டு வருட காலத்தில் வெளிநாட்டு கடன் தொகை தொடர்ந்தேர்ச்சியான அதிகரிப்பைக் காட்டியுள்ளது. 2015 ஆம் ஆண்டு முடிவடையும் பொழுது அத்தொகை 44.8 பில்லியன் டொலராக மொத்த தேசிய உற்பத்தியில் 54.4 சதவீதமாக விருத்தியடைந்திருந்ததுடன், 2016 ஜூலை மாதமாகும் பொழுது அது 47.4 பில்லியனாக அதிகரித்திருந்தது. எவ்வாறிருப்பினும், 2016 ஜனவரி இறுதிப் பகுதியாகும் பொழுது இத்தொகை 46.6 பில்லியன் டொலராக சிறியளவில் வீழ்ச்சி கண்டிருந்தது. தற்போதைய வெளிநாட்டுக் கடன் தொகை மொத்த தேசிய உற்பத்தியில் 55 சதவீதம் என்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

கடந்த இரு வருட காலப்பகுதியில் எமது கடன் தொகை அதிகரித்திருப்பதற்கான காரணம், நிலுவையில் காணப்பட்ட கடனையும் வட்டியையும் செலுத்துவதற்கு மீளவும் கடன் பெற வேண்டியதன் தேவை மேலெழுந்ததாகும். அவ்வகையில் அதிகதிகம் கடன் பெறுவதற்கு அடிப்படையாய் அமைந்த மற்றுமொரு காரணியாக தேசிய அரசாங்கம் முன்னெடுத்த பொருளாதார கொள்கையைக் குறிப்பிடலாம். அரசின் நிதிக் கொள்கை காரணமாக வெளிநாட்டு வர்த்தக மீதியின் குறைவு அதிகரித்தமையினாலும் பிரச்சினை இன்னும் உக்கிரமடைந்தது.

### வெளிநாட்டு கடன் பெறுவதிலுள்ள நன்மைகள்

[illegible]
தேவையான தேசிய சேமிப்பு போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில் அக்குறைபாட்டை நிவர்த்திப்பதற்கு வெளிநாட்டுக் கடன்கள் துணைபுரிகின்றன. அத்துடன் நிலைபேறான பொருளாதார அபிவிருத்திக்கு உந்துசக்தியாக அமையக் கூடிய பெரியளவிலான உட்கட்டுமான திட்டங்களைக் கட்டியெழுப்புவதற்கும் அவ்வாறான கடன் பிரயோசனமாக அமைகின்றது.

நாட்டின் அபிவிருத்திக்குத் தேவையான வெளிநாட்டு வளம் குறையும் சந்தர்ப்பத்தில் வெளிநாட்டுக் கடன் பெறுவது அதற்கான தீர்வாக அமைகின்றது. அத்துடன், செலுத்துகை மிகுதியிலுள்ள குறையை தற்காலிகமாக போக்குவதற்கும் வெளிநாட்டுக் கடன் அவசியப்படுகின்றது.

சுருக்கமாக கூறினால், பொருளாதாரத்தை உயர்நிலைக்கு கொண்டு வரும் பொருளாதார மேம்பாட்டின் உயர் மட்டத்தை அடைவதற்கு ஒரு உந்து சக்தியாக தேசிய வளங்கள் போதிய அளவில் காணப்படாத பொழுது ஒரு நாட்டிற்கு வெளிநாட்டுக் கடன் அவசியப்படுகின்றது.

எவ்வாறிருப்பினும், எவ்வளவு தொகை கடனாகப் பெறப்படுகிறது என்பதையும்; அதற்காக வேண்டி செலுத்தப்பட வேண்டிய வட்டி விகிதம் எவ்வளவு என்பதையும், எத்தகைய நிபந்தனையின் கீழ் கடன் பெறப்படுகிறது என்பதையும், பெறுகின்ற கடன் எவ்வாறான விடயத்திற்கு பயன்படுத்தப்படுகிறது என்பதையும் கவனத்திற் கொண்டு வெளிநாட்டுக் கடன் பெறுவது தொடர்பில் வரையறைகளை விதித்துக்கொள்ள வேண்டும். திரும்பவும் அந்தக் கடனையும் வட்டித் தொகையையும் செலுத்த முடியுமான விதத்தில் அக்கடன் பெறப்பட வேண்டும் என்பதே அதன் கருத்தாக உள்ளது.

அதன்படி, பெறப்படுகின்ற வெளிநாட்டுக் கடன், ஒரு சந்தர்ப்பத்தில் நாட்டின் நீண்ட கால பொருளாதார ஸ்திரப்பாட்டிற்கும் அபிவிருத்திக்கும் நன்மை பயக்கும் அதே வேளையில் மற்றுமொரு சந்தர்ப்பத்தில் அது பாதிப்பாகவும் அமைகிறது. இதன் காரணமாக, நாட்டின் பொருளாதார ஸ்திரப்பாட்டிற்கும் அபிவிருத்திக்கும் கடனையும் வட்டியையும் திருப்பிச் செலுத்தும் இயலுமையை வளர்த்துக்கொள்வது அத்தியாவசியமாகின்றது.

குறிப்பாக, ஏற்றுமதி-இறக்குமதி வர்த்தகத்தின் மீது தங்கி நிற்கும் பொருளாதாரம் கடன் பொறியில் அகப்படாமல் இருப்பதற்கு அதற்கான விடயங்களை கவனத்திற் கொள்ள வேண்டும். இருந்த போதிலும், தற்பொழுது நாம் முகம்கொடுத்துள்ள கடன் பிரச்சினைக்கு, கடந்த ஆட்சியில் இருந்த அரசியல் தலைமைகளினதும் சமகால அரசியல் தலைமைகளினதும் பொருளாதார முகாமைத்துவமின்மையே காரணமாய் அமைந்துள்ளது.

### வெளிநாட்டு நிதியை பயன்படுத்துதல்

பெறுகின்ற வெளிநாட்டுக் கடனை பயன்படுத்துவது எவ்வாறு என்பது தொடர்பிலும் பெறுகின்ற கடன் தொகையின் வட்டி விகிதங்கள் எத்தகையது என்பது தொடர்பிலும் கடனை திருப்பிச் செலுத்தும் கால இடைவெளி எவ்வளவு என்பது தொடர்பிலுமே வெளிநாட்டுக் கடன் பிரச்சினையின் மைய இயல்பு தீர்மானிக்கப்படுகிறது.

கடனை திருப்பிச் செலுத்துவது நாட்டின் பொருளாதாரத்திற்கு சுமையாக அமையாமல் இருப்பதற்கு மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும். அண்மைக்காலமாக நாட்டின் வெளிநாட்டுக் கடன் சுமை தாங்கொணா அளவில் இருப்பதற்கான காரணம், பெற்றுக் கொண்ட கடனை செலுத்தும் அளவுக்கு வழங்கீடுகளை உற்பத்தி செய்யாத பெரியளவிலான உட்கட்டுமான அபிவிருத்தி திட்டங்களுக்கு அக்கடன் பயன்படுத்தப்பட்டிருப்பதாகும். வெளிநாட்டு வர்த்தக மிகுதியில் குறைவு ஏற்படும் அளவுக்கு நிதிக்கொள்கையை கடைபிடித்திருப்பது அதனை இன்னும் உக்கிரப்படுத்தியுள்ளது.

### வெளிநாட்டு கடனை பராமரித்துக் கொள்ள முடியாத பிரச்சினை

இலங்கையிடம் பராமரித்துக்கொள்ள முடியுமான வெளிநாட்டுக் கடன் உள்ளதா? உலக வங்கியும் சர்வதேச நாணய நிதியமும் 'பராமரிக்க முடியுமான வெளிநாட்டு கடன்' என்பதாக பின்வரும் விடயத்தை வரைவிலக்கணப்படுத்தியுள்ளது ''நாட்டின் நிகழ்கால மற்றும் கடந்தகால வெளிநாட்டுக் கடன் தொகையை காலம் தாழ்த்தாமலும் வேறு விதத்தில் கைவிட்டுச் செல்லாமலும் தொடர்ந்தேர்ச்சியாக ஒன்று சேர்வதற்கு இடமளிக்காமலும் நாட்டின் அபிவிருத்திக்கு பாதிப்பு ஏற்படுத்திக் கொள்ளாமலும் குறிப்பிட்ட கடன் மற்றும் வட்டித் தவணைகளை முழுமையாக செலுத்துவதற்கு இயலுமை இருத்தல்'' இவ்வரைவிலக்கணத்தின் பிரகாரம், இலங்கையின் கடன் சுமையானது தாங்கிக் கொள்ளும் முகமாக இல்லை. தெளிவாகவே நாம் கடன் பொறியில் சிக்கியுள்ளோம்.

### தீரமானமும் பரிந்துரைகளும்

47 பில்லியன் டொலராகவும் மொத்த தேசிய உற்பத்தியில் 55 சதவீதமாகவும் உள்ள இலங்கையின் வெளிநாட்டுக் கடனை வருடந்தோறும் பகுதி பகுதியாகவும் வட்டி அடிப்படையிலும் செலுத்துவதற்கு மீளவும் கடன் பெற வேண்டியேற்பட்டுள்ளது. இவ்வாறு வருடந்தோறும் இன்னுமின்னும் கடன் பெற நேர்ந்திருப்பதன் மூலம் நிரூபணமாவது என்னவெனில் நாம் கடன் பொறியில் சிக்குண்டுள்ளோம் என்பதாகும்.

மொத்த தேசிய உற்பத்தியுடன் ஒப்பிடுகையில் எமது வெளிநாட்டுக் கடன் தொகையின் சதவீதத்தை ஏனைய நாடுக்ளின் சதவீதத்துடன் ஒப்பிடுவதில் அர்த்தமில்லை. ஏனெனில், பெரும்பாலான நாடுகளுக்கு எமது நட்டைப் போன்று பெரியளவிலான செலுத்துகை மிகுதிப் பிரச்சினைகள் இல்லை. பெற்றுக்கொண்ட கடனை திருப்பிச் செலுத்த முடியாத வகையில் பயன்படுத்தியிருப்பதே எமது பிரச்சினையாக உள்ளது.

கடன் செலுத்தும் தொகை இவ்வருடத்தில் குறைந்திருப்பதனை, 2018-2019 வருடங்களில் கடனை செலுத்துவதற்கான (பக்.14)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயக்கல்லி மலையடிவாரத்தில் மீண்டெழும் இனவாதத்தின் இரண்டாம் பாகம்



தம்புள்ளை பள்ளிவாயலில் தொடங்கிய முஸ்லிம் விரோதப் பிரச்சாரமும் இனவாத செயற்பாடுகளும் வில்பத்துவை ஊடறுத்து மாயக்கல்லி மலையை வந்தடைந்துள்ளது. கடந்த ஐந்தாண்டு கால இடைவெளியில் முஸ்லிம் கடைத் தொகுதிகள், புனித பள்ளி வாயல்கள், அறபு மத்ரஸாக்கள், இஸ்லாமிய நிறுவனங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நேரடியான வன்முறைத் தாக்குதல்கள் உள்ளிட்டு வில்பத்து காணி அபகரிப்பு வரை தொடர்ச்சியான இன அழிப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்து வருகின்றன. மஹிந்தவின் ஆட்சிக் காலத்தில் ஆரம்பித்த முஸ்லிம் விரோத தாக்குதல்கள் எந்த முன்னேற்றமுமின்றித் தொடர்கின்றன.

சமீபத்திய நிகழ்வுகளில் இரண்டு மிகவும் உணர்ச்சிகரமானவை. அதில் முதலாவது வில்பத்து விவகாரம். வட மாகாண முஸ்லிம்களின் பூர்வீக நிலங்கள் இலட்சக்கணக்கான ஏக்கர்கள் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப் பட்டுள்ளன. இது எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாத, பச்சையான இனவாத செயற்பாடு என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. வில்பத்து விவகாரத்தில் ஜனாதிபதி எடுத்த நிலைப்பாடும் மிகுந்த சந்தேகத்தைக் கிளறுகிறது. மறிச்சிக்கட்டிக்கும் வில்பத்துவுக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை ஏற்பதற்கு ஜனாதிபதி மறுக்கின்றார்.



றவூப் ஸெய்ன்

ஒட்டுமொத்த இலங்கையிலும் தமது சனத்தொகை விகிதாசாரத்தை விட மிகக் குறைந்தளவு நிலங்களைக் கொண்டிருக்கும் ஒரே சமூகம் முஸ்லிம்களே. புள்ளிவிபரங்கள் இதனை நிறுவுகின்றன. இதேவேளை, 30 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையில் அகதிகளாக வாழும் ஒரே சமூகமும் முஸ்லிம்களே. பாசிஸப் புலிகளால் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் போர் முடிந்த கையோடு அங்கு குடியமர்த்தப்பட்டிருக்க வேண்டும். போர் முடிந்து எட்டு ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், அவர்களை மீள்குடியேற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்புக் கொண்ட அரசாங்கம், அவர்களது காணிகளையே சுவீகரித்து நாதியற்ற அபலைகளாய் நடுத்தெருவில் நிறுத்தியிருப்பது எவ்வளவு பெரிய அநீதி.

இதே காலப் பகுதியளவு தமிழர்கள் கூட உள்நாட்டில் அகதிகளாய் இருக்கவில்லை. எதிர்வரும் ரமழானுக்கு முன்னர் முஸ்லிம்களைக் குடியேற்றி விடுவோம் என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த 2010 ஆம் ஆண்டு கண்டியில் நடந்த கூட்டமொன்றில் தெரிவித்திருந்தார். 2015 இல் மீள்குடியேற்றப் பிரதியமைச்சராகப் பதவியேற்ற ஹிஸ்புல்லாஹ் 2017 டிசம்பருக்குள் வடக்கு முஸ்லிம்கள் மீள்குடியேற்றப்பட்டு விடுவார்கள் என்றார். அவரது வாக்குறுதி காற்றில் பறப்பதற்கு இன்னும் 7 மாதங்களே எஞ்சியுள்ளன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ கள்ள மௌனம் காக்கின்றது. வடக்கு முதல்வர் விக்னேஷ்வரன் முஸ்லிம் விரோதக் கருத்துக்களைப் பரப்பி வருகிறார். அரசாங்கத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் முஸ்லிம் அமைச்சர்களோ கதிரைகளைக் காப்பாற்றும் அவசரத்தில் ஒருமித்துக் குரல் எழுப்புவதற்கும் அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கும் பின்நிற்கின்றனர்.

இரண்டாவது முக்கிய பிரச்சினை மாயக்கல்லி மலையில் திடீரென முளைத்த புத்தர் சிலை. இப்போது அவ்விடத்தில் விகாரை அமைக்கும் வேலையில் பிக்குகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இது இப்பிரதேசத்தில் பெரும் இனப் பதட்டத்தை உருவாக்கி வருகின்றது.

## நல்லாட்சி அரசியல்

எந்தவொரு சிங்கள பௌத்தரும் இல்லாத, தமிழ்-முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற இப்பிரதேசத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான காணியை சுவீகரித்து, பௌத்த விகாரை அமைப்பதென்பது இனங்களுக்கிடையிலான பதட்டத்தையும் வன்முறைகளையுமே தூண்டக் கூடியது. இறக்காமத்தைச் சேர்ந்த முஸ்லிம்களின் நெற்காணிகள், சேனைக் காணிகள் மற்றும் குடியிருப்புப் பகுதிகளை ஒட்டியதாகவே இந்த மாயக்கல்லி மலைப் பிரதேசம் அமைந்துள்ளது.

ஒரு காலத்தில் முஸ்லிம்களுக்குப் பணிவிடை செய்வதற்காக ஊருக்கு வந்த தமிழ் தொழில்சாதியினருக்கு முஸ்லிம்கள் இப்பிரதேசத்தில் குடியமர இடம் வழங்கினர். அவர்கள் இன்று ஓரளவு பெருகி, மாணிக்கமடு எனும் ஒரு குக்கிராமம் உருவாகியுள்ளது. அங்கு தொழில்நிலைச் சாதியினரைக் கொண்ட தமிழர்கள் வாழ்கின்றனர். இவ்வாறு முஸ்லிம்-தமிழ் மக்களை கொண்டுள்ள இப்பிரதேசம் மிக ஐதான குடியிருப்புக்களையே கொண்டுள்ளது. தரிசு நிலங்கள் குறிப்பிடத்தக்களவு காணப்படுகின்றது. வயலும் வயல் சார்ந்த நிலங்களும், காடு-காடு சார்ந்த நிலங்களும் ஓரளவு காணப்படுகின்றது.

அம்பாறை நகரிலிருந்தும் கல்மடுவ, மூவாங்கல்ல, இங்கினியாகல, தமன போன்ற சிங்களக் கிராமங்களிலிருந்தும் தீகவாபிக்குச் செல்லும் பௌத்தர்களுக்கு இப்பிரதேசத்தின் மீதும் மாயக்கல்லி மலை மீதும் ஒரு கண் நீண்டகாலமாக இருந்து வந்தது. அப்பிரதேசம் முழுவதும் முஸ்லிம்களின் வயல் நிலங்கள் சேனைப் பயிர் செய்கைக்கான காணிகளும் அதில் உள்ளடங்குகின்றது.

புத்தரின் சிலையை ஓர் உயர்ந்த மலையில் வைத்து விட்டனர் என்பதல்ல இங்குள்ள பிரச்சினை. அவரைப் பாதுகாப்பதற்கு ஒரு விகாரை நிறுவப்படப் போகின்றது. விகாரையையும் புத்தரையும் பாதுகாப்பதற்கு இராணுவக் காப்பரண்கள் உருவாக்கப்படப் போகின்றன. புத்தரை வணங்குவதற்கு பக்தர்கள் கூட்டமொன்று அங்கு குடியமர்த்தப்படப் போகின்றது. இவைதான் உண்மையான பிரச்சினைகள். பிரதேச முஸ்லிம்கள் பதற்றமடைவதற்கும் அஞ்சுவதற்குமான நியாயமான காரணங்கள்.

மட்டக்களப்பிலிருந்து அம்பாறை மாவட்டம் 1960 களில் பிரிக்கப்பட்டபோது சிங்களவர்களின் எண்ணிக்கை சில ஆயிரங்களாகவே இருந்தன. இலங்கையில் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அம்பாறை கரையோர மாவட்டத்தை சிங்கள மயமாக்குவதற்கு கடந்த 50 ஆண்டுகளில் பாரிய திட்டமிட்ட குடியேற்றக் காலனியம் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது.

காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, கேகாலை சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர். கல்லோயா திட்டத்தின் கீழ் இக்குடியேற்றங்கள் துரிதப்படுத்தப்பட்டன. இருக்கும் தரிசு நிலத்தில் ஒரு பகுதி மாவட்ட அதிபரினால் சிங்கள மக்களுக்கு ஒதுக்கப்படுகின்றது. அங்கு ஒரு சிங்களக் குடும்பம், நான்கு மிளகாய்ச் செடிகள், 2 கத்தரிக்காய் செடிகள், அருகில் ஒரு புத்தர் சிலை, பக்கத்தில் ஒரு இராணுவ முகாம். காலவோட்டத்தில் ஒரு சிங்களக் கிராமம். பின்னர் குறைந்த தொகை சிங்கள மக்களைக் கொண்ட பிரதேச சபை, பிரதேச செயலகம் என குடியேற்றங்கள் கனகச்சிதமாக நடந்து வந்தன. 50 ஆண்டுகால இந்த விஸ்தரிப்பு வாதம் இன்று இம்மாவட்டத்தை முழுமையாகவே விழுங்கி விட்டது.

ஆக, மாயக்கல்லி மலையடி விவகாரமும் வில்பத்து விவகாரமும் உள்ளடக்கத்திலும் இயல்பிலும் ஒன்றுதான். ஆக்கிரமிப்பு சக்திகளின் உள்நோக்கமும் ஒன்றுதான். இன்னொருவரின் சொத்தை அபகரிப்பது ஆகாது என்பது புத்தரின் அடிப்படைப் போதனை. ஆனால், அரச மரம் முளைக்கும் இடங்களிலெல்லாம் அரசின் அதிகார பலம் செயல்படுகின்றது. சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் அனைத்து நிறுவனங்களும் இதற்குச் சோரம் போகின்றன.

ஏற்கனவே அம்பாறை-அக்கரைப்பற்று வீதியிலுள்ள முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலங் கள் இனவாதிகளால் சூறையாடப்பட்டுள்ளன. புத்தர் சிலை முளைக்கின்றது என்பதல்ல இங்குள்ள பிரச்சினை. நீண்டகாலத்தில் முஸ்லிம்களின் காணிகள் நில புலங்கள் சூறையாடப்படுவதற்கான தொடக்க முயற்சி இது என்பதுதான் பிரச்சினை.

மஹிந்த ஆட்சியில் அரங்கேறிய இனவாதத்திற்கும் இன்றைய இனவாதத்திற்கும் இடையில் உள்ள வேறுபாடு தெளிவானது. இப்போது இனவாதம் சட்டபூர்வமானது. அனைத்து அரச நிறுவனங்களினதும் ஆதரவுடன் கூடியது. சில அமைச்சுக்கள் அவற்றுக்குப் பின்னால் உள்ளன. இனவாத சக்திகள் சட்டபூர்வமாகவே முஸ்லிம்களின் நிலங்களை ஆக்கிரமிப்பதற்கு அரச இயந்திரம் பயன்படுத்தப்படுகின்றது.

தேசிய தொல்பொருளியல் திணைக்கள அதிகாரிகள் அரசியல் மயமாக்கப்பட்டுள்ளனர். இனவாதிகளின் தாளலயத்திற்கு அவர்கள் ஆட்டம் போடுகின்றனர். கிழக்கில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களிலேயே தொல்பொருள் சான்றுகள் உள்ளடங்கியிருப்பதாக இப்போதுதான் திணைக்களம் அறிவிப்பது வேடிக்கையானது. மாயக்கல்லி மலையடிவாரத்தில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான இரண்டரை ஏக்கர் காணியை விகாரைக்காக சுவீகரித்தல் தொடர்பான கூட்டம் அம்பாறை மாவட்ட செயலகத்திலேயே நடந்துள்ளது. இதில் இறக்காமம் பிரதேச செயலாளர், அம்பாறை மாவட்ட அதிபர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளோடு இனவாதத்தைப் பிரச்சாரம் செய்து வரும் பொதுபல சேன அங்கத்தவர்களும் ஒன்றுகூடியுள்ளனர்.

வில்பத்து விவகாரமும் ஜனாதிபதிக்கு முன் வைக்கப்பட்டு, அவரது கையொப்பத்துடன்தான் அரச வர்த்தமானி வெளியிடப்பட்டது. இதே வேளை, தேசிய நல்லிணக்கத்தைக் கட்டிக் காக்க வேண்டும் என்று இதே ஜனாதிபதி மே தின உரையில் எடுத்துரைக்கிறார். ஆக, இப்போதைய இனவாதம் சட்டபூர்வமானது. அரசியல் யாப்பக்கு உட்பட்டதாகவே தோன்றுகிறது. இத்தகைய கொதிப்பான ஒரு சூலில், அவசர அவசரமாக பயங்கரவாதத்திற்கு எதிரான சட்டமும் நிறைவேற்றப்படப் போகின்றது.

மீளவும் இங்கு நீதியமைச்சருக்கும் ஞானசாரருக்கும் இடையில் நடந்த திரைமறைவுப் பேச்சுவார்த்தையின் உள்ளடக்கம் என்ன என்ற சந்தேகம் எழுகின்றது. நிச்சயம் இவற்றுக்கிடையே ஒரு தவிர்க்க முடியாத தர்க்கம் இருக்கவே செய்கின்றது. சிறுபான்மைத் தமிழர்களை அடக்கி விட்டோம். இனி, அடக்கி வைக்கப்பட வேண்டியவர்கள் முஸ்லிம்கள் என்ற இறுமாப்பில் இனவாதிகள் செயல்படுகின்றனர்.

மஹிந்தவின் இனவாதத்தைத் தோற்கடிப்பதற்கே மைத்திரிக்கு முஸ்லிம்கள் ஆதரவளித்தனர். ஆனால், நிலைமை மாறவில்லை. தொடர்ந்தும் மஹிந்தவே ஜனாதிபதியாக இருப்பது போன்று தோன்றுகின்றது. மஹிந்த தான் ஓர் இனவாதியல்ல என்று பகிரங்கப்படுத்திக் கொண்டே மறைமுகமாக அதனை ஆதரித்தார். மைத்திரியோ மௌனமாக இருந்து கொண்டு சட்டப்படியான முறையில் இனவாதம் செயல்பட இடமளிக்கிறார்.

முஸ்லிம்கள் குறித்து தீர்க்கமான நிலைப்பாடு எதனையும் அவர் வெளிப்படுத்தவில்லை. முஸ்லிம் அரசியல்வாதிகளோ பல் இழித்துத் திரிகிறார்கள். இனவாதம் சட்டப்படி தேவையான நிறுவன ஆதரவுடன் ஆழ ஊடுருவி முஸ்லிம்களின் ஆணி வேர்களை அசைக்கத் தொடங்கியுள்ளது. அதற்கு இன்று சட்டத்தின் பாதுகாப்பும் அதிகாரத்தின் ஆசிர்வாதமும் கிடைத்துக் கொண்டிருக்கின்றது.

# இலங்கையில் தஞ்சமடையும் மியன்மார் முஸ்லிம் அகதிகள்

கடந்த முதலாம் திகதி வடக்குக் கடலில் பயணித்துக் கொண்டிருந்தபோது இலங்கை கடலோர காவல் படையினரின் கண்காணிப்புப் படகின் மூலம் கைதுசெய்யப்பட்ட 30 மியன்மார் முஸ்லிம் அகதிகள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை கடற்பரப்பில் வைத்து கைதுசெய்யப்பட்ட இவர்கள், காங்கேசன் துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட அவர்கள், விளக்கமறியலில் வைக்கப்பட்டள்ளனர்.

7 ஆண்கள், 7 பெண்கள் மற்றும் 16 சிறுவர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 15 நாட்களுக்கும் 4 மாதங்களுக்கும் உட்பட்ட இரு குழந்தைகளும் உள்ளடங்குகின்றனர். மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட இவர்கள், நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவுள்ளனர்.



படகு மூழ்கும் சூழ்நிலையில் இரு இந்தியர்களால் இவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

சிறிய படகொன்றில் இவர்கள் கடற் பயணத்தை ஆரம்பித்ததாகவும், அவர்களது படகு விபத்துக்குள்ளாகி மூழ்கும் நிலை ஏற்பட்டதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர். இதனையடுத்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்த இரு இந்தியர்கள் தமது படகு மூழ்குவதை அவதானித்து, தம்மைக் காப்பாற்றி [illegible] பின்னரே இலங்கை கடற்பரப்பிற்குள் நுழைந்ததாகவும் பொலிஸாரிடம் தெரிவித்தனர்.

மியன்மாரில் முஸ்லிம்களுக்கு எதிராக நடைபெற்று வரும் வன்முறைகளின் எதிரொலி இலங்கையிலும் கேட்கத் தொடங்கியுள்ளது. ஆங்சான்சூகியின் அரச படையினரால் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இனவெறித் தாக்குதல்களுக்கு இரையாகியுள்ள முஸ்லிம்கள் ஏற்கனவே பங்களாதேஷ், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு அகதிகளாக இடம்பெயர்ந்து வருகின்றனர்.

இப்போது 30 முஸ்லிம் அகதிகள் இலங்கை வந்துள்ளனர். இவர்களுக்கு எதிரான நீதிமன்ற வழக்குகளில் உதவுவதற்கு யாழ் கிளிநொச்சி மாவட்ட உலமா சபை முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகின்றது.

இதேவேளை, மீட்டெடுக்கப்பட்ட மியன்மார் அகதிகளை நாடுகடத்த வேண்டாம் என யாழ் நீதிமன்றத்தில் முஸ்லிம் சிவில் அமைப்புகளின் சார்பில் சட்டத்தரணிகள் தோன்றி கோரிக்கை விடுத்துள்ளனர். முஸ்லிம் சிவில் அமைப்புக்கள் சார்பில் சில சட்டத்தரணிகள் மூன்றாம் திகதி யாழ் நீதிமன்றத்தில் ஆஜராகினர்.

2015 இல் இலங்கை ஐ.நா.வுடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையின் படி ஐ.நா. அகதிகள் நிவாரண அமைப்பு இவ்வாறு அகதிகளாக தஞ்சம் கோருவோருக்கு பொருத்தமான நாடு ஒன்றை வழங்கும்வரை இவ்வாறு நாடு கடத்தக் கூடாது என்ற நிபந்தனை உள்ளது. அதன் படி இவர்களை நாடு கடத்தக் கூடாது என சிவில் அமைப்பு சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் கோரிக்கை விடுத்தனர்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




இந்தியாஸ் பாக்கிர் மாக்கார்

## முஸ்லிம் சமூக எழுச்சிக்காக அரும் தொண்டாற்றிய முன்னாள் சபாநாயகர் தேசமான்ய எம்.ஏ. பாக்கீர் மாக்கார்

முன்னாள் சபாநாயகரும் முதலாவது முஸ்லிம் ஆளுநரும், முன்னாள் அமைச்சருமான தேசமான்ய அல் ஹாஜ் எம்.ஏ. பாக்கீர் மாக்காரின் 100 ஆவது பிறந்த தினம் 2017.05.12ம் திகதி கொண்டாடப்படுகிறது.

முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் தேசமான்ய அல்ஹாஜ் எம்.ஏ. பாக்கீர் மாக்கார் அவர்கள் இந்த மண்ணில் வரலாறு படைத்த மூத்த முஸ்லிம் தலைவர்கள் பட்டியலில் முக்கிய இடத்தைப் பெற்றிருந்தார். பேருவளையில் பிறந்தாலும் அவர் நாட்டினதும் சமூகத்தினதும் பொதுச் சொத்தாகவே கருதப்பட்டார். அன்னாரது வாழ்க்கையையும், சேவையையும் அலசும்போது இந்த உண்மை புலனாகின்றது. இதனால் தான் ஆண்டுகள் பல கடந்தும் முஹம்மது அப்துல் பாக்கீர் மாக்கார் என்ற பெருந்தகை இன்றும் நினைவு கூரப்படுகின்றார்.

உள்ளூராட்சி அரசியலில் பிரவேசித்த பாக்கீர் மாக்கார் அவர்கள் நகர சபைத் தலைவராக, பாராளுமன்ற உறுப்பினராக பிரதி சபாநாயகராக, சபாநாயகராக, அமைச்சராக ஆளுனராக இருந்து ஆற்றிய பொதுப் பணிகளின் மூலம் அவரது திருநாமம் பல்லாண்டுகள் நினைவு கூரப்படுகின்றது.

அரசியல் அரங்கில் பல உயர்பதவிகளை வகித்த தேசமான்ய பாக்கீர் மாக்கார் அவர்கள் சிறந்த சட்டத்தரணியாகவும் விளங்கினார். களுத்துறை நீதிமன்றத்தில் வழக்காளிகளிடம் பணம் பெற்றுக்கொள்ளாது இலவச சேவையாகவே இப்பணியை அவர் மேற்கொண்டதை மக்கள் என்றும் நினைவுபடுத்துகின்றனர். எக்கோணத்தில் இருந்தும், சாதி, மத, இனம் பாராது அவர் ஆற்றிய சேவை அன்னாரை முஸ்லிம் அல்லாதோர் மத்தியிலும் பிரபல்யம் செய்தது. பேருவளைத் தொகுதியில் பெரும்பான்மையின வாக்காளர்கள் அதிகமாக இருந்தும் அடிக்கடி இந்த பெருமகன் பெரு வெற்றியீட்டினார். ஆங்காங்கே சிறு சிறு சச்சரவுகள் இனக்கலவரங்களாக வெடித்த போதெல்லாம் நமது முன்னாள் சபாநாயகர் பாக்கீர் மாக்கார் அவர்கள் முன்னின்று அந்தக் கலவரங்களை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உழைத்தார்.

அன்னார் தான் வகித்த பதவிகள் மூலம் குறுக்கு வழியில் பொருள் ஈட்டவோ, பதவியை துஷ்பிரயோகம் செய்யவோ இல்லை. பதிலாக தனக்குக் கிடைத்த பதவிகளை மக்களுக்கு தொண்டு செய்யப் பயன்படுத்தினார். இவற்றிற்கு உதாரணங்களும் பல உண்டு.

அன்று கிழக்கிலங்கையைத் தாக்கிய சூறாவளி பல குடும்பங்களை நிர்க்கதியாக்கியதையும், வீடுகளை இழக்கச் செய்ததையும் யாவரும் அறிவர். இதனால் ஈராக் அரசுடன் தொடர்பு கொண்டு கிழக்கில் ஏறாவூரில் 100 வீடுகளைக் கொண்ட சதாம் ஹுசைன் கிராமத்தை அமைத்துக் கொடுத்தார். அதே போல் கந்தளாய்க் குளம் உடைந்தபோது உடனடியாக அங்கே சென்று நிவாரணப்பணிகளை மேற்கொண்டார்.

இலங்கையில் முஸ்லிம் லீக் வாலிப முன்னணியை உருவாக்கி, அதனை வழிநடத்திச் சென்ற பெருமையும் மர்ஹூம் பாக்கீர் மாக்காரை சேரும். தான் சபாநாயகராகப் பதவி வகித்த காலத்தில் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான மும்தாஜ் மஹாலின் கதவுகள் அகலத் திறந்தன. சாதாரண தொகுதி மக்கள் மட்டுமன்றி நாட்டின் பல இடங்களில் இருந்து மக்கள் அங்கு போய் தமது குறைகளை பிரச்சினைகளை எடுத்துக் கூறினார்.

காலம் சென்ற பாக்கீர் மாக்கார் தனது தொகுதியிலுள்ள, களுத்துறை மாவட்டத்தில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளின் கல்வித் தரத்தை உயர்த்தவும், குறைகளை நிவர்த்தி செய்யவும் தியாக உணர்வுடன் பாடுபட்டார்.

அகில இலங்கை முஸ்லிம் கல்வி மாநாட்டோடு அன்னாருக்கு முழுமையான தொடர்பு இருந்தது. முஸ்லிம்களின் கல்விப் பிரச்சினைக பிரச்சினைகளை கூட்டாக ஆராய்ந்து அவற்றிற்கு தீர்வு காணும் களமாக மேற்படி கல்வி மாநாட்டை பரிணமிக்கச் செய்தார். இவரது காலத்தில் பேருவளைப் பகுதியில் உள்ள முஸ்லிம் பாடசாலைகள் எழுச்சி கண்டன. தனது வரவு செலவு நிதியில் கூடிய நிதியை கல்விக்காகவே செலவிட்டார். மத்துகமை நகரில் பள்ளிவாசல் அமைப்பதில் இவர் வழங்கிய பங்களிப்பை என்றும் மறக்க முடியாது.

அதேபோல் களுத்துறை மாவட்டத்தில் முஸ்லிம் விவாகப் பதிவாளர், முஸ்லிம் கிராம சேவகர், முஸ்லிம் ஆசிரியர்கள் நியமனம் செய்வ தில் அன்றைய அரசாங்க ஆட்சியின்போது இவர் முன்னின்று செயற்பட்டார். ஊடகவியலாளருடன் மிக அன்பாகப் பழகிய இவர் ஊடகவியலாளர்களுக்கு பல வகையிலும் உதவிகளை செய்துள்ளார். விருந்தோம்பல் செய்யும் நல்ல பண்புள்ள மனிதராக திகழ்ந்த பாக்கீர் மாக்கார் பிரதம தலைவர்களாலும் பாராட்டப்பட்டார்.

முஸ்லிம்களின் குரலை உலகுக்கு எடுத்துக் காட்ட ஒரு பிரசுர ஊடகம் இல்லாத நிலையில் அவரது முயற்சியால் 'உதயம்' உதயமாகியது. 'உதயம்' பத்திரிகையை நடத்துவதில் இடர்பாடுகள் எழுந்த போதெல்லாம் மறைந்த மாமேதை பாக்கீர் மாக்கார் அதற்குக் கைகொடுத்துதவினார் என்பது அதனோடு தொடர்புடைய பலருக்குத் தெரியும்.

அரசியலில் பல கட்டங்களைத் தாண்டிச் சென்ற தேசமான்ய பாக்கீர் மாக்கார் அன்றைய ஜனாதிபதியும், பிரதமரும் நாட்டைவிட்டு ஐரோப்பாவுக்குச் சென்றிருந்த சமயம் இந்நாட்டின் பதில் ஜனாதிபதியாகக் கடமையாற்றும் வாய்ப்பினை இறைவன் அளித்தான். ஒரு சிறுபான்மை இனத்தவன் நாட்டின் முதல்வர் பதவிக்கு உயர்த்தப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

மக்கள் தொண்டனாகவே தனது வாழ்நாளைக் கழித்த பாக்கிர் மாக்கார் அவர்களின் சேவையை இறைவன் பொருந்திக் கொள்ளட்டும்.

# சூதீன் எனும் ஒரு நல்லாசிரியர்

• எம்.எச்.எம். நாளிர்



சகோதரர் சூதீன் ஆசிரியருடன் நீண்ட காலம் உடனிருந்து பணியாற்றும் வாய்ப்புக் கிடைத்தமை ஒரு பாக்கியம் என்றே கொள்ள வேண்டும். அவரிடமிருந்து பல்வேறு திறன்களையும் அணுகுமுறைகளையும் விளங்கிக் கொண்டோம்.

1979 முதல் கொழும்பு ஹமீத் அல் ஹுஸைனி மகா வித்தியாலயத்தில் இருவரும் ஒன்றாக பணியாற்றினோம். அவர் பாலர் பிரிவிலும் நாம் உயர் பிரிவிலும் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டோம். எனினும் காற்பந்தாட்டத்தில் இளைஞர்களுடன் இணைந்து அவர்களையும் தன்வயப்படுத்திக் கொண்டார்.

ஹமீத் அல் ஹுஸைனியில் அவரைக் காண்பதற்கு முன், அவரது சகோதரர் லைலதீன் சூதீன் அவர்களுடன் எனக்கு தொடர்பிருந்தது. அதன் மூலம் சூதீன் குடும்பத்தின் தனித்துவமான பண்புகளைக் கண்டுகொள்ள முடிந்தது.

எந்த நேரத்திலும் மற்றவர்களுக்கு உதவும் மனப்பாங்கு சூதீன் குடும்பத்தினருக்கு உரியதாகும். அதன் பிரதியாகவே சகோதரர் எஸ்.எம்.ஆர் சூதீன் அவர்களும் பங்காற்றினார். பொருளுதவியாயினும் வேறெந்த உதவியாயினும் அவரிடம் கோரினால் எப்படியோ தேடித் தருவார் என்பதை அவருடன் சேர்ந்து பழகியோர் கண்டுகொள்வர். வேலைவாய்ப்பு, இடமாற்றம், பதவியுயர்வு, பிரமுகர்களை சந்தித்தல் போன்றவற்றிற்கு வழிகாட்டி உதவுவதில் கைதேர்ந்தவர். தம்மால் இயலாதபோது பிறர்மூலமாகவேனும் அணுகி தேவையை நிவர்த்தித்து வைப்பார். அவ்வளவு தூரம் பிறர்மீது அனுதாபம் கொண்டவர். எவ்வாறெல்லாம் தம்மைச் சார்ந்தவர்களுக்கு உதவ முடியுமோ அவ்வாறெல்லாம் உதவிசெய்ய முன்வருவார்.

எல்லோருடனும் சுமுகமாகப் பழகும் அவரது பண்பும், சிரித்த முகமும், இனிய சுபாவமும் எல்லோரின் கண்ணியத்தையும் பெற்றன. சுய முயற்சியுடைய அவர், தமிழ் மொழி மூலம் கற்றல் கற்பித்தல் செயல்பாட்டில் ஈடுபட்டாலும், சிங்கள மொழி மூலமும் கற்றல் கற்பித்தலில் ஈடுபடவும், கருத்துப் பரிமாறவும் தேர்ச்சி பெற்றார்.

பொறுப்பெடுக்கும் பணியை திறமையாக செய்து முடிக்கும் ஆர்வமும், வல்லமையும், ஆளுமையும் அவரிடம் காணப்பட்டன. சமய விவகாரங்களில் கண்டிப்பாக நடந்துகொண்ட அவரிடம், திறந்த உள்ளமும் நல்ல மனப்பாங்கும் இணைந்திருந்தன. ஒரு வெளிநாட்டுப் பயணத்தில் ஹலால் உணவு தேடி அலைந்தும் கிடைக்காத போது பழங்களையும் பிஸ்கட்டுகளையும் மாத்திரம் உண்டு ஒருவார காலத்தைக் கடத்தியுள்ளார்.

ஏனைய சமூகங்களுடன் சுமுகமாகப் பழகுவார். இஸ்லாத்துக்கு முரணில்லாத வகையில் அவர்களுடன் உறவாடுவார். இதனால் அவர்களின் நல்லபிமானத்தையும் தேடிக்கொண்டார். தேசிய கல்வி நிறுவகத்திலும் ஸாஹிராக் கல்லூரியிலும் இதனை நேரடியாகக் காண முடிந்தது. சமூக நல்லிணக்கத்துக்கு அவர் ஒரு நடைமுறை உதாரணமாகத் திகழ்ந்தார்.

பாடசாலைக் காலத்தில் அவருடன் நீண்ட காலம் நெருங்கிச் செயற்பட வேண்டியேற்பட்டது. எல்லோரும் பொறுப்பேற்கத் தயங்கி ஒதுங்கிய இஸ்லாம் பாடத்துக்கான செயற்திட்ட அதிகாரியாக அவர் நியமிக்கப்பட்ட போது, பொருத்தமான ஆலோசகர்களையும், செயற்பாட்டாளர்களையும் தெரிவுசெய்தார். பணியை துணிவோடு ஏற்றுக்கொண்டார். எனக்கு ஒன்றும் தெரியாது: நீங்கள்தான் செய்து தர வேண்டுமென வினயமாகக் கூறினார். எம்மையெல்லாம் இயங்க வைத்தார். சில பாடங்களை எழுதிச் சென்றால் இது எனக்கு விளங்கவில்லை. சற்று தெளிவுபடுத்தித் தாருங்கள் என்பார். திருத்தி எழுதிக்கொடுத்தால் இப்போது தெளிவாக இருக்கிறது என்பார். இஸ்லாம் கற்பிப்பவர்கள் எல்லோரும் ஆலிம்கள் அல்லவே. இயன்றவரை மாணவர்கள் சுயமாகக் கற்க, வாசித்து விளங்கக் கூடியதாக பாடநூலை எழுதுவோம் என்பார். இது மாணவ உள்ளத்தை புரிந்துகொண்ட அவரது பண்பையும் பணியையும் எடுத்துக்காட்டுகிறது.

பொதுவாக ஒரு பாடநூல் எழுதி முடிக்க குறைந்தது பத்து மாதங்களாவது தேவைப்படும். ஆனால், சூதீன் ஆசிரியர் ஒரே நாளில் ஒரு பாடநூலை உருவாக்கிக் காட்டினார் என்று சொன்னால் பலரும் ஆச்சரியப்படுவர். ஒரு போது பாடநூல் குழுவுக்கெதிராக மாற்றுக்குழு ஒன்று செயற்பட ஆரம்பித்தது. அவ்வேளை, எம்மை எல்லாம் திஹாரிக்கு அழைத்து அஷ்ஷெய்க் எம்.ஆர்.எம். மிஹ்ழார் அவர்களின் வீட்டில் நிறுத்தி இரவு பகலாக ஆறாம் தரத்துக்கான இஸ்லாம் பாடநூலை எழுதி முடிக்கச் செய்தார். இது அவரின் துணிவையும் செயற்பாட்டுத் திறனையும் எடுத்துக் காட்டுகின்றது.

அவரது நல்லெண்ணத்திற்கும், களங்கமற்ற செயற்பாட்டுக்கும், துணிவான முயற்சிகளுக்கும் அல்லாஹ் நற்கூலி வழங்குவானாக. அவரின் நற்செயல்களை அங்கீகரித்து அவரின் பாவங்களை மன்னித்து பிர்தவ்ஸ் எனும் சுவனப் பூங்காவில் இடமளிப்பானாக. அவரது குடும்பத்துக்கு அமைதியையும் வளத்தையும் வழங்குவானாக.

## பயங்கரவாதத்... (03ம் பக்கத் தொடர்)

ஒரு கிராமத்திலுள்ள இளைஞர்களிடம் விசாரணைகளையும் சித்திரவதைகளையும் முடித்த பின்னர், அடுத்த கிராமத்திற்கும் சென்று அதனையே செய்தனர், அதற்கடுத்த கிராமத்திலும் அதனையே தொடர்ந்தனர். கிட்டத்தட்ட ஒரேவகையான போக்கை பின்பற்றினர். இரவுநேரங்களில் அதிகாரிகள் போதையில் இருந்தமையினால், அடிகளும் துன்புறுத்தல்களும் இரவு நேரங்களிலேயே வழக்கமாக நடத்தப்பட்டன.

தடுக்கப்பட்டிருந்தவர்களினால் வாசிக்க முடியாத, புரிந்துகொள்ள முடியாத சிங்கள மொழியில் எழுதப்பட்டிருந்த ஒப்புதல் வாக்குமூலங்களுக்கு கைச்சாத்திட உந்தப்பட்டனர், இல்லையேல் வெற்றுக் காகிதங்களில் கைச்சாத்திடச் செய்த பின்னர், அதிகாரிகள் தாம் விரும்பியவற்றை அதில் எழுதிக் கொள்ளக்கூடிய வகையிலும் நிலைமை இருந்தது. சிலநேரங்களில் ஆடை களையப்பட்டு, தலைகீழாக தொங்கவிடப்பட்டு, தாக்கப்பட்டு முடிந்த பின்னர் பயங்கரவாத அல்லது குற்றப்புலனாய்வு அதிகாரிகள் தடுத்து வைக்கப்பட்டவரிடம், அடுத்த அறையில் அவரின் மனைவி விசாரணைக்காக கொண்டு வரப்பட்டிருக்கிறார் எனக் கூறுவார்கள். தனது மனைவியும் அதே விதத்தில் சித்திரவதையை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று பதறி, உடனேயே ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பமிட உடன்படுவார்கள்.

''விடுவிக்கப்பட்டவர்களில் பலர், தமக்கு நடந்த கொடூரமான சம்பவங்கள் குறித்து எமக்குக் கூறியிருப்பினும், பாதுகாப்புப் படையினர் அல்லது சட்ட அமுலாக்க அதிகாரிகளினால் தாம் பழிவாங்கப்படலாம் என்கிற அச்சத்தின் பேரில், தங்கள் அனுபவங்களை பொதுவில் பகிர்ந்துகொள்ளவோ அல்லது இழப்பீட்டை சட்டரீதியாக முன்னெடுப்பதற்கோ தயங்குகிறார்கள்'' என அபேகோன் கூறினார்.

''நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டிருந்தவர்களில் பெரும்பான்மையானோர் தமது சமூகங்களுக்கு திரும்பும்போது மீளிணைவதில் சிக்கல்களை சந்திக்கிறார்கள். பலர், காவலில் இருந்தபோது அனுபவித்த துன்புறுத்தல்களினால் ஏற்பட்ட காயத்தினால் இன்னும் வலியுடன் வாழ்கிறார்கள். அத்துடன், நித்திரையின் மை மற்றும் விரக்தியினால் அவதிப்படுவதுடன் பலநேரங்களில் அவர்களது சமூகத்தினரால் விலத்தியும் வைக்கப்படு கிறார்கள்'' என அபேகோன் விளக்க மளித்தார்.

### பயங்கரவாத அச்சுறுத்தல் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு

இராணுவ - நீக்கம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்ட நீக்கம் பற்றிய ஏகோபித்த குரல்கள் பரவலாக எழுந்திருந்தாலும், 'தேசிய பாதுகாப்புக்கு' குறிப்பிட்டளவு அச்சுறுத்தல் நிலவுவதாக கூறி அரசாங்கமானது, பயங்கரவாத எதிர்ப்பு சட்டம் மற்றும் வடக்கு - கிழக்கில் ஸ்திரமான இராணுவ இருப்பின் தேவை குறித்து தொடர்ச்சியாக ஒரு உறுதியான நிலைப்பாட்டுடன் இருந்துவந்துள்ளது. மேலும் அரசாங்கமானது, ISIS அமைப்புடன் உள்நாட்டுத் தொடர்புகள் இருக்கலாம் எனக் கூறி உளவுத்துறை அமைப்புகளை உயர் எச்சரிக்கையில் வைத்திருந்து, பயங்கரவாத - எதிர்ப்புச் சட்டங்கள், கண்காணிப்பு, இராணுவ தரிப்பு போன்றவற்றுக்கான தேவையை சட்டரீதியாக உறுதிப்படுத்தி யிருக்கிறது.

1978 முதல் அமுலில் இருக்கும் பயங்கரவாத - எதிர்ப்பு சட்டமான, பயங்கரவாத - தடைச் சட்டமானது, வெற்றிகரமாக மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக அதன் உக்கிரத்தினால் பாதிக்கப்பட்டவர்களை, பொதுமக்களின் பார்வையில் மனிதத்தை இழக்கும்படி செய்திருக்கிறது. ஒரு தனி மனிதன் குற்றவாளியெனவோ நிரபராதி யெனவோ தீர்மானிப்பது எமது கைகளில் இல்லை. அதனால்தான் இந்தச் செயற் பாட்டை நிறைவேற்றுவதற்கு சட்டங்களை நம்பியிருக்கிறோம். ஆனால், ஒரு நியாயமற்ற செயன்முறையை சட்ட ரீதியாக்கு வதற்கென்றே ஒரு சட்டம் வடிவமைக்கப் பட்டிருந்தால், அது குறித்து நாமனை வரும் வருந்தியேயாக வேண்டும்.

சட்டத்தின் கீழ் ஒவ்வொருவரும் சமம், அதனால் ஒவ்வொருவரும் அதன் உகந்த செயன்முறைக்கு உரியவர்கள். அடிப்படை உரிமைகள் இவை. விவாதமோ, சமரசமோ இதில் தேவையற்றது. இத்தகைய உரிமை களை முன்னிறுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு. அத்துடன், இத்தேசத்தின் குடி மக்களாகிய நாமும் அதனை செயற்படுத்துவதற்கு உறுதி பூணவேண்டும்.

• பாதுகாப்பு காரணங்களுக்காக பெயர்கள் மாற்றப்பட்டுள்ளன.

நன்றி - மாற்றம்

## நீர்வளத்துக்குப்...

(01ம் பக்கத் தொடர்)

ஒரு பக்கம், 150 வருடங்களாக தமிழ் மக்கள் வாழ்ந்துவரும் நிலத்தைப் பறிப்பதற்கான செயற்பாடுகள் தீவிரமாக இடம்பெற்றுவருகின்ற நிலையில், மறுபுறம் காணி சீர்த்திருத்த ஆணைக் குழுவுக்குச் சொந்தமான காணிகள் பெரும்பான்மையின மக்களுக்கு 20, 25 பேர்ச்சர்ஸ் அடிப்படையில் கிராமமே உருவாக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. இங்கு பெரும்பான்மையினரின் உரிமைகள் மீறப்படாமல் அரசாங்கத்தால் அவை பாதுகாக்கப்பட்டு உறுதிசெய்யப்படுகிறது.

இதேபோல போதைப்பொருள் கடத்தல் இடம் பெறுவதாகக் கூறி மன்னார், சிலாபத்துறை முஸ்லிம்களின் காணிகளும் பறித்தெடுக்கப்பட்ட செய்திகள் அண்மையில் வெளியாகியிருந்தன.

## மீளவும் வெடித்துச்...

(09ம் பக்கத் தொடர்)

இந்திய இராணுவத்திற்கு டில்லி அரசு வழங்கியுள்ள இந்த சிறப்பதிகாரம் உலகில் ஜனநாயக அரசியல் கலாசாரம் கொண்ட எந்தவொரு அரசாங்கத்தினாலும் தமது படைப்பிரிவுக்கு வழங்கப்படவில்லை.

இராணுவமே தன்னிச்சையாக விசாரணை மையங்களை நிறுவி, தான் விரும்புவோரைக் கைதுசெய்து தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்து வருகின்றது. சித்திரவதை முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றது. சந்தேகத்தின் பேரிலான அனைவரும் தீவிரவாதிகளாகவும் பயங்கரவாதிகளாகவும் பார்க்கப்படுகிறார்கள். அவர்களை இந்திய இராணுவம் எதுவும் செய்யலாம். அவர்கள் சர்வதேச சட்டங்களின் பிரகாரம் எந்த வகையீட்டினுள் அடக்கப்படுகின்றனர் என்பதே சிக்கலான கேள்விதான்.

உலகில் மிகப் பெரும் ஜனநாயகம் என்று பீற்றிக் கொள்ளும் இந்தியா, பூலோக சொர்க்கம் என வர்ணிக்கப்படும் காஷ்மீரை நரகத்தின் விளிம்பிற்கு இழுத்துச் செல்கின்றது. அங்கு 17 காஷ்மீரியர்களுக்கு ஒரு இந்திய இராணுவம் என்ற விகிதத்தில் மனித உருவில் இந்த இராணுவ மிருகங்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ள னர். அவர்களுக்கு இந்திய அரசு வழங்கியுள்ள சிறப்பதிகாரம், ஜெனீவா மற்றும் ரோம் ஒப்பந்தங்கள், ஐ.நா.மனித உரிமை பட்டயங்கள் அனைத்தையும் அப்பட்டமாகவே மீறி வருகின் றது.

## யுனெஸ்கோவில்...

(01ம் பக்கத் தொடர்)

03 நாடுகள் வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை. இஸ்ரேலிய, அமெரிக்க இராஜதந்திர அழுத்தங்களின் காரணமாக, யுனெஸ்கோவின் முன்னைய தீர்மானத்தை விட குறைந்த பெரும்பான்மையைப் பெறும் அளவுக்கு இம்முறை நாடுகள் எதிராக வாக்களித்ததாக இஸ்ரேலியப் பத்திரிகையொன்று குறிப்பிட்டுள்ளது.

நிறைவேற்றப்பட்ட இந்தத் தீர்மானத்தில் ஜெரூஸலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளதாக விபரிக்கப்பட்டுள்ளதோடு, ஜெரூஸலம் நகரின் மீது இஸ்ரேலுக்கு எந்த இறைமையும் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிழக்கு ஜெரூஸலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அகழ்வு, சுரங்கப் பாதை திட்டங்களை நிறுத்த வேண்டும் எனவும் தீர்மானத்தில் அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலைக் கண்டிக்கும் வகையில் இலங்கை வாக்களிக்காத இந்தத் தீர்மானத்தில், இஸ்ரேலை ஆக்கிரமிப்புச் சக்தியாக வரையப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒன்றிணைந்த திண்மக் கழிவு முகாமைத்துவம் கழிவுப் பிரச்சினைக்கு சிறந்த தீர்வாகும்

**கலாநிதி பரீனா ருஸைக்**
புவியியல் துறை விரிவுரையாளர்,
கொழும்பு பல்கலைக்கழகம்



கலாநிதி பரீனா ருஸைக் கண்டி மாவட்டத்திலுள்ள வடதெனியவை பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் தனது ஆரம்பக் கல்வியை வெலம்பொட மு.ம. வித்தியாலயத்தில் கற்றுள்ளார். 1995 ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்தில் சிறப்பு கலைமாணி பட்டத்தையும் ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் Forestial Environment Management எனும் தலைப்பில் MSc பட்டத்தையும் பூர்த்திசெய்துள்ளார்.

திண்மக்கழிவுகளுடன் தொடர்பான பிரச்சினைகள் ஓர் புவியியல் பார்வை (Solid Waste Problems Geoghraphycally View) எனும் தலைப்பில் 2014 ஆம் ஆண்டு கொழும்பு பல்கலைக்கழகத்தில் கலாநிதி (PhD) பட்டத்தையும் நிறைவுசெய்துள்ள இவர், தற்பொழுது கொழும்பு பல்கலைக்கழகத்தில் புவியியல்துறை சிரேஷ்ட விரிவு ரையாளராக பணியாற்றி வருகிறார். இலங்கையின் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர் பிலும் மீதொட்டமுல்ல விவகாரம் தொடர்பிலும் கலாநிதி பரீனா ருஸைக் மீள்பார்வை பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வி இங்கு தரப்படுகிறது.

**நேர்கண்டவர்: ஹெட்டி றம்ஸி**

- **திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் இலங்கையின் தற் போதைய நிலை எவ்வாறுள்ளது?**

நகரப் பிரதேசங்களை எடுத்துக் கொண்டால் கண்டியில் அபாயமான நிலை காண்ப்படுகின்றது. கண்டியில் ஒரு நாளைக்கு 1,50,000 - 2,00000 இற்கும் இடைப்பட்ட மக்கள் வந்து போகிறார்கள். கண்டியில் 1960 களிலிருந்து குப்பை போட ஆரம்பித்திருக்கிறார்கள். தற்பொழுது குகாகொட பகுதியில் குப்பைகள் குவிக்கப்பட்டு வருகின்றது. அண்மையில் அங்கு மீதேன் வாயு வெளியேற்றம் உக்கிரமாக காணப்பட்டது. இங்கு சுகாதாரப் பிரச்சினைகள் அதிகளவில் உள்ளன.

குறிப்பாக இங்கு சுவாச நோய்கள் அதிகம். குருநாகல் நகரமும் திண்மக் கழிவு பிரச்சினையை எதிர்கொள்கிறது. ஒரு நாளைக்கு 70 ஆயிரம் மெட்ரிக் டொன் குப்பை முகாமை செய்யப்படுகின்றது. நுவரெலியாவிலும் சிக்கல் உள்ளது. அங்கு ஒரு நாளைக்கு 20 டன் குப்பைகள் சேர்கின்றது. யாழ்ப்பாணத்திலும் திண்மக் கழிவு பிரச்சினை உக்கிரமான கட்டத்தில் உள்ளது. மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசமும் திண்மக் கழிவுப் பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றது. தெற்காசியாவில் செறிவான மக்கள் வாழும் பகுதியாக காத்தான்குடி உள்ளது. இங்கு டெங்கு நோயாளர்கள் அதிகம்.

கொழும்பில் 1970களிலிருந்து குப்பை போட ஆரம்பித்திருக்கிறார்கள். ஆரம்பத்தில் கொழும்பில் ஒருகொடவத்தையில் குப்பை போட்டார்கள். அதனைத் தொடர்ந்து அக்குப்பை மேடு புளுமெண்டலுக்கு மாற்றப்பட்டது. அங்கு மழை பொழிய ஆரம்பித்ததும் அது மீதொட்டமுல்லைக்கு மாற்றப்பட்டது. கொழும்பு வடக்கு முழுவதிலும் குப்பைகளே அதிகளவில் காணப்படுகின்றன. முஸ்லிம்கள் செறிவாக வாழும் இப்பகுதிகள் குப்பைகளால் நிரம்பப் பெற்று ஆரோக்கியமற்றுக் காணப்படுகின்றன.

- **திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் நீங்கள் மேற்கொண்ட ஆய்வு குறித்து சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

எனது ஆய்வில் திண்மக் கழிவுகளுடன் தொடர்பான பிரச்சினைகள் என்னென்ன காணப்படுகின்றன? அந்தப் பிரச்சினைகள் புவியியல் பிரதேசங்களுக்கு ஏற்ப எவ்வகையில் வேறுபடுகின்றன என்பது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. மொத்தமாக நான் திண்மக் கழிவுகளுடன் தொடர்பான 23 ஆரோக்கிய சீர்கேடுகளை இனங்கண்டேன். வயிற்றுவலி, தோல் வியாதி, தலைவலி, கண்ணெரிவு, குமட்டல்கள், சொறிச்சல், தூக்கமின்மை, ஆஸ்துமா, இருமல், புற்றுநோய் போன்றவை அவற்றுள் சிலவாகும். கொழும்பு, கண்டி, பதுளை, குருநாகல் போன்ற பிரதேசங்களில் பொதுவாக இவற்றைக் காண முடிகிறது.

ஆனால் இடத்திற்கிடம் அவை வேறுபடுகின்றன. குருநாகலை எடுத்துக் கொண்டால் அங்கு நீரோடு தொடர்பான பிரச்சினைகள் அதிகம். மேட்டுப் பகுதிகளிலேயே அதிகம் குப்பை போடப்படுகின்றது. இதனால் கழிவுகள் கீழ் நோக்கி குறிப்பாக வயல்வெளி, குளங்களை நோக்கி அடித்து வரப்படுகின்றன.

பதுளையிலும் அப்படித்தான். அங்கு உமா ஓயாவில் கழிவுகள் கலக்கப்படுகிறது. கண்டியில் மஹாவலி கங்கையின் கிளைநதி உள்ளது. கழிவுகளால் அந்நதி மாசுபடுகிறது. இதனால் ஹெபடைடிஸ் நோய் அதிகம் தொற்றுகிறது. அத்துடன் கண்டி நகரம் குழி போன்று இருப்பதாலும் அதனை சூழ மலைகள் காணப்படுவதனாலும் காற்று குறைவாகவே சுத்திகரிக்கப்படுகிறது. இதனால் ஆஸ்துமா, வீசிங் போன்ற நோயாளர்களை அதிகமாக இங்கு காணலாம். கொழும்பில் பல இடங்களில் குப்பை குவிக்கப்படுகிறது. இங்கு சனப்பெருக்கம் அதிகம் என்பதாலும் காற்றுடனான தூசு அதிகம் உள்ளதனாலும் சுவாச நோய்கள் அதிகம் உள்ளன.

- **கழிவுகளை முறையாக முகாமை செய்யும் திட்டங்கள் உள்ளதா?**

திண்மக் கழிவுகளை முறையாக முகாமை செய்யக்கூடிய சக்தி வாய்ந்ததொரு குழுவை அமைக்க வேண்டும். இக்குழு 3R (Recovery, Recyclable, Reusable) முறை தொடர்பாக மக்களை விழிப்புணர்வூட்ட வேண்டும். இதன் மூலம் விரயங்கள் குறைக்கப்படும். இரண்டாவது கட்டமாக குறைந்தளவிலுள்ள கழிவுகளை உக்கிப் போகும் கழிவுகள் (Non-biodegradable) உக்காத கழிவுகள் (Bio-degradable) என பிரிக்க வேண்டும்.

சமயலறைக் கழிவுகளை உக்கலடையும் கழிவுக்குள் உள்ளடக்கலாம். உக்கலடையாத கழிவுகளை மீண்டும் உபயோகிக்க முடியுமானவை (பிளாஸ்டிக், பொலிதீன் போன்றவை) மீள்சுழற்சிக்கு உட்படுத்த முடியாதவை எனப் பிரிக்கலாம். உக்காத கழிவுகளை உரமாக்கலாம். (composting) மீள்சுழற்சிக்கு உட்படுத்தவும் உரமாக்கவும் முடியாத கழிவுகளையே நாம் அகற்ற வேண்டும். மிகவும் சிறியதொரு தொகையே கழிவாகிறது.

இதை அகற்ற பெரியளவிலான இடங்களும் தேவைப்படுவதில்லை. அதையும் முறையாக கண்காணிக்க வேண்டும். கழிவுகளை போடும் போது துர்நாற்றம் வீசாமல் சொய்ல் லேயர் போடப்படுகிறதா என்பதையும் அவதானிக்க வேண்டும். தொடர்ந்தேர்ச்சியான கண்காணிப்பு இங்கு அவசியம்.

- **இன்று திண்மக் கழிவுகள் முறையாக அகற்றப்படாமையினால் கொழும்பு பிரதேசம் பாரிய சவால்களை எதிர்நோக்கி வருகின்றது. கொழும்பில் கழிவுகளை முறையாக முகாமை செய்யக்கூடிய திட்டங்கள் ஏதும் உள்ளதா?**

கொழும்பில் 47 தொகுதிகள் உள்ளன. இத்தொகுதிகள் 6 நிர்வாக பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கொழும்பு நகராட்சி பகுதியிலுள்ள கழிவுகளை கொழும்பு மாநகர சபை ஒன்று சேர்த்து ஏதாவதொரு இடத்தில் போடுகிறது. ஒரு தனி நிறுவனத்திற்கு இதனை முகாமை செய்வது கடினம் என்பதால் நான் கொழும்புக்கென ஒரு பரிந்துரையை முன்வைத்தேன்.

அதாவது, கொழும்பு மாநகர சபை சகல விடயங்களையும் சுமந்துகொண்டிருக்காமல் நிர்வாக தொகுதிகள் [illegible] களை ஒப்படைக்க [illegible] முகாமை செய்வது இலகுவாக அமையும். கழிவுகளை அகற்றுவதற்கு அந்தந்த தொகுதிகளுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். குறிப்பிட்ட தொகுதிகளில் உள்ள உக்கிப் போகின்ற, உக்கிப் போகாத கழிவுகளை மாநகர சபைக்கு தனியாக சேகரிக்க முடியாது. உக்கிப் போகும் கழிவுகளை மாத்திரம் மாநகர சபை சேகரித்து விட்டு உக்காதவற்றை மீள்சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய தனியார் நிறுவனங்களை அணுகி அப்பொறுப்பை ஒப்படைக்க வேண்டும்.

மத்திய சுகாதார அதிகார சபையின் கீழ் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் உள்ளன. உதாரணமாக, அபான்ஸ் நிறுவனத்தைக் குறிப்பிடலாம். இந்நிறுவனங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். தேவையான வகையில் இந்நிறுவனங்களையும் இணைத்துக் கொண்டு கழிவுகளை முகாமை செய்ய வேண்டும். அப்போது மீள்சுழற்சிக்குரிய கழிவுப் பொருட்களை சேகரியுங்கள் என்று அபான்ஸுக்குக் கூறலாம்.

மற்றுமொரு நிறுவனத்திற்கு பொலித்தீனை எடுக்குமாறு கூறலாம். அவற்றை கிழமைக்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை சேகரிக்கலாம். நகர சபையினால் உக்கிப் போகும் கழிவுகளை ஒரு நாள் விட்டு அல்லது ஒருநாளைக்கு ஒரு தடவை என்றவாறு சேகரிக்கலாம்.

ஆனால் இங்குள்ள முக்கியமான பிரச்சினை என்னவெனில், தேவையான உபகரணங்கள் மாநகர சபையிடம் இல்லை என்பது. நாட்டில் இலஞ்சம், ஊழல் புரிகிறார்கள். ஆனால் நாட்டில் திண்மக் கழிவகற்றலுக்கு தேவையான ஆயுதங்கள் பெற்றுக் கொடுக்கப்படுவதில்லை. கொழும்பு மாநகர சபையிடம் 46 PHI அதிகாரிகளே உள்ளார்கள். அவர்களுடைய வாகனங்களும் 20 வருடங்களுக்கும் மேல் பழமை வாய்ந்தன. கொழும்பு மாநகர சபையின் கழிவு முகாமைத்துவ பிரிவில் அதிகமான வசதி வாய்ப்புக்கள் இல்லை. தொழிலாளர் பற்றாக் குறை நிலவுகிறது. இருக்கும் தொழிலாளர்களுக்கு அடிக்கடி மருத்துவம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். ஆனால் அது மேற்கொள்ளப்படுவதில்லை. கழிவகற்றும் தொழிலாளர்களுள் கூடுதலானோர் போதைக்கு அடிமைப்பட்டுள்ளார்கள். ஏன் குடிக்கிறீர்கள் எனக் கேட்டால் குப்பை நாற்றத்தை சகித்துக்கொள்ள முடியாது. குடித்தால்தான் எங்களுக்கு வேலை செய்ய முடியும் எனக் கூறுகிறார்கள்.

தொழிலாளர்களின் நலன் தொடர்பில் அரசாங்கம் அதிக கரிசனை காட்ட வேண்டும். கொழும்பு மாநகர சபை தனது தலைமையில் முக்கியமான பங்குதாரர்களையும் தனியார் நிறுவனங்களையும் இணைத்துக் கொள்ள வேண்டும். தானும் ஒரு பகுதியை பொறுப்பெடுத்து செய்து வரும் வேளையில் ஏனையவைகளை தனியாருக்கு வழங்க வேண்டும். இவ்வகையில் பிரிவுபடுத்தப்பட்ட வகையில் ஒன்றிணைந்த திண்மக் கழிவு முகாமைத்துவமாக (Intergreated Solid Waste Management) அதனை முன்னெடுக்க வேண்டும். இதுவே இலங்கைக்கு பொருத்தமான திட்டமாக உள்ளது.

கழிவுகளை முறையாக சேகரித்தால் முதலீட்டலாம். கொழும்பில் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளில் 65 வீதமானவை உக்கிப் போகக் கூடியவையாகும். உர உற்பத்திக்கு இதனைப் பயன்படுத்த முடிகிறது. இன்று சந்தையில் 15 ரூபா விலையில் உரத்தை விற்கலாம். அது போன்று பொலித்தீன் பிளாஸ்டிக்களை 40-60 ரூபா வரையில் வாங்குவதற்கான நிலையங்கள் உள்ளன. கிறீன் பாத்தில் Western Waste Management Centre உள்ளது. இதன் கிளைகள் அதிகமாக அமைக்கப்பட வேண்டும். எனவே இவற்றை முறையாக சேகரிப்பதற்கான விழிப்பூட்டல்களையும் தெளிவுகளையும் ஊடகங்கள் வழங்க் வேண்டும்.

- **இப்பின்னணியில் மீதொட்டமுல்ல குப்பை மேடு சரிவு குறித்த உங்களது அவதானங்களைக் குறிப்பிட முடியுமா?**

கொழும்பு மீதொட்டமுல்லையை எடுத்துக் கொண்டால் அங்கு மக்கள் மிகவும் செறிவாக வாழ்கிறார்கள். வருமானத்தில் குறைந்தவர்களாக உள்ளார்கள். அதிகாரமற்ற இம்மக்கள் வசிக்கும் பகுதிகளிலேயே குப்பைகளைப் போடுகிறார்கள். கொழும்பிலுள்ள குப்பைகளை கொழும்பு 07ல் கொட்ட முடியும் தானே? கொட்ட மாட்டார்கள். ஏனெனில், அங்கு அதிகாரம் உள்ளது. அதனால் தான் ஏழைகள் உள்ள பகுதிகளில் குப்பை கொட்டுகிறார்கள்.

[illegible] மேட்டு நிலங்களாக மக்கள் [illegible] ன் வாழும் பிரதேசங்களையே தெரிவு செய்துள்ளது. (பக்.14)

## எழுவாய், மயமிலை



அபூ ஷாமில்

## இத்துப் போன அத்திவாரங்கள்

ஜனநாயகத்தை பலரும் பலவிதமாகப் பயன்படுத்துவதுண்டு. மேற்கு நாடுகளின் ஜனநாயகம் என்பது, தமது நலனை இலக்காகக் கொண்டது. இது தமது தேவைக்கேற்ப பல்வேறு வடிவமெடுக்கக் கூடியது. ஜனநாயகம் விதித்த அனைத்து நெறிமுறைகளையும் மீறிய இஸ்ரேலின் அட்டகாசத்தை அது அங்கீகரிக்கிறது. தமது நாட்டின் விடுதலைக்காக ஜனநாயக ரீதியில் போராடும் ஹமாஸை அது பயங்கரவாதிகள் என முத்திரை குத்துகிறது. தனது போக்கையும் செயற்பாடுகளையும் நியாயப்படுத்துகின்ற இத்தகைய ஜனநாயகம் எமது பள்ளிவாசல்களுக்குள்ளாலும் இருந்தாலும், மேற்குலகம் சொல்லும் ஜனநாயகத்தை நாங்கள் நிராகரிப்பது போல, மேற்கின் ஜனநாயகத்தின் சாயலில் செயற்படுகின்ற பள்ளிவாசல்கள் பற்றி இங்கு பேச வரவில்லை.

இஸ்லாம் சொல்லுகின்ற ஜனநாயகத்தை பள்ளிவாசல்களுக்குள்ளால் நிலைநாட்டுவது அல்லது பள்ளிவாசல் ஜனநாயகத்தை இஸ்லாமிய மயப்படுத்துவது தொடர்பில் சமூகம் ஆழமாகச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. இஸ்லாத்தின் ஜனநாயகக் கோட்பாடுகள் தொடர்பிலான அறிவு மொத்தமாக சமூகத்துக்கும் குறிப்பாக பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கும் வழங்கப்பட வேண்டியிருக்கிறது. இல்மு என்ற பகுதியில் இதையெல்லாம் அடக்க வேண்டும் என்ற அறிவு பொதுவாகவே பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் காணப்படுவதில்லை. அதனால் தான் மறுமை நாளின் அடையாளங்களில் ஒன்றாக தகுதி இல்லாதவர்கள் பதவிகளில் அமர்வார்கள் என்று கதீப் மிம்பரில் எடுத்துச் சொல்வது இவர்களுக்குப் புரிவதில்லை.

இஸ்லாம் சொல்லுகின்ற ஜனநாயக மரபில் கலந்தாலோசனை செய்வது அல்லது மசூரா செய்வது முக்கியமானதொரு அடிப்படை. மசூராவின் போது பெரும்பான்மையினரின் கருத்து முடிவாகக் கொள்ளப்படுகிறது. எந்தப் பள்ளிவாசலாவது இந்த அடிப்படையில் செயற்படுகின்றதா ? ட்ரஸ்டி போர்ட் கூட்டங்கள் எப்படி நடக்கின்றன என்பது தலைவரின் முடிவுக்கு தலையாட்டிவிட்டு வருகின்ற பலருக்கும் தெரியும். எடுக்கப்பட்ட எந்தத் தீர்மானமாவது ஏகமனதாக எடுக்கப்பட்டதா அல்லது ஏக மனிதனால் எடுக்கப்பட்டதா என்பது யாருக்குத் தெரியும் ?

ஜமாஅத்தார்களுக்கு அல்லது குறித்த ஊருக்குப் பொதுவான எந்தத் தீர்மானமேதும் மக்களின் கலந்தாலோசனையுடன் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா? ஊர்மக்களின் பெரும்பான்மையான அபிப்பிராயத்தின்படி இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கிறோம் என்று தைரியமாக அறிவிப்புச் செய்கின்ற பள்ளிவாசல்களை ஏன் பரவலாகக் காணக்கிடைப்பதில்லை ? கலந்தாலோசனைக்குப் பின்னர் பெரும்பான்மை முடிவுடன் செயற்படுகின்ற எந்தப் பள்ளிவாசலும் ஜனநாயக விழுமியங்களை மீறிச் செயற்படுவதில்லை.

ஜனநாயகத்தின் தூண்களாகிய கலந்தாலோசனையும் பெரும்பான்மை முடிவும் ஒரு ஆளுகை மையத்தில் இல்லையென்றால் அதன் அடிப்படையே ஆட்டம் காண்கிறது. ஆட்டம் போடும் இப்படியான கட்டடங்களை தடுப்புச் சுவர் எழுப்பியும் பாதுகாப்பு மதில் கட்டியும் வெளிச்சுவர்களுக்கு வர்ணம் பூசியும் பாதுகாப்பதற்கு கட்டடத்தில் உள்ளவர்கள் முயற்சிப்பதும் பலனளிக்காது. கட்டடத்தை அதன்பாட்டில் விட்டு விட்டு உடைந்து விழுந்ததன் பின்னர் வெளியிலிருந்து சேதத்தை மதிப்பிடுகின்ற ஆய்வு முயற்சிகளும் சமூகத்துக்குப் பயனளிக்காது.


இதனால் தட்டுத் தட்டாய் உயர்ந்து செல்கின்ற பள்ளிவாசல்களின் ஜனநாயக அத்திவாரத்தை பலப்படுத்துகின்ற வேலைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். வெறுமனே ஜும்ஆவுக்குப் பின்னர் வாசிக்கின்ற தீர்மானங்களை தம்மீது திணித்துக் கொள்ளாமல் இந்தத் தீர்மானத்துக்கு வருவதில் தம்மீது உள்ள கடப்பாடு என்ன என்பதனை ஒவ்வொரு ஜமாஅத்தவரும் யோசிக்க வேண்டும். அங்கத்தவர்களது கலந்தாலோசனைக்கு உட்படுத்தப்படாமல் தன் மீது திணிக்கப்படுகின்ற தீர்மானங்களின் ஜனநாயகப் பெறுமானங்களை கேள்விக்குட்படுத்தும் பண்புதான் ஆரோக்கியமான ஒரு சமூகத்தின் அறுதிப் பெறுமானம்.

ஆளுகைக்கு உட்பட்டுள்ளவர்கள் கண்மூடித்தனமாக பின்பற்றுபவர்களாக இருந்தால் சாத்தான்கள் வேதமோதும் பாழடைந்த கிடங்குகளாக ஆளுகை மையங்கள் பரிணாமம் எடுக்கும் என்பதற்கு கண்முன்னே பல வரலாறுகள் இருக்கின்றன. இப்படியே காலத்தைப் [illegible]க்கிவிட்டு, இப்படித் தான் நாங்கள் சமூகத்திலே அமைதி [illegible]த்தோம் என்று அடுத்த தலைமுறைக்கு நியாயம் சொல்லத் தயாராகும் ஒரு சமூகமாகவே இன்று நாங்கள் காலத்தைக் கடத்திக் கொண்டிருக்கிறோம்.

இத்துப் போன அத்திவாரங்களை குத்துக் கல்லால் நிமிர்த்தி வைத்து சத்துக்கள் ஊட்டி தூக்கி வைக்காவிட்டால் கொத்துக் கொத்தாய் செத்துப் போன சிதிலங்கள் தான் அடுத்த தலைமுறைக்கு நம்மிடமிருந்து சொத்தாய்க் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெனிசுவேலாவில் புதிய அரசியலமைப்புக்கான முஸ்தீபுகள்



வெனிசுவேலா ஜனாதிபதி புதிய அரசியலமைப்பொன்று வரையப்படுவது குறித்து பொதுமக்களுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார். லத்தீன் அமெரிக்காவின் முன்னோடி இடதுசாரி ஆட்சி நாடான வெனிசுவேலாவில் முன்னாள் ஜனாதிபதி ஹியூகோ சாவேஸின் மரணத்தின் பின்பு அவரது வாரிசாகக் கருதப்பட்ட நிக்கொலோஸ் மதுரோ குறுகிய வாக்கு வீத வித்தியாசத்தில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றிருந்தார்.

அவர் ஜனாதிபதியாக பதவியேற்றதைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகளது ஆர்ப்பாட்டங்கள் படிப்படியாக அதிகரித்து வருகின்றன. இப்பின்னணியில் அண்மைக் காலங்களில் இடம்பெற்ற 'பல ஆர்ப்பாட்டங்களையும் நிக்கொலோஸ் மதுரோ அரசாங்கம் ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சிகள் என வர்ணித்திருந்தது.

அமெரிக்க உளவுத் துறைப் பின்னணியில் வெனிஸுவேலாவை கட்டுக்குள் கொண்டுவரும் பல முயற்சிகளது ஓர் அங்கமே இவை எனப் பரவலாகக் குற்றச்சாட்டுகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நேரம் புதிய அரசியலமைப்பு குறித்தும் அதனை உருவாக்குவதற்கான வேலைத்திட்டத்தில் சிவில் குழுக்களையும் இணைக்க வேண்டுமென்ற விருப்பத்தை அதிபர் அறிவித்திருப்பதை எதிர்க்கட்சிகள் வரவேற்காததோடு இதனை ஜனாதிபதியின் அதிகாரத்தை கூட்டுவதன் மூலம் எதிர்க்கட்சிகளை முடக்கிவிடும் முன்னெடுப்பு என வர்ணித்திருந்தனர்.

நிக்கொலோஸ் மதுரோ தலைமையிலான ஆளும் கட்சியின் மே தினக் கூட்டத்தின் போது வெனிஸுவேலாவின் எதிர்க்கட்சியின் இளம் ஆதரவாளர்கள் நடாத்திய பேரணியை காவல் துறையினர் முடக்கிய போது இரு தரப்பினருக்கும் கலவரம் ஏற்பட்டது. இதன் போது நிக்கொலோஸ் மதுரோ ''நாடு சிவில் யுத்தத்துக்குள் தள்ளப்படுவதைத் தான் விரும்பவில்லை'' எனத் தெரிவித்திருந்தார்.

# ஹமாஸின் புதிய திருத்தப்பட்ட யாப்பு வெளியீடு



ஹமாஸ் அமைப்பின் திருத்தப்பட்ட யாப்பினை அண்மையில் அதன் அரசியல் பிரிவின் முன்னாள் தலைவர் காலித் மிஷ்அல் வெளியிட்டு வைத்துள்ளார். இதன் படி 1987 இல் வெளியிடப்பட்ட அதன் ஆரம்பகால யாப்பை விடவும் பல நெகிழ்வுப் போக்கான அம்சங்கள் காணப்படுவதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் புதிய யாப்பின் படி 1967 எல்லைகளுக்கு உட்பட்டவாறான பலஸ்தீன தேசத்தை ஏற்றுக்கொள்ளல், ஜெரூசலம் பலஸ்தீனர்களுக்கு முழுமையாக உரிமை கொண்டது, முஸ்லிம் சகோதரத்துவ அமைப்புடன் தொடர்புகள் இல்லை, பலஸ்தீன அகதிகள் மீளத் திரும்ப வேண்டும் போன்றன முக்கிய அம்சங்களாகக் கருதப்படுகிறது.

முக்கியமாக பலஸ்தீனர்களது எதிரியாக சியோனிஸமே உள்ளது யூதமல்ல எனக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, இஸ்ரேல் என்ற தேசத்தை அங்கீகரிக்க மாட்டோம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளமை முக்கியமான அம்சமாகும்.

# சர்வதேசப் பார்வை

# அர்துகானின் இந்திய விஜயம் காஷ்மீர் விவகாரத்தில் கேள்விகளை எழுப்பியுள்ளது




கடந்த வாரம் டெல்லிக்கான விஜயமொன்றை துருக்கி அதிபர் ரஜப் தய்யிப் அர்துகான் மேற்கொண்டிருந்தார். பிராந்தியத்தில் மட்டுமல்லாது சர்வதேச ரீதியாகவும் பெரும் கவனயீர்ப்பை ஏற்படுத்திய இவ்விஜயமானது இரு தரப்பு பொருளாதார உறவுகள் மற்றும் காஷ்மீர் பிரச்சினைகள் குறித்த பல்வேறு பேசு பொருள்களை உள்ளடக்கியதாக இருந்துள்ளது.

துருக்கிய அதிபரின் 'சர்வஜன வாக்கெடுப்பு' வெற்றிக்குப் பிந்திய முதலாவது விஜயமாக அமைந்திருந்த இப் பயணத்தில் காஷ்மீர் மக்களது சுமுக நிலைக்கான எதிர்பார்க்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை மிகப் பலமாக வலியுறுத்தியிருந்தார்.

குர்திஷ் பிரச்சினையையும் காஷ்மீர் பிரச்சினையையும் முடிச்சுப் போட்டு கேள்வி எழுப்பிய இந்தியப் பத்திரிகையாளர்களது கேள்விகளுக்கும் அர்துகான் காத்திரமான பதில்களை முன்வைத்தார். குர்திஷ் மக்களுக்கு வாழ்வதற்கான பிரச்சினைகள் எதுவும் இல்லை எனக் குறிப்பிட்ட அவர், அங்கு இருப்பது தீவிரவாதிகளது பிரச்சினையே என்பதை சுட்டிக் காட்டினார். ஆனால் காஷ்மீரில் மக்கள் வாழ்வதற்கான பிரச்சினைகளே நிலவுவதாகவும் இதற்கு இந்தியா விரைவில் தீர்வு காண முன்வர வேண்டுமெனவும் அர்துகான் வலியுறுத்தியிருந்தார்.

காஷ்மீர் விவகாரத்துக்கு தீர்வு காண்பதற்கென பலதரப்பு பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படுவதற்கான அழைப்பையும் இந்திய தலைவர்களுக்கு விடுத்திருந்தார். அதற்காக முடிந்தளவு ஈடுபாட்டையும் துருக்கி தரும் என்று அர்துகான் இவ்விஜயத்தின் போது வாக்குறுதியளித்தார்.

ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்புரிமை பெறுவதை துருக்கி ஆதரிப்பதாகவும் கூறிய அர்துகான், இப் போதிருக்கும் உலகு இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பிந்தி இருந்த உலகு அல்ல என்பதை சுட்டிக்காட்டினார்.

எனவே ஐ.நா. சபை உட்பட பல்வேறு தளங்களிலும் உலக அரங்கில் மாற்றம் நிகழ வேண்டும் என்பதை அவர் இந்திய விஜயத்தின் போது வலியுறுத்திக் கூறியிருந்தார்.

இஸ்லாமாபாத்துடன் பாரம்பரியமாக இறுக்கமான தொடர்புகளைப் பேணி வரும் அங்காராவின் இந்த நகர்வு பிராந்தியத்தின் அரசியலில் புதிய வாயில்களைத் திறக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. பாரம்பரியமாக காஷ்மீர் விவகாரத்தில் பாகிஸ்தான் ஆதரவுப் போக்கில் துருக்கியிடம் எந்த நிலைமாற்றமும் வர மாட்டாது என அரசியல் நோக்கர்கள் கூறுகின்றனர். அர்துகானின் இவ்விஜயத்தைப் பல்வேறு ஊடகங்களும் 'முஸ்லிம் தேசியவாதியினதும் ஹிந்து தேசியவாதியினதும் சந்திப்பு' என தலைப்பிட்டு வர்ணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# சிரியா குறித்து புட்டின் - ட்ரம்ப் பேச்சுவார்த்தை



சிரியா நிலவரங்கள் குறித்தும் எதிர்கால முன்னெடுப்புக்கள் குறித்தும் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டினும் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பும் பேச்சுவார்த்தை நிகழ்த்தியுள்ளனர். இப்பேச்சுவார்த்தை ட்ரம்ப், விமானத் தளம் மீது சிரியாவில் ஏவுகணைத் தாக்குதல்கள் நிகழ்த்த உத்தரவிட்டதன் பின்பு இடம்பெறும் முதலாவது பேச்சுவார்த்தை என்ற ரீதியில் முக்கியத்துவம் பெறுவதாக நோக்கர்கள் குறிப்பிடுகின்றனர்.

இரு தலைவர்களும் சிரிய பிரச்சினையை முடிவுக்குக் கொண்டு வருதல் மற்றும் வட கொரியாவுடனான பதட்டத்தைத் தணித்தல் ஆகிய விவகாரங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நிகழ்த்தியதாக அல்ஜஸீரா செய்தி வெளியிட்டுள்ளது.

# கேரளாவில் பிற மாநில தொழிலாளர்களுக்கு இலவச காப்புறுதி மற்றும் சுகாதார சேவைகள்



கேரளாவில் ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கும் கம்யூனிஸ்ட் கட்சி இந்தியாவிலேயே முதன் முறையாக பிற மாநில தொழிலாளர்களுக்கு இலவசக் காப்புறுதி மற்றும் சுகாதார சேவைகளை வழங்குகிறது. இதனை பல நாட்டு ஊடகங்களும் பாராட்டி இடதுசாரி அரசொன்றின் உன்னத செயற்பாடு என வர்ணித்திருந்தன.


இந்தியாவில் பல தசாப்தங்களாக தெற்கு மற்றும் வடக்கு மாநிலங்களிடையே தொழிலாளர் இடப்பெயர்வுகளால் முறுகல்கள் பல நிகழ்ந்தேறியுள்ளதுடன், சில கலவரங்களும் வெடித்திருந்தன.

அஸ்ஸாம், பீகார் மற்றும் ஜார்க்கண்ட் உள்ளிட்ட பல்வேறு பின்தங்கியுள்ள வடக்கு மாநிலங்களிலிருந்து இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் தென்னிந்திய மாநிலங்கள் உட்பட இந்தியாவின் சகல பிராந்தியங்களிலும் கூலித் தொழிலுக்கென தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தென் சூடானில் பிரித்தானிய இராணுவம்

தென் சூடானில் நிலை கொண்டுள்ள ஐ.நா. கண்காணிப்பாளர்கள், தலைநகர் கோபாவில் பிரித்தானியப் படைகள் தரையிறங்கியுள்ளதாக அறிவித்துள்ளனர். ஐ.நா. குழுவினர் மேலும் தெரிவிக்கையில், ''பிரித்தானிய இராணுவக் குழு அதிகமதிகம் பொறியியலாளர்களைக் கொண்டுள்ளதாகவும் தென்சூடானில் அமைக்கப்படவுள்ள பாதைகள் அமைக்கும் வேலைகள், பாலங்கள் கட்டும் வேலைகள் உட்பட பல்வேறு உட்கட்டமைப்புத் திட்டங்களில் பங்களிப்பதற்காக அவர்களது பயணம் அமைந்துள்ளதாகவும் குறிப்பிட்டார். தென் சூடானின் மொத்த மக்கள் தொகையான 12 மில்லியனில் சுமார் மூன்று மில்லியனுக்கும் அதிகமானோர் வீடுகளற்று உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சவூதியில் ஹிஜாப் அணிய மறுத்த அஞ்செலா மெர்கல்



அண்மையில் ஜெர்மனி சான்சிலர் அஞ்செலா மெர்கல் சவூதி விஜயத்தின் போது ஹிஜாப் அணியாமல் இருந்தமை கவன ஈர்ப்பை ஏற்படுத்தியிருந்தது.


அஞ்செலா மெர்கலது விஜயத்துக்கு முந்தைய வாரங்களில் ஜெர்மனி நாடாளுமன்றத்தில் சவூதியில் பெண்களது நிலைமைகள் தொடர்பாக குரலெழுப்பப்பட்டிருந்தது. அஞ்செலா மெர்கல், முகத்தை மூடுவது குறித்த சட்டம் மீள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்திருந்தார். இவ்விஜயத்தின்போது மெர்கல், சவூதியில் மனித உரிமைகளது நிலைமைகள் குறித்தும் யெமன் உள்நாட்டுப் போரில் சவூதியின் பங்கு குறித்தும் வினவியதாகக் கூறப்படுகிறது.

இதற்கு முன்னரும் சவூதிக்கு விஜயம் செய்திருந்த தெரேசா மே, ஹிலாரி கிளிண்டன், மிச்செல் ஒபாமா போன்றோர் சவூதியின் புரொட்டோகோலை மீறி ஹிஜாப் அணிய மறுத்திருந்தனர். சவூதி சட்டத்தின் பிரகாரம் ஒரு பெண் முழு உடலையும் மறைக்காமல் பொது இடங்களில் நடமாடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாரிஸில் வன்முறையாக மாறிய மே தின ஊர்வலம்

வருகின்ற ஞாயிற்றுக் கிழமை பிரான்ஸில் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் அங்கு பதட்டமான நிலைமைகள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இதன் உச்சகட்டமாக பாரிஸில் அமைதியான முறையில் இடம்பெற்ற பாரிய மே தின ஊர்வலத்தில் பெரும் வன்முறை வெடித்துள்ளது.

எதிர்வரும் பிரான்ஸ் அதிபர் தேர்தலில் வெற்றி பெறக் கூடியவரெனக் கருதப்படும் தீவிர வலதுசாரி வேட்பாளரான மரைன் லீ பென்னை எதிர்த்து மே தினத்தன்று பல்வேறு குழுக்கள் பாரிஸில் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியிருந்தன. இவ்வார்ப்பாட்டங்களில் இனவாதம், முதலாளித்துவம், பொலிஸ் அடக்குமுறை என்பவற்றை எதிர்த்து கோஷங்களை எழுப்பி வந்தனர்.



இவ்வார்ப்பாட்டங்களில் வடக்கு ஆபிரிக்காவிலிருந்து பிரான்ஸில் குடியேறியவர்கள், தொழிலாளர் செயற்பாட்டாளர்கள், வலதுசாரி வேட்பாளர் லீ பென்னுக்கு எதிரானவர்கள் எனப் பல[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



• றவூப் ஸெய்ன்

காவல் துறை அமைப்புகளும் மாநில நிர்வாகமும் சட்ட விதிகளை தூக்கியெறிந்து விட்டதாகவே தெரிகிறது. அனைத்து வகையான சட்ட விரோதச் செயல்களையும் அவர்கள் செய்து வருகிறார்கள். கொலைக் குற்றவாளிகளும் பயங்கரவாதிகளும் கூட இவர்களைப் பார்த்து வெட்கப்படக் கூடும்.

என் பார்வைக்குக் கொண்டு வரப்பட்ட நூற்றுக்கணக்கான வழக்குகளில் கைதிகள் சட்ட விரோதமாக சிறைவைக்கப் பட்டிருந்தனர். இந்த நீதிமன்றம் அவர்களை விடுவிக்கும் படி கடுமையாக உத்தரவிட்ட பின்பும் கூட அவர்கள் விடுதலை செய்யப்படவில்லை. கைதிகள் எங்கிருக்கிறார்கள் என்பது தெரியாததால் நூற்றுக்கணக்கான வழக்குகள் நிலுவையில் உள்ளன. கைதுசெய்ததற்குப் பின்னால் அந்நபர்களைக் கொன்றுவிடுவதால் பல வழக்குகள் தேங்கி நிற்கின்றன.

சுருக்கமாகச் சொன்னால் சட்டம், ஒழுங்கு, இயந்திரம் முழுக்கவும் நொறுங்கிப் போயுள்ளன. சட்டத்தை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் என்று சொல்லப்படும் இந்நீதிமன்றம் கூட செயலற்ற நிலையில்தான் இருந்து வருகின்றது என்று சொல்ல நான் வெட்கப்படவில்லை. இந்த நீதிமன்றத்தின் ஆணைகளை யாருமே மதிப்பதில்லை. ஆயிரக்கணக்கான ஆணைகளை அளித்திருக்கிறோம். அதற்கு யாருமே மதிப்புத் தருவதில்லை.

**எஸ்.எம். ரிஸ்வி -**
ஜம்மு காஷ்மீர் உயர் நீதிமன்றம்
ஸ்ரீநகர்

# மீளவும் வெடித்துச் சிதறும் காஷ்மீர் விவகாரம்

தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கை ஒட்டி ரிஸ்வி எனப்படும் உயர் நீதிமன்ற நீதியரசர் அளித்த ஆணையில் எழுதப்பட்டுள்ள வரிகளே இவை.

ஜம்மு காஷ்மீரிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் உள்ள விசாரணை மையம், சிறை, புனைச் சிறை, காவல் நிலையம் ஆகியவற்றில் சிறைவைக்கப்பட்டுள்ள நபர்களின் பெயர்கள், அவர்கள் மீதான வழக்குகள், சிறையிலிருந்து வரும் காலம், அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ள மருத்துவ வசதிகள், இன்ன பிற வசதிகள் போன்ற அனைத்துத் தகவல்களையும் வெளியிட வேண்டும் எனக் கோரி நீதிமன்ற ஆணையில்தான் மேற்சொன்ன வரிகள் வருகின்றன.

மாவட்ட நீதிபதி, மாவட்ட குற்றவியல் நீதிபதி, மாவட்ட காவல்துறை சுப்ரின்டன், முதன்மை மருத்துவ அதிகாரி ஆகியோரைக் கொண்ட ஒரு குழுவை மாவட்டம் தோறும் அமைத்து விசாரணை மையங்களிலும் சிறைச்சாலைகளிலும் நிலவி வரும் சூழ்நிலைகள் பற்றி ஒரு வாரத்தில் உயர் நீதிமன்றத்திற்கு ஒரு அறிக்கை தர வேண்டும் என்பதே இந்த ஆணையின் வழிகாட்டலாகும்.

இந்த ஆணையின்படி அமைக்கப்படும் மாவட்டக் குழுக்களுக்கு ஏனைய அதிகாரிகள் முழு ஒத்துழைப்புத் தர மாநில தலைமைச் செயலரும் காவல் துறைத் தலைவரும் ஆவண செய்ய வேண்டும் என நீதிபதிகள் கட்டளையிட வேண்டும். ஆனால், இதுபோன்ற நீதிமன்றங்களின் கட்டளைகளை யாரும் மதிப்பதில்லை. நீதிமன்றங்கள் இப்படித் தான் ஆக்கிரமிக்கப்பட்ட ஜம்மு காஷ்மீரில் செயலிழந்து போயுள்ளன.

இத்தற்கு அப்பால் பி.எஸ்.ஏ., தடா, கலகப் பகுதி சட்டம்,



ஆயுதப் படையினரின் சிறப்பு அதிகாரம் என காஷ்மீருக்கென்றே வரையப்பட்டுள்ள சட்டங்கள் அப்பாவி மக்களைக் கொல்கின்றவர்களுக்கு நிவாரணமளிக்கின்றன. நீதியை குழி தோண்டிப் புதைக்கின்றன.

ஜம்மு காஷ்மீர் பொதுப் பாதுகாப்புச் சட்டம் (PSA) என்பது ஒரு தடுப்புக் காவல் சட்டமாகும். இது 1978 இல் இயற்றப்பட்டது. இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் நடைமுறையில் இருக்கும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தையே இது பெரும்பாலும் ஒத்திருக்கின்றது. எந்த விசாரணையும் இல்லாமல் சந்தேக நபரை இரண்டு ஆண்டுகள் தடுப்புக் காவலில் வைப்பதற்கு இச்சட்டம் வகை செய்கின்றது.

நிலப் பகுதி மக்கள் பகைமையையோ வெறுப்பையோ தூண்டினால் இச்சட்டத்தின் கீழ் அவர்களை சிறைப்பிடிக்கலாம். அதன்படி காஷ்மீரில் தன்னுரிமை பற்றிப் பேசினாலோ அல்லது இஸ்லாத்தின் பேரில் பேசினாலோ எந்த விசாரணையும் இன்றி ஒருவரை இரண்டு ஆண்டுகள் சிறை வைக்கலாம்.

இச்சட்டத்தின் ஆட்கள் தடுத்து வைக்கப்பட்டதை எதிர்த்து வழக்குத் தொடுத்தால் அந்த வழக்கை விசாரணைக்கே எடுத்துக் கொள்வதில்லை என சட்டத்தரணிகள் முறைப்பாடு செய்துள்ளனர். அப்படியே அவை எடுத்துக் கொள்ளப்பட்டாலும் சிறைத் தண்டனை முடித்துக் கொள்ளப்பட்ட பின்னரே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இச்சட்டத்தின் கீழ் இதுவரை 30,000 பேர் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர்.

ஜம்மு காஷ்மீரில் மிக விரிவாகப் பயன்படுத்தப்படும் அடுத்த சட்டம் தடா எனப்படுகின்றது. அதில் 3ஆம் பிரிவு காஷ்மீரை பிரிக்கும் நோக்கம் கொண்ட வன்முறைச் செயல்களைக் குறிப்பிடுகின்றது. நான் காவது பிரிவு பிரிவினை குறித்துப் பேசுவதோ எழுதுவதோ ஆயுள் தண்டனை குற்றம் என்கிறது. வேறு சொற்களில் சொல்வதானால் தன்னுரிமை, நேரடி வாக்கெடுப்பு ஆகியன குறித்துப் பேசுவதும் எழுதுவதும் ஆயுள் தண்டனை குற்றமாகும்.

இச்சட்டத்தின் கீழ் இதுவரை 25,000 பேர் சிறைப்பிடிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்படுவதில்லை. தடா வழக்குகளில் பிணையில் வருவது மிகக் கடினமானது. சட்டப்படி பிணை தரப்பட வேண்டும். ஆனால், ஜம்மு காஷ்மீரில் தடா வழக்குகளுக்கு பிணை தரப்படுவதில்ல. தடா வழக்குகளில் இதுவரை யாரும் தண்டிக்கப்படவுமில்லை.

பயங்கரவாதக் குற்றங்கள் அதிகரித்து வருகிறது என அரசு ஓலமிட்டபோதும் யாரையும் முறையாகத் தண்டிப்பதற்கான முயற்சி மேற் கொள்ளப்படவில்லை. மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இச்சட்டம் மிகக் குரூரமாகக் கையாளப்படுகின்றது. 1990 ஆம் ஆண்டு ஜம்மு காஷ்மீரில் ஆளுநராக இருந்த ஜக் மோகன் இச்சட்டத்தை விரிவாகப் பயன்படுத்தினார். கொடுமையான அடக்குமுறைகளைச் செயல்படுத்தவும் இதனைப் பயன்படுத்தினார்.

குற்றவியல் சட்ட திருத்தச் சட்டம் 1 இன் படி சங்கங்களோ அரசியல் கட்சிகளோ இதன் கீழ் சட்டவிரோதம் எனத் தடைசெய்யப்பட முடியும். இத்தகைய தடையை விசாரிக்க ஒரு தீர்ப்பாயம் அமைக்கும் பிரிவு ஒன்றும் இருக் கின்றது. அதன் முடிவே இறுதியானது. எனினும், ஜக் மோகன் தீர்ப்பாயம் அமைக்க வேண்டும் என்ற விதியை நீக்க ஒரு திருத்தம் கொண்டு வந்தார். ஆகவே இச்சட்டத்தின் கீழ் மாநில நிர்வாகம் எடுக்கும் முடிவே இறுதியானதாக மாற்றப்பட்டது. பின்னர் ஜம்மு காஷ்மீர் பகுதியில் அரசியல் ரீதியில் செயல்பட்டு வந்த கட்சிகள், அமைப்புகள் அனைத்து தடை செய்யப்பட்டன.

1990 ஜூலை 05 இல் ஜம்மு காஷ்மீரில் ஆயுதப் படையினருக்கும் எல்லையற்ற அதிகாரங்களைக் குவிக்கும் இரு சட்டங்கள் கொண்டு வரப்பட்டன. அதில் ஒன்று காஷ்மீரில் நிலை கொண்டுள்ள ஆயுதப் படையினருக்கான சிறப்பு அதிகாரச் சட்டம். அடுத்தது, ஜம்மு காஷ்மீர் கலகப் பகுதிச் சட்டம். முதல் பகுதி ஆயுதப் படையினருக்கு உரியது. அடுத்தது காவல் துறையினருக்கு உரியது. தேடுதல், பறிமுதல், கைது, வன்முறையைப் பிரயோகித்தல் போன்ற அதிகாரங்களை இவை தருகின்றன. ஆயுதங்களை வைத்திருக்கும் அல்லது ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படும் சாத்தியமுள்ள பொருட்களை வைத்திருக்கும் நபர்களுக்கு எதிராக அல்லது ஐந்து நபர்களுக்கு மேல் ஒன்று கூட முடியாது என்ற தடையை மீறும் எந்த நபருக்கும் எதிராக ஆயுதப் படையினர் இந்தச் சட்டப் படி நடவடிக்கை எடுக்கலாம். அத்தகைய நபர்களை சுட்டுக் கொல்வதற்குக் கூட இச்சட்டம் அனுமதிக்கின்றது.

கலகப் பகுதிச் சட்டம் மேற்சொன்ன அனுமதியோடு கூடுதலாக இன்னொரு அதிகாரத்தையும் வழங்குகிறது. "பொது ஒழுங்கிற்கு ஊறு விளைவிக்கும் செயலைச் செய்யும் எந்த நபர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்த அது அனுமதிக்கின்றது. இது போன்ற சட்டங்களும் சிறப்பு அதிகாரங்களும் காஷ்மீரில் மக்களின் வாழ்வுரிமையை மீறுகின்றன. சுதந்திர நடமாட்டத்தைத் தடுக்கின்றன. பொது மக்கள் மீது துப்பாக்கிகளைத் திருப்புகின்றன.

அப்பாவிகளைக் கொல்வதற்கும் இளம் பெண்களை வல்லுறவுக்கு உட்படுத்துவதற்கும் வகை செய்கின்றன. ஏனெனில் இத்தகைய சிறப்பதிகாரம் வழங்கப்பட்டுள்ள இராணுவத்தின் மீது சட்டப்படி குற்றம் சுமத்தவோ வழக்குத் தொடரவோ விசாரணை மேற்கொள்ளவோ முடியாது. கொலைக் குற்றங்களுக்கு இந்திய அரசு சட்டப் பாதுகாப்பு வழங்கியுள்ளது.

காஷ்மீரின் தனித் தன்மை என்னவென்றால், அங்கு காவல் துறையை மத்திய அரசும் இராணுவமும் நம்புவதில்லை. காஷ்மீரிலுள்ள அனைவரும் தீவிரவாதிகள்தான் என ஆளுநர் தெரிவிப்பதையே டில்லி அரசாங்கம் நம்புகின்றது. அங்கு அனைவரும் இந்திய அரசாங்கத்தின் பார்வையில் தீவிரவாதிகளாகவே இருக்கிறார்கள். இந்தத் தீவிரவாதத்தை பாகிஸ்தான் தூண்டுகின்றது. இப்படியே 40 ஆண்டு கால காஷ்மீரின் வரலாறு தொடர்கின்றது.

இப்படியே இந்திய அரசாங்கம் சொல்லி வருவதில் ஏதேனும் அர்த்தம் இருக்கின்றதா என்ற கேள்விக்கு அதிகார வர்க்கம் பதில் கண்டிருக்க வேண்டும். ஆனால், அப்படி ஏதும் அவர்கள் சிந்திக்கவில்லை. அங்கு ஒரு அப்பட்டமான இராணுவ ஆட்சி தொடர்கிறது. மக் களை பயத்தில் உறைய வைத்து, பீதிமய மாக்கி, சுதந்திரத்தைப் பறிப்பதோடும்

(பக்.06)

## பொஸ்பரஸ் கரையினிலே...

### துருக்கியின் வீழ்ச்சியும் எழுச்சியும் - 18

2000 இன் தொடக்கத்தில் அர்பகானுக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்பு அமுலில் இருந்தபோது பழீலா கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடும் பிரிவும் துரதிஷ்டமானதே. மர்வா கவாக்ஸி குறிப்பிடுவதுபோன்று 1924 இல் இஸ்லாமிய கிலாபத் வீழ்ச்சியடைந்ததற்குப் பின்னர் நவீன துருக்கியில் இஸ்லாமியவாதிகளுக்கிடையில் ஏற்பட்ட முதற் கருத்து வேறுபாடு இதுவாகும். அதன் மூலம் அர்பகான் தொடங்கி வைத்த இஸ்லாமிய அரசியல் கலாசாரம் முடிந்து போய்விடும் என்றே அஞ்சப்பட்டது. இஸ்லாமியவாதிகளின் பிளவும் பிரிவும் மதச்சார்பற்ற சக்திகளுக்கு சாதகமாகி விடும் என்றே கருதப்பட்டது.



அர்துகானும் குல்லும் கட்சியிலிருந்து பிரிந்து போனமை கட்சியை பலவீனப்படுத்தி விடும் என்றே கருதப்பட்டது. ஆயினும், கட்சிக்குள் ஏற்பட்ட கருத்து வேறுபாடு ஒரு புதிய அத்தியாயத்தை தொடங்கி வைத்தது. 2001 இல் ஒரு புதிய கட்சி உருவானது. நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி என்பது அதன் பெயர். அர்தூகானும் குல்லும் தமது அரசியல் எதிர்கால நோக்கை அதன் மூலம் வெளிப்படுத்தினர்.

சீர்திருத்தத் திட்டங்களை செயல்படுத்தினர். துருக்கியில் இல்லாத இரண்டு விடயங்களை அக்கட்சி மையப்படுத்தியது. முதலாவது, மதச்சார்பற்ற கட்சிகளால் மறுக்கப்பட்ட நீதி. இரண்டாவது நீண்ட நாட்களாய் பொருளாதாரத்தில் பின்னடைந்து போயிருந்த துருக்கியின் அபிவிருத்தி.

கட்சியின் இறுதி இலக்கு அதன் பெயரிலேயே பிரதிபலித்தது. படிப்படியாக அக்கட்சி மக்கள் ஆதரவைப் பெற்றது. 2002 இல் இடம்பெற்ற பாராளுமன்றத் தேர்தலில் 550 ஆசனங்களில் 368 பெரும்பான்மை ஆனங்களை நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சி பெற்றுக்கொண்டது.

கட்சியின் தலைவர் அர்தூகான் மீது ஐந்தாண்டு கால அரசியல் செயற்பாடுகளுக்கு தடை விதிக்கப்பட்டிருந்ததனால் அப்துல்லாஹ் குல்லின் தலைமையில் புதிய அரசாங்கம் உருவாக்கப்பட்டது. சில மாதங்களின் பின்னர் கட்சியின் யாப்பு மாற்றப்பட்டு, அர்தூகான் பிரதமரானார். 2006 இல் நடைபெற்ற அடுத்த பாராளுமன்றத் தேர்தலில் ஒட்டுமொத்த 550 ஆசனங்களில் 331 ஆசனங்களை மீண்டும் பெற்று தனது செல்வாக்கை உறுதிப்படுத்திக் கொண்டார்.

அர்பகானை கையாண்டது போன்று அர்தூகானையும் இராணுவப் புரட்சி மூலம் கையாள்வதற்கு இராணுவம் சூழ்ச்சி செய்தது. ஆனால், அது வெற்றியளிக்கவில்லை. இராணுவத்தின் ஆலோசனைகளையும் பரிந்துரைகளையும் அர்தூகான் நிராகரித்தார். அறபு இஸ்லாமிய மத்ரஸாக்களில் மாணவர் சேர விடாமல் த்டுப்பதற்கு கட்டாயக் கல்வியின் கால அளவை 8 ஆண்டுகள் அதிகரிக்க வேண்டும் என இராணுவம் கட்டளையிட்டது. ஹிஜாப் தடை தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் என வலியுறுத்தியது.

இவை அனைத்தையும் புறக்கணித்த அர்தூகான், இராணுவத்துடன் நேரடியாக மோதிக் கொள்வதையோ மதச்சார்பற்ற அரசியல் யாப்பில் கைவைப்பதையோ கவனமாகத் தவிர்ந்து கொண்டார்.

2002 இல் அதிகாரத்தைக் கைப்பற்றிய அர்தூகான் அரசாங்கம் பல்வேறு அரசியல் பொருளாதார சாதனைகளை நிலை நாட்டியது. உலகப் பொருளாதார தர வரிசையில் 140 ஆவது இடத்திலிருந்த துருக்கியை 14 ஆவது இடத்திற்குக் கொண்டு வந்தது. வேலையற்றோர் பிரச்சினைக்கு பெருமளவு தீர்வு காணப்பட்டது. மொத்த தேசிய உற்பத்தியின் அளவு கணிசமாக உயர்த்தப்பட்டது.

நாட்டில் தலைவிரித்தாடிய பணவீக்கம் திருப்தியான அளவுக்குக் குறைக்கப்பட்டது. அந்நியச் செயலாவணி அதிகரித்ததோடு, ஏற்றுமதியும் அதிகரித்தது. சர்வதேச நாணய நிதியத்திற்கு துருக்கி வழங்க இருந்த கடன் முற்றாக மீளச் செலுத்தப்பட்டது. விமானம் கட்டும் கைத்தொழில் போன்ற தொழில்நுட்பத் துறைகளில் துருக்கி வேகமாக முன்னேறியது.

நீதிக்கும் அபிவிருத்திக்குமான கட்சியின் கடந்த 15 ஆண்டு கால ஆட்சியில் அவர்கள் சாதித்தவை குறித்து துருக்கியின் முன்னணி அரசியல் ஆய்வாளர் கலாநிதி அவ்ரகான் முஹம்மத் அலி விரிவாக ஆராய்ந்துள்ளார். பொருளாதாரம், அரசியல் ஸ்திரப்பாடு, கலாச்சார மாற்றம், இரர்ணுவக் களையெடுப்பு என்று AKP யின் சாதனைகளும் சீர்திருத்தங்களும் விரிந்து செல்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• மிப்றாஹ் முஸ்தபா

# மாயக்கல்லி: மலையில் செதுக்கப்படும் இனவாதச் சிலை

இந்த நாட்டில் சிறுபான்மையின ருக்கெதிரான பௌத்த இனவாதிகளின் அத்துமீறிய செயற்பாடுகள் நாடளாவிய ரீதியில் ஒன்றன் பின் ஒன்றாக தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அந்த வகையில் கடந்த சில வாரங்களாக பிரதான பேசுபொருளாக இறக்காமம் பிரதேசத்தில் அமைந்துள்ள மாயக்கல்லி மலையடிவாரத்தில் தலைதூக்கியுள்ள இனவாதம் மாறியிருக்கிறது.

கடந்த மாதம் 25ம் திகதி மாயக்கல்லி மலையடிவாரத்துக்கு வருகை தந்த ஞானசார தேரர் தலைமையிலான இனவாதிகள், இலங்கை ஒரு பௌத்த நாடு. பெரும்பான்மை சிங்கள மக்களைக் கொண்ட இந்த நாட்டில் மேலும் 10000 விகாரைகளை அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள இருக்கின்றோம். இதனை யாராலும் தடுக்க முடியாது. கிழக்கின் பல இடங்களில் முஸ்லிம்கள் தொல்பொருள் மற்றும் வரலாற்றுப் பிரதேசங்களை ஆக்கிரமித்திருக்கின்றனர். இவையனைத்தையும் நாம் படிப்படியாக விடுவிப்போம் என கத்தி விட்டுச் சென்றிருக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் இறக்காமம் 7 ஆம் கிராம சேவகர் பிரிவான மாணிக்கமடுவில்தான் மாயக்கல்லி மலை அமைந்திருக்கின்றது. இறக்காமம் பிரதேசத்திலுள்ள 12 கிராம சேவகர் பிரிவுகளில் 4300 குடும்பங்கள் வசித்து வருகின்றன. தமது பிரதேசத்தைச் சுற்றி இருக்கின்ற தமிழ், சிங்கள மக்களோடு இறக்காமம் மக்கள் பல ஆண்டுகளாக நெருங்கிய தொடர்புகளைப் பேணி வருகின்றனர்.



இந்த நாட்டில் புராதனச் சின்னங்களையும் வரலாற்றுத் தடயங்களையும் கொண்டிருக்கின்ற ஒரு பிரதேசமாக இறக்காமம் திகழ்கின்றது. இறக்காமத்திலுள்ள அத்தகைய 19 தொல்பொருள் சின்னங்கள் 2014-10-10 ஆம் திகதி தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமானவையாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் பிரகடனப் படுத்தப்பட்டது.

அவ்வாறு வர்த்தமானி அறிவித்தல் மூலமாக பிரகடனப்படுத்தப்பட்ட தொல்பொருள் சின்னங்களுள் ஒன்றுதான் மாணிக்கமடு பிரதேசத்தில் அமைந்துள்ள மாயக்கல்லி மலையடிவாரமாகும். இந்த நிலையில் 2016-10-27 ஆம் திகதி பௌத்த தேரர்கள் தலைமையிலான குழு பொலிஸ் பாதுகாப்போடு குறித்த மலையடிவாரத்துக்கு வருகை தந்து அங்கு புத்தர் சிலையை வைத்தபோதுதான் இப்பிரதேச மக்கள் இதற்குப் பின்னால் இனவாதிகளின் மறைமுகமான திட்டங்கள் இருக்கலாம் என சந்தேகப்பட்டனர்.

என்றாலும் சிலை வைத்ததற்காக பாரிய ஆர்ப்பாட்டங்களை செய்து பெரும்பான்மையின மக்களின் மனங்களைப் புண்படுத்தக் கூடாது என்ற நல்லெண்ணத்தோடு இந்தப் பிரச்சினையை சுமுகமான முறையில் தீர்த்துக் கொள்ளவே விரும்பினர். முஸ்லிம் அரசியல் தலைமைகளாலும் இந்தப் பிரச்சினை விரைவில் தீர்த்து வைக்கப்படும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்டது.

முஸ்லிம்களின் அமைதியையும் மென்மைப் போக்கையும் பயன்படுத்திக் கொண்ட இனவாதிகள் இங்கு சிலை வைத்ததால் யாருக்கும் பிரச்சினை இல்லை என்று சொல்லிக் கொண்டு மலைக்கு அருகிலுள்ள பள்ளியான் செயினுத்தீன் மற்றும் ஆதம்லெப்பை சமீமா ஆகியோருக்கு சொந்தமான இரண்டரை ஏக்கர் காணியில் விகாரை அமைப்பதற்கான செயற்பாடுகளை அண்மையில் முன்னெடுத்திருந்தனர்.

முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகளுக்குள் யாருடைய அனுமதியுமின்றி நுழைந்து காணிகளை ஆக்கிரமிக்கும் இந்த நடவடிக்கைக்கெதிராக பிரதேச மக்களுக்கும் இனவாதிகளுக்குமிடையில் கைகலப்பொன்று உருவாகும் சூழ்நிலையும் ஏற்பட்டது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் வழக்குத் தாக்கல் செய்ததன் அடிப்படையில் மாயக்கல்லி மலைப் பிரதேசத்துக்கு மே மாதம் 17 ஆம் திகதி வரை எவரும் நுழையாதவாறு அம்பாறை மேலதிக மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது. இருப்பினும் நீதிமன்ற உத்தரவு, நாட்டின் சட்டங்கள் என்பவற்றை மதிக்கும் மனோநிலையில் பௌத்த இனவாதிகள் இல்லை என்பதையே அண்மைக்கால அவர்களது நடவடிக்கைகள் எடுத்துக் காட்டுகின்றன.

அதேபோன்று மாயக்கல்லி மலை இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. ஆனால் இனவாதிகள் சிங்கள மக்களின் உணர்வுகளைத் தூண்டுவதற்காக இது தீகவாபியில் அமைந்துள்ளதாக பொய்ப் பிரச்சாரத்தையும் கட்டவிழ்த்துள்ளனர்.

இந்த நாட்டில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரேயொரு மாவட்டமான அம்பாறையில் முஸ்லிம்களின் இனப்பரம்பலை குறைப்பதற்காக திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படும் ஒரு செயற்பாடாகவே இந்த விவகாரம் காணப்படுகின்றது.

மாயக்கல்லி மலை விவகாரத்தில் முஸ்லிம்களின் பக்கமே நீதி இருக்கின்றது என்பதற்கான பல்வேறு ஆதாரங்கள் காணப்படுகின்றன. விகாரை அமைப்பதற்காக இனவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு 1990-08-30 ஆம் திகதி அம்பாறை அரசாங்க அதிபரால் காணிக் கட்டளைச் சட்டத்தின் 19:02 பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள நிரந்தர காணி உறுதிப் பத்திரங்கள் (LDO) வழங்கப்பட்டிருக்கின்றன. இதனால் இந்த மக்களின் காணிகளை இலகுவில் அரசாங்கத்தினால் கையகப்படுத்த முடியாது. இத்தகைய இனவாதிகளின் கண்மூடித்தனமான செயற்பாடுகளை இந்த அரசாங்கமும் கண்டுகொள்ளாமல் இருந்தால் நாட்டின் அமைதிக்கும் நல்லிணக்கத்துக்கும் பாரிய அச்சுறுத்தலாக அது மாறிவிடும்.

அந்தவகையில், தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்படும் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் பகுதிகள் இந்த நாட்டினுடைய சொத்து என்ற அடிப்படை உண்மையை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும். அவற்றைப் பாதுகாப்பது இந்த நாட்டிலுள்ள அனைத்துப் பிரஜைகளினதும் கடமையாகும். யுத்த காலங்களில் இந்த சொத்துக்களை சேதப்படுத்தாமல் அவற்றைப் பாதுகாத்துக் கொடுத்தது இப்பிரதேச மக்கள்தான் என்ற யதார்த்தத்தையும் மறந்து விடக் கூடாது. தொல்பொருள் பகுதிகளுக்குள் நுழைந்து மத ரீதியாக அவற்றை ஆக்கிரமிப்பது நாட்டின் சட்டத்திற்கு முரணானது. எனவே, நாட்டில் சட்டத்தையும் நீதியையும் அரசாங்கம் நிலைநாட்ட வேண்டும் என்பதே இப்பிரதேச மக்களின் ஏக்கமாகக் காணப்படுகின்றது.

அதேநேரம் அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அவற்றில் கடமையாற்றும் உயரதிகாரிகள் சட்டத்தையும் நீதியையும் பக்கச்சார்பின்றி அனைத்து மக்களுக்கும் சரிசமமான முறையில் செயற்படுத்த வேண்டும். இனவாதிகளின் செயற்பாடுகள் இன்னுமின்னும் தொடர்ந்து கொண்டு போனால், அரசாங்கமும் அவற்றை கண்டுகொள்ளாமல் இருந்தால் இந்த நாட்டில் சமாதானத்தையும் அமைதியையும் நிரந்தரமாகவே ஏற்படுத்த முடியாமல் போய்விடும்.

மாயக்கல்லி மலையடிவாரத்தில் தற்போது குடிகொண்டிருக்கும் இனவாத செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டுள்ள இறக்காமம் மாணிக்கமடு பிரதேசத்துக்குச் சென்று, அங்குள்ள மக்கள், பொறுப்பதிகாரிகள் மற்றும் இந்த விவகாரத்தில் முன்னின்று செயற்படும் ஊர்ப் பிரதிநிதிகள் ஆகியோரோடு மேற்கொண்ட கலந்துரையாடலை இங்கு தொகுத்துத் தருகின்றோம்.



**பள்ளியான் செயினுத்தீன்**
ஆக்கிரமிக்கப்பட்ட காணியின் உரிமையாளர்

எனக்கு தற்போது 51 வயதாகின்றது. நான் பிறப்பதற்கு முன்பிருந்தே எனது வாப்பா இந்தக் காணியில் விவசாயம் செய்து வந்தார். வாப்பா 1997ஆம் ஆண்டு மரணமடைந்ததன் பின்னர் நான்தான் இந்தக் காணியை பராமரித்து வருகின்றேன். இந்தக் காணியில் செய்யும் விவசாயம் மூலமாகவே எமது வாழ்க்கையை நடாத்தி வருகின்றோம்.

இரண்டு, மூன்று வருடங்களுக்கு முன் எமது காணிக்கு அருகிலுள்ள மாயக்கல்லி மலை மற்றும் அதைச் சுற்றியுள்ள சில பகுதிகளை தொல்பொருள் திணைக்களத்துக்குரியதாக அடையாளப்படுத்தி, அப்பகுதிக்கு எம்மை நுழையக் கூடாது எனக் கூறிச் சென்றார்கள். இவ்வாறான நிலையில் கடந்த ஆண்டு மாயக்கல்லி மலையில் கல்முனை விகாராதிபதியின் தலைமையில் இனவாதக் குழு ஒன்று வந்து சிலை வைத்துள்ளதாக கேள்விப்பட்டு குறித்த இடத்துக்கு செல்வதற்காக சிலரை அழைத்த போது அவர்கள் யாரும் என்னோடு வருவதற்கு தயாராக இருக்கவில்லை.

நான் தனியாக அங்கு சென்று பார்த்த போது பொலிஸ் பாதுகாப்போடு ஒரு குழு மலையில் சிலையை வைத்த நிலையில் காணப்பட்டது. அங்கிருந்த தேரர்கள் எதற்காக நீ இங்கு வந்தாய் என என்னை அச்சுறுத்தினார்கள். அதற்கு நான் இது என்னுடைய காணி என்று சொன்னபோது, இந்த மலையில் சிலை வைத்தால் உனக்கு ஏதாவது பிரச்சினையா என்று கேட்டார்கள். மலையில் சிலை வைத்தால் எனக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. இது தொல்பொருள் திணைக்களத்திற்கு உரித்தான சொத்து. எனது காணியில் நீங்கள் ஏதாவது செய்தால்தான் பிரச்சினை என்று கூறிய போது, உங்களுடைய காணி எமக்குத் தேவையில்லை. இந்த மலைதான் எமக்குத் தேவை என்றார்கள். பொலிஸார் கூட எனது காணிக்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாது என்று என்னிடம் உறுதியாகத் தெரிவித்தார்கள்.

சிலை வைத்ததன் காரணமாக ஏதாவது அச்சுறுத்தல் ஏற்படலாம் அல்லது சிலை உடைக்கப்படலாம் என்ற அச்சத்தினால் பொலிஸார் வழக்கொன்றைப் பதிவு செய்திருந்தனர். வழக்குப் போய்க் கொண்டிருப்பதால் சிலை வைத்ததற்கு எதிராக யாரும் ஆர்ப்பாட்டம் செய்ய வேண்டாம் என பள்ளிவாயலில் அறிவித்தார்கள். இதனால் மக்களும் அமைதியாக இருந்தனர். இந்த நிலையில் திடீரென பொலிஸார் வழக்கை வாபஸ் வாங்கினர்.


இந்த வழக்கு கைவிடப்பட்டு ஓரிரு வாரங்களில் எனது காணிக்குள் ஒரு குழு அத்துமீறி நுழைந்து காணியை துப்பரவு செய்து கொண்டிருந்தனர். நானும் பதறியடித்துக் கொண்டு குறித்த இடத்துக்குச் சென்று இங்கு நுழைய உங்களுக்கு யார் அனுமதி அளித்தது எனக் கேட்டேன். எங்களுக்கு மேலிடத்தில் இருந்து அனுமதி வந்திருக்கிறது. உங்களுக்கு அனைத்தையும் விளக்க வேண்டிய அவசியம் இல்லை என்ற பதில் அவர்களிடமிருந்து வந்தது.

இந்த அநியாயத்திற்கு எதிராக தமண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை செய்தேன். முறைப்பாடு செய்து அடுத்த நாள் எனது காணிக்குள் விகாரை அமைப்பதற்காக அடிக்கல் நாட்டுவதற்கான வேலைகளும், அவர்களது மதச் சடங்குகளும் இடம்பெற்றுக்கொண்டிருந்தன. முழு ஊருமே அந்த இடத்தில் திரண்டு விட்டது. இரு தரப்புக்குமிடையே பாரிய கைகலப்பொன்று உருவாகக்கூடிய சூழல் ஏற்பட்டது. இறுதியில் அம்பாறை பொலிஸ் உயரதிகாரிகள் குறித்த இடத்துக்கு வருகை தந்தே இரு தரப்பினரையும் அங்கிருந்து அகற்றினர்.

கடந்த சில தினங்களாக எனது கையெழுத்தை என்னிடமிருந்து பலவந்தமாகவேனும் பெற்று காணியை சுவீகரித்துக் கொள்வதற்காக அரசாங்க அதிகாரிகள் சிலர் தேடிக்கொண்டிருக்கின்றனர். எனது காணிக்குப் பதிலாக வேறொரு காணியைப் பெற்றுத் தருவதாகக் கூறுகின்றனர்.

ஆரம்பத்தில் உங்களது காணி எங்களுக்குத் தேவையில்லை. இந்த மலைதான் எமக்குத் தேவை என்று கூறிய இவர்களை எவ்வாறு நம்புவது? இந்தப் பிரச்சினை காரணமாக என்னால் இன்று சுதந்திரமாக நடமாட முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது.

எனது காணியை உரியவர்கள் மீட்டுத் தந்தால் அது பெரியதொரு உதவியாக இருக்கும். இந்த விடயத்தில் எனக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பதை இந்த அரசாங்கத்திடம்தான் நான் எதிர்பார்த்து நிற்கிறேன்.



**எம்.எம். நஸீர்**
பிரதேச செயலாளர் - இறக்காமம்

தற்போது இனவாதிகளின் செயற்பாடுகளைத் தடுக்கும் வகையிலும் நீதியை நிலைநாட்டும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கிழக்கு மாகாண சபையால் முதலமைச்சரின் தலைமையில் [illegible] றது. இந்தக் குழுவில் முதலமைச்சரோடு மாகாணக் கல்வி அமைச்சர் சி. தண்டாயுதபாணி, வீதி அபிவிருத்தி அமைச்சர் ஆரியவதி கலப்பதி, மாகாண சபை உறுப்பினர் சுபைர் மற்றும் அம்பாறை மாவட்ட மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இந்தக் குழு மாவட்ட அரசாங்க அதிபர், இறக்காமம் பிரதேச செயலாளர், தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள், மாகாணக் காணி ஆணையாளர் மற்றும் தமண பொலிஸ் உயரதிகாரிகள் ஆகியோரை அழைத்து பிரச்சினை தொடர்பில் நீதியான முறையில் ஆராய்ந்து இந்தக் குழு முன்மொழியும் தீர்மானத்தையே எதிர்காலத்தில் அமுல்படுத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

மே மாதம் 23ம் திகதிக்கு முன்னர் இந்தக் குழு அறிக்கையை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசாங்க அதிகாரிகள் தமது செயற்பாடுகளை சுதந்திரமாக முன்னெடுப்பதற்கு இனவாதிகள் முட்டுக்கட்டையாக இருக்கின்றனர். அதேபோன்று பொலிஸாரும் அவர்களது இனத்துக்கு சார்பாகவே நடந்து கொள்கின்றனர். நீதிமன்ற உத்தரவையும் மீறி தனியார் காணிக்குள் அத்துமீறி நுழைந்து காணியை துப்பரவு செய்தவர்களை பொலிஸார் இதுவரை கைது செய்யவில்லை. முஸ்லிம்கள் இதே வேலையைச் செய்திருந்தால் உடனடியாகக் கைது செய்திருப்பார்கள். சட்டம் என்பது இந்த நாட்டிலுள்ள அனைவருக்கும் சமமாகக் காணப்பட வேண்டும்.

இந்தப் பிரச்சினை தொடர்பில் உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதற்கு அரசியல்வாதிகள் கரிசனையோடு செயற்பட வேண்டும். அரசியல் மட்டத்திலேயே இதற்கான தீர்வினைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருக்கும். சிங்கள உயரதிகாரிகள் இனவாதிகளின் பக்கம் தவறு இருக்கிறது எனத் தெரிந்தும் அவர்களுக்கு எதிராக செயற்படுவதற்கு பயப்படுகின்றனர். எனவே, மக்கள் நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்து அதனூடாக நீதியைப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்க வேண்டும். உண்மையிலேயே இந்தப் பிரச்சினையில் முஸ்லிம்களின் பக்கமே முழுமையாக நியாயம் இருக்கின்றது.



**மௌலவி எம்.எல். சுல்பிகார்**
தலைவர்- ஜாமிஉத் தைய்யார் ஜும்ஆப் பள்ளிவாயல், இறக்காமம்

இறக்காமத்தைச் சூழ 4 பௌத்த விகாரைகள் காணப்படுகின்றன. அந்த விகாரைகளோடும் பௌத்த மதகுருமார்களோடும் நாம் மிகவும் நெருக்கமாகவும் ஒற்றுமையுடனும் பழகி வருகின்றோம். எந்தளவுக்கென்றால் பௌத்த விகாரைகளின் கட்டிட நிர்மாணத்துக்கு எமது மக்கள் கணிசமான அளவு பங்களிப்புச் செய்திருக்கின்றனர். அதேபோன்று சிங்கள மக்களும் எம்மோடு நல்ல முறையில் பழகி வருகின்றனர்.

இவ்வாறு முஸ்லிம்களும் சிங்களவர்களும் நீண்ட காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வரும் ஒரு கிராமத்தில் வேறு பிரதேசங்களில் இருந்து வந்து இனவாதக் குழுக்கள் மாயக்கல்லி மலையில் புத்தர் சிலையை வைத்து மத ரீதியான பிரச்சினையை இங்கு உருவாக்கப் பார்க்கின்றனர். இந்த மலை இறக்காமத்திலுள்ள மாணிக்கமடு பிரதேசத்திலேயே அமைந்துள்ளது.

இனவாதிகள் தீகவாபியில் அமைந்துள்ள மாயக்கல்லி மலை என பிரச்சினையை திசைதிருப்பப் பார்க்கின்றனர். இனவாதிகள் குறித்த மலையில் சிலை வைத்தவுடன் ஆர்ப்பாட்டங்களை செய்து இதனைப் பெரிதுபடுத்தாமல் பேச்சுவார்த்தை மூலமாக தீர்த்துக் கொள்வோம் என்ற அடிப்படையில் அம்பாறை அரசாங்க அதிபரிடம் இந்தப் பிரச்சினையை எத்தி வைத்தோம். ஆனால், எவருமே உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. கடைசியில் எமக்கு சொந்தமான காணிகளில் விகாரை அமைக்குமளவுக்கு நிலைமை மாறியிருக்கின்றது.

அண்மையில் இந்தப் பிரதேச மக்களுக்குச் சொந்தமான காணிகளுக்குள் நுழைந்து விகாரை அமைப்பதற்காக குறித்த காணிகளில் யாருடைய அனுமதியும் இல்லாமல் துப்பரவு செய்வதைக் கண்ட மக்கள் கடுமையாக எதிர்த்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் பிரதேச மக்களுக்கும் பௌத்த இனவாதிகளுக்குமிடையே பாரிய மோதலொன்று உருவாகும் நிலை ஏற்பட்டது. அங்கு வந்திருந்த ஒரு தேரர் என்னைப் பார்த்து அந்த மௌலவிக்கும் அடி என்று கூறினார். அங்கிருந்த ஒருவன் என்னை அடிப்பதற்காக மண்வெட்டியைத் தூக்கினான்.

இதன்போது அம்பாறை பொலிஸ் பொறுப்பதிகாரி குறித்த இடத்துக்கு விரைந்து ஒரு முடிவு கிடைக்கும் வரையில் இரு தரப்பினரும் இந்தக் காணிக்குள் நுழையக் கூடாது என உத்தரவு பிறப்பித்தார். இவ்வாறான நிலையில் சமாதானத்தை சீர்குலைப்பதாக எனக்கெதிராக நீதிமன்றத்திலிருந்து கடிதம் வந்திருக்கின்றது. (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக மாற்றத்தில் பெண்களின் பங்களிப்பு சரி பாதியாகக் காணப்பட வேண்டும்



பர்ஸானா ஹபீப் - தலைவர்
Association for Muslim Women's Advancement (AMWA)

**• முஸ்லிம் சமூகத்திலே பெண்கள் அமைப்புக்கள் குறைவாகவே இருக்கின்றன. இந்த நிலையில் AMWA உருவாக்கப்பட்டதன் பின்னணியை விளக்குவீர்களா?**

முஸ்லிம் சமூகத்தில் பெண்கள் அமைப்புக்கள் குறைவாக இருந்த நிலையிலேயே AMWA வின் தோற்றம் நிகழ்ந்தது. சுமார் 20 வருட கால வரலாற்றைக் கொண்ட AMWA வின் உருவாக்கப் பின்னணியைப் பொறுத்தவரை எமது சமூகத்திலே பெண்கள் மத்தியில் இஸ்லாத்தைப் பூரண வடிவில் விளங்கி செயற்படுத்துகின்ற நிலைமை இல்லாமல் போய், இந்திய மேற்கத்தேய கலாசாரங்களை இஸ்லாம் என்ற பெயரில் பின்பற்றுகின்ற நிலைமை காணப்பட்டது.

இந்த நிலைமை தொடர்வது சமூகத்துக்கு ஆரோக்கியமானது அல்ல. இவ்வாறு வீழ்ந்து செல்லும் சமூகத்தினை மொத்தமாக புனர்நிர்மாணம் செய்ய வேண்டிய தேவையும், இஸ்லாம் அதன் பூரண வடிவில் பின்பற்றப்பட வேண்டிய தேவையும் காணப்பட்டது. அதற்கான வழிகாட்டலை மிகச் சரியாக சமூகத்துக்கு -குறிப்பாக பெண்களுக்கும்- வழங்க வேண்டிய ஒரே நோக்கத்தின் அடிப்படையிலேயே AMWA இன் உருவாக்கம் நிகழ்ந்திருக்கின்றது.

மேலும் பெண்கள் மத்தியில் இஸ்லாத்தைக் கற்று, அதனை விளங்கி அதன் படி வாழ வேண்டும் என்ற உணர்வு தோற்றுவிக்கப்பட வேண்டும். பெண்கள் சிறந்த ஆளுமைப் பண்பு கொண்டவர்களாகவும், இஸ்லாமியப் பெறுமானங்களைப் பேணி வாழ்வதற்கான வழிகாட்டலைத் தொடர்ந்தும் வழங்குவதும் AMWA இன் உருவாக்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

**• உங்களது நோக்கங்களை அடைந்து கொள்ளும் வகையில் எந்த விதமான வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்றீர்கள்?**

ஒரு குழந்தை தாயின் கருவறையிலிருந்து வெளியாகி, அது வளர்ந்து திருமணம் முடித்து மரணிக்கும் வரையான அனைத்துக் கட்டங்களுக்கும் தேவையான வழிகாட்டல் நிகழ்ச்சிகளை நாம் நடாத்தி வருகின்றோம்.

சிறுமிகளுக்கான (4-10 வயது வரை) விஷேட பாடத் திட்டத்துடன் கூடிய பாடநெறிகளை நாம் நடாத்துகின்றோம்.

அத்துடன் முன்பதின் பருவ மாணவிகளுக்கான (11-13 வயது வரை) விஷேட பாடத்திட்டமும் நிகழ்ச்சித் திட்டங்களையும் நாம் எமது செயற்பாடுகளில் உள்ளடக்கியுள்ளோம்.

பதின்பருவத்தினரை (14 வயதுக்கு மேற்பட்ட) சரியான முறையில் கல்வி, ஒழுக்க ரீதியாக பயிற்றுவிக்கக் கூடிய நிகழ்ச்சிகள் எம்மிடம் காணப்படுகின்றன. பல்கலைக்கழக மாணவிகளுக்கான விஷேட வழிகாட்டல்கள், பயிற்சிகளை நாம் நடாத்தி வருகின்றோம். வளர்ந்தவர்களுக்கான பல்வேறு நிகழ்ச்சிகள் எம்மிடம் காணப்படுகின்றன.

எமது வேலைத் திட்டங்களில் முக்கியமானவற்றை பின்வருமாறு குறிப்பிட முடியும். விஷேட பாடத்திட்டங்களைக் கொண்ட பாலர் பாடசாலைகள், சிறுவர்களுக்கான அல்குர்ஆன் மத்ரஸாக்கள், சிறுவர்களுக்கான அத்பால் நிகழ்ச்சிகள், முன்பதின் பருவத்தினருக்கான ஸஹ்ராத் நிகழ்ச்சிகள், முகாம்கள், சுற்றுலாக்கள், பதின் பருவத்தினருக்கான ஒழுக்க மேம்பாட்டு நிகழ்ச்சிகள், கல்வி வழிகாட்டல், ஊக்குவிப்பு நிகழ்ச்சிகள், தலைமைத்துவப் பயிற்சிகள், ஆளுமை விருத்தி நிகழ்ச்சிகள் என்பவை முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவையாகும்.

வளர்ந்தவர்களுக்கு திருமணத்திற்கு முன்னரான வழிகாட்டல்கள், இஸ்லாமிய குடும்ப வழிகாட்டல் வகுப்புக்கள், குழந்தை வளர்ப்பு, மௌலவியாக்களுக்கான விசேட நிகழ்ச்சிகள் மற்றும் பயிற்சிகள் எனப் பல்வேறுவகையான நிகழ்ச்சிகள் எம்மிடம் காணப்படுகின்றன.

**• சமூக மாற்றத்துக்கு AMWA வின் பங்களிப்பு எவ்வாறு உள்ளது?**

சமூக மாற்றம் என்கின்றபோது அதில் பெண்களது பங்களிப்பு சரி பாதியாகக் காணப்பட வேண்டும். இந்த சமூக மாற்றத்தில் பெண்களின் பங்களிப்பு முக்கியமானது மட்டுமல்ல, விசாலமானதும் கூட. ஒரு ஆணை விட பெண்ணின் சமூக வகிபாகம் பாரியது. வேறு எந்தத் தொழிலையும் செய்யாத ஒரு பெண் தாயாக, மனைவியாக, குடும்பத்தை கணவனுடன் சேர்ந்து நிர்வகிப்பவளாக, இப்படி தனக்குக் கீழுள்ளவர்களை வழிகாட்ட வேண்டிய இடத்தில் இருக்கின்றாள். தொழில் செய்யும் பெண்ணாக இருந்தால் அவளது சமூக மாற்றத்திற்கான பங்களிப்பு இன்னும் அதிகமாக இருக்கும். எது எப்படியோ பெண்களில் ஏற்படும் மாற்றம் சமூகத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும்.

அந்த வகையில் ஆளுமை மிக்க பெண் தனிமனிதர்களை உருவாக்குகின்றோம். அதனடியாக உருவாகின்ற குடும்பங்களை நாம் உருவாக்குகின்றோம். அத்துடன் நின்று விடாமல் சமூக நிறுவனங்கள் பலவற்றில் எமது சகோதரிகள் தமது பங்களிப்புக்களை செய்து வருகின்றனர். பெண்கள் அமைப்புக்கள், பாடசாலைகள், மத்ரஸாக்கள் முதல் பல்கலைக்கழகங்கள் வரை அவர்களது பங்களிப்புக்கள் காணப்படுகின்றன.

**• AMWA அதன் வளர்ச்சிப் பாதையில் பயணிப்பதாக நீங்கள் உணர்கின்றீர்களா?**

அல்ஹம்துலில்லாஹ், அல்லாஹ்வின் மிகப் பெரிய அருளின் காரணமாகவும், AMWA சகோதரிகளின் கூட்டு ஒத்துழைப்பும் அதன் சகோதர நிறுவனங்களாக களத்தில் செயற்படுகின்ற சகோதரிகளது பங்களிப்பு, தியாகம், தொடரான செயற்பாடு என்பவற்றால் AMWA ஆரம்பித்த நிலையுடன் ஒப்பிடும்போது தற்போது பாரிய முன்னேற்றங்களை அவதானிக்க முடிகின்றது. 90 களில் கொழும்பில் முதலாவதாக தனது செயற்பாடுகளை ஆரம்பித்த AMWA, தற்போது நாடளாவிய ரீதியில் 43 கிளை நிறுவனங்களைக் கொண்டுள்ளது.

ஆரம்பத்தில் எமது அங்கத்தவர்களைப் பயிற்றுவிப்பதில் அதிக கவனம் செலுத்தி வந்தோம். AMWA இன் அடுத்த வளர்ச்சிக் கட்டமாக அங்கத்தவர்களைப் பயிற்றுவிப்பதுடன் சமூக செயற்பாடுகளிலும் தற்போது அதிக ஈடுபாடு காட்டி வருகின்றோம். எமது வேலைத் திட்டங்களில் ஆயிரக்கணக்கான பெண்கள் ஒவ்வொரு வருடமும் கலந்து கொள்கின்றார்கள் என்பதனை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அத்துடன் கடந்த வருடம் தொடக்கம் சகோதர இனத்தவர்களுடன் இணைந்து சில வேலைத்திட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றமை இங்கு குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டிய முக்கிய விடயமாகும்.

**• பெண்களுக்கு மத்தியில் உழைக்கின்ற நிறுவனங்கள் கூட்டாக இயங்க வேண்டிய தேவை ஏதும் இருப்பதாக அவதானிக்கின்றீர்களா?**

நிச்சயமாக. பெண்கள் மத்தியில் பாரிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டிய கட்டாயமான சூழலில் நாங்கள் இருக்கின்றோம். இப்பாரிய பணியை ஒரு நிறுவனம் மட்டும் செய்து விட முடியாது. ஊர்களிலுள்ள சாதாரண பெண்களை வழிகாட்டுவது முதல் நாட்டிற்கான முஸ்லிம் பெண்களின் பங்களிப்பை வழங்க வைப்பது வரைக்கும் அவர்களை பயிற்றுவிப்பதுடன் ஊக்குவிக்க வேண்டிய தேவையும் எமக்கு முன்னால் உள்ளது. எனவே இதனை சரியாக செய்து முடிக்க பாரிய முயற்சிகள் தேவைப்படுகின்றன. இதற்கு பல்வேறு நிறுவனங்கள் மற்றும் தனிமனிதர்கள் இணைந்து உழைப்பது காலத்தின் தேவையாக உள்ளது.

நாட்டு நலனில் பங்கெடுத்தல், சகவாழ்வுக்காக உழைத்தல், நாட்டுக்காக உழைத்தல் போன்ற இன்றைய கால கட்டத்தின் அத்தியாவசியத் தேவையாக உள்ள விடயங்களிலும் எமது சகோதரிகள் ஈடுபட வேண்டிய கட்டத்தில் நாங்கள் இருக்கின்றோம். இப்படியான பாரிய பணிகளை நாம் மேற்கொள்ள நிச்சயமாக இணைந்த செயற்பாடே இன்றைய தேவை.

எப்போதும் இணைந்து வேலை செய்யும் மனோநிலையும் தயார்நிலையும் எம்மிடம் காணப்படுகின்றது. அத்துடன் பல்வேறு நிறுவனங்களுடனும் இணைந்து வேலை செய்த அனுபவமும் தாராளமாகவே எம்மிடம் இருக்கின்றது. சுனாமி, மூதூர் அனர்த்தம், வெள்ள அனர்த்தங்கள் போன்ற சந்தர்ப்பங்களில் நாம் இந்த வகையான அனுபவங்களைப் பெற்றுக் கொண்டோம். தொடர்ந்து எப்போதும் இணைந்து செயற்படுவதை வலியுறுத்தியும் வருகின்றோம்.

**• சவால்கள் நிறைந்த பயணமொன்றை துவங்கியிருக்கின்றீர்கள். நீங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் எத்தகையவை?**

குடும்பம், தொழில், சமூக சேவை என்கின்ற இந்த முக்கோணத்தில் சமநிலை பேணுவது மிகப் பாரிய சவாலாக எம் முன்னால் உள்ளது. இவ்வாறான சவால்களை பல பெண்கள் சமாளிக்கக் கஷ்டப்படுகின்றனர். அல்ஹம்து லில்லாஹ் அல்லாஹ்வின் உதவியால் நாம் பெற்றுக் கொண்ட பயிற்சிகளே எம்மை இதில் வெற்றி காண வைத்துள்ளது.

அதேபோல் மேற்படி விடயங்களில் சமநிலை பேணுவதற்காக வேண்டி எமது குடும்ப அங்கத்தவர்கள் தம்மாலான ஒத்துழைப்புக்களை வழங்கி வருகின்றமை இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய மிக முக்கியமானதும் மகிழ்ச்சியான விடயமாகும். அத்தோடு இவ்வாறு நாம் செயற்படுகின்ற போது அடைந்து கொள்ளும் ஆத்மானந்தத்தையும் திருப்தியையும் வார்த்தைகளில் சொல்லி முடிக்க முடியாது. அனுபவித்தால்தான் சுவையை அறியலாம்.

அல்குர்ஆனில் அல்லாஹுத்தஆலா ஸூறா தலாக்கில் குறிப்பிடுவது போன்று, யார் இறையச்சம் கொள்கிறாரோ அவருக்கு அவன் நினையாப் புறங்களிலிருந்து வழிவகைகளை ஏற்படுத்தி விடுகிறான். அல்லாஹுத்தஆலாவை சரியாக இறையச்சம் கொள்வதற்கும் அவனது அருட்கொடைகளை கண்ணாரக் கண்டு கொள்வதற்கும் அவன் நம்மைத் தேர்ந்தெடுத்திருக்கிறான் என்றே கூறிக் கொள்ள விரும்புகிறேன். அல்ஹம்துலில்லாஹ்.


## கழிவுப் பொருட்களை நறுக்கும் இயந்திரத்தின் தந்தை செல்வன் அம்ஹர்

முழு நாடும் மீதொட்டமுல்ல குப்பை சரிவின் இழப்புக்களின் துயரில் தவித்த தருணத்தில், ஒரு இளம் உள்ளம் அத்துயர் இனி ஒருபோதும் ஏற்படக் கூடாது என்பதற்கான தனது அறிவின் வெளிப்பாட்டை இயந்திரமாக வடிக்க தயாராகிக் கொண்டிருந்தது. அதன் வெளிப்பாடு, மாவனல்லை ஸாஹிரா கல்லூரியில் தரம் 06 இல் கல்வி பயிலும் மாணவன் செல்வன் M.S.M. அம்ஹர் 'Instant Garbage Shredding Machine' எனும் கழிவுப் பொருட்களை நறுக்கும் இயந்திரமொன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

F 19/3, நாக்கூருகம, மாவனெல்ல என்ற முகவரியில் வசிக்கும் ஷகீர் ஹசன் - ஸீனத்துல் பாத்திமா தம்பதிகளின் செல்வப் புதல்வன் அம்ஹரின் இந்தக் கண்டுபிடிப்பு தேசிய அளவில் தற்போது பரவலாகப் பேசப்படுகின்றது. தந்தை வாங்கித் தந்த திருத்தல், பொறுத்தல் வேலைகளுக்கான உபகரணங்கள் மூலம் சதா தனது முயற்சிகளை மேற்கொண்டு வந்த அம்ஹருக்கு, மீதொட்டமுல்ல பேரிடர் தொடர்பாக பத்திரிகை, தொலைக்காட்சி வாயிலான தகவல்கள் பேரதிர்வை ஏற்படுத்தின.

ஏக காலத்தில், பாடசாலையில் அவருக்கு வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய புதிய கருவி ஒன்றை கண்டுபிடிக்க வேண்டிய தேவை எழவே, கௌரவ அதிபர் ஜவாட் அவர்களின் வழிகாட்டலில் 'Instant Garbage Shredding' தொடர்பில் தனக்கிருக்கும் ஆர்வத்தை இயந்திரமாக வடிக்க ஆரம்பித்தார்.

தையல் இயந்திர தொழினுட்பத்திற்கு ஒப்பாக, ஒரு முறை அழுத்தி திருகினால் இந்த இயந்திரத்திற்குள் இடப்படும் குப்பைகள், நறுக்கப்பட்டு வெளியேறும். இதனை பசளையாக பயன்படுத்த முடியும் என்கின்றார் அம்ஹர்.



சுமார் 5 - 6 வீடுகளுக்கு ஒரு இயந்திரம் என்ற ரீதியில் இதனை பயன்படுத்த முடியுமாக இருக்கும். இவ்வியந்திரத்துக்காக அவருக்கு ரூபா. 1800 மட்டுமே செலவாகியதாம்.

தனது கண்டுபிடிப்பு வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 80 கண்டுபிடிப்புக்களில் மிகச் சிறந்த தொழிநுட்பமாக போற்றப்பட்டதுடன், இரண்டாம் இடத்தையும் பெற்றுத் தந்ததுடன், நாடளாவிய ரீதியில் கடந்த 03/05/2017 அன்று இடம்பெற்ற 'சகசக்நிமவும் - 2017' எனும் புதியகண்டுபிடிப்பாளர் போட்டியின் மாகாண மட்ட போட்டி நிகழ்ச்சியில் 300 கண்டுபிடிப்புக்களுடன் போட்டியிட்டது. அதன் பெறுபேறுகளுக்காக தற்சமயம் காத்துக்கொண்டிருக்கின்றார்.

தனது அடுத்த நகர்வாக, திண்மக் கழிவுகளை அகற்றும் ஒரு வாகனத்தின் அளவிற்கான இயந்திரமொன்றை தயாரிக்க முயற்சிக்கின்றார் அம்ஹர்.

கழிவு முகாமைத்துவம் தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்ள ஒரு அரசாங்கமே திணறிக் கொண்டு, கோடிகளில் தீர்வுகளை அறிக்கை விட்டுக் கொண்டிருக்கும் நிலையில் இவ்வாறான ஒரு கண்டுபிடிப்பு சமூகத்திற்கு பேருதவியானதும், தேசிய பங்களிப்பிற்கான அத்திவாரமாகவும் இருக்கின்றது எனலாம்.

பாடசாலைகளிலிருந்து உருவாகும் மாணவர்களிடமிருந்து ஒரு தேசம் எதை எதிர்பார்க்கின்றது என்கின்ற கடனை முழுமையாக தனது இளம் பருவத்திலேயே அம்ஹர் அடைத்துவிட்டார் என்றே சொல்லத் தோன்றுகின்றது. வெளிநாட்டு முதலீடுகளுக்காக ஏங்கி நிற்கும் அரசு, இவ்வாறான சிறு முயற்சிகளுக்கு ஊக்கமளித்து பாரிய சாதனையாளர்களை இந்த நாட்டில் உருவாக்க வேண்டும்.

தனது நன்றிகளை அதிபர் ஜவாட், வகுப்பாசிரியர் ரிஸ்வானா, ஆசிரியர் ஸம்னி, தனது பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகளுக்கும் அன்புடன் கூறச் சொன்னார் அம்ஹர்.

நடைமுறை பிரச்சினைகள் தொடர்பில் மாணவர்கள் எந்தளவு கரிசனை கொள்கின்றார்களோ, அந்தளவு அவர்களின் வெளியீடுகளும் பிரதிபலிக்கும் என்பதற்கு செல்வன் அம்ஹர் ஓர் உதாரணம்.

-அனஸ் அப்பாஸ் -

## இளம் சாதனையாளராக இந்தோனேசியா செல்லவுள்ள அய்யாஷ்!



மாவனல்லை ஸாஹிரா கல்லூரியில் தரம்10 இல் கல்விகற்கும் M.Z.M.அய்யாஷ் எனும் மாணவன் 'Energy Saving Efficient Cooking Pot' எனும் சக்தியை சேமித்து விரைவாக சமைக்கக் கூடிய புதிய கண்டுபிடிப்பை மேற்கொண்டுள்ளார். இக்கண்டுபிடிப்பு "Innova Minds – 2017' எனும் புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கான தேசிய மட்ட போட்டி நிகழ்ச்சியில் தேசிய மட்டத்தில் சிறந்த 07 படைப்புகளில் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டு, கடந்த மாதம் 28ஆம் திகதி BMICH இல் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கௌரவ அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவின் தலைமையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாவில், பரிசில்களும் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் இந்தோனேசியாவில் இடம்பெறவிருக்கும் சர்வதேச இளம் கண்டுபிடிப்பாளர் போட்டியில் இலங்கை சார்பாக கலந்து கொள்ளவும் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முஹம்மத் பகீஹுத்தீன்



# பராஅத் இரவு

ஷஃபான் மாதம் 15 ஆம் நாள் இரவு 'பராஅத் இரவு' என அழைக்கப்படுகிறது. அது பொது மக்கள் மத்தியில் அதிவிஷேட நாள். பல்வகை அமல்கள் கொண்டு அந்த நாள் அலங்கரிக்கப்பட்டு, (வெகு விமர்சையாகக் கொண்டாடப்படும் திருநாளாகவே மாறியுள்ளது. அந்த நாளில் விஷேட துஆ பிரார்த்தனைகள், தொழுகைகள், மூன்று யாஸீன்கள், பராஅத் நோன்பு என பல்வகை அமல்கள் நாடளாவிய ரீதியில் தொன்(று) தொட்டு கடைப்பிடிக்கப்பட்டு வருகின்(ற)து.

(பொ)துமக்கள் மிகுந்த ஈடுபாடோடு நிறை(வே)வற்றும் இந்த அமல்களின் உண்மை நிலை என்ன? ஷரீஆ சட்டப் பரப்பில் இதன் அந்தஸ்து யாது? பராத் இரவுக் கொண்டாட்டம் பொது மக்கள் அறியாமையின் காரணமாக செய்து வரும் தவறுகளாக இருந்தால் அதனை த(விர்)ப்பதற்கான வழிமுறைகள் யாது? (பொ)து மக்கள் மத்தியில் வியாபித்துக் காணப்படும் இது போன்ற தவறுகளைக் களைவதற்காக களமிறங்கும் அழைப்பாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சீர்திருத்த வழிமுறைகள் யாது? இந்தப் பின்னணியில் பராஅத் இரவு நிகழ்வுகள் குறித்த பின்வரும் விடயங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொள்கிறோம்.

1. பராஅத் இரவின் சிறப்புக்கள் பற்றி வந்துள்ள ஹதீஸ்கள்.
2. பராஅத் இரவு பற்றி பொது மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கைகளும், அமல்களும்.
3. பராஅத் இரவில் ஓதப்படும் விசேட துஆ.

### பராஅத் இரவின் சிறப்புக்கள்

1) ஸூரதுத் துகானின் ஆரம்ப வசனங்கள் பராஅத் இரவின் சிறப்புக்கான ஆதாரமாக முன்வைக்கப்படுகிறது.

'ஹாமீம், தெளிவான இந்த வேதத்தின் மீது சத்தியமாக! இதனை நாம் பாக்கியம் நிறைந்த ஓர் இரவில் இறக்கி வைத்தோம். ஏனெனில், நாம் மக்களுக்கு அச்சமூட்டி எச்சரிக்கை செய்ய நாடியிருந்தோம். அந்த நாளில் ஒவ்வொரு விவகாரத்துக்குமான விவேக மிக்க தீர்ப்பு பிரித்துக் கொடுக்கப்படுகின்றது. (44:1-4)

இந்த வசனத்தில் வந்துள்ள 'பாக்கியம் நிறைந்த ஓர் இரவு' என்ற வார்த்தையை சிலர் ரமழான் மாதத்தில் வரும் லைதுல் கத்ர் இரவு என்றும் வேறு சிலர் ஷஃபான் மாதம் 15 ஆம் நாள் இரவு என்றும் குறிப்பிடுவர்.

தப்ஸீர் கலை இமாம்களான இப்னு அப்பாஸ், கதாதா, இப்னு ஜுபைர், முஜாஹித், இப்னு ஸைத், ஹஸன் ஆகிய அனைவரும் இந்த இரவு லைலதுல் கத்ர் இரவே என அறிவித்துள்ளனர். இதுவே சரியான கூற்று என இமாம் தபரியும் தனது தப்ஸீரில் தெரி வித்துள்ளார்.

இதே கருத்தை இமாம் நைஸாபூரியும் தனது தப்ஸீரில் வலியுறுத்திக் கூறிவிட்டு, இது ஷஃபான் 15 ஆம் நாள் இரவு எனக் கருதுவோருக்கு எந்த அடிப்படையும் கிடை யாது எனவும் விமர்சித்துள்ளார்.

கருத்து வேறுபாட்டிற்குரிய இந்த வசனத்தின் பலமான கருத்து அது ரமழான் மாதத்தில் உள்ள லைலதுல் கத்ர் இரவு என்பதே. அதனை பராஅத் இரவிற்கான சிறப்பைக் கூறும் அல்குர்ஆன் வசனம் என்று ஆதாரம் காட்ட முடியாது.

2) 'ஷஃபான் மாதத்தின் பதினைந்தாம் இரவு வந்துவிட்டால் அவ்விரவில் நின்று வணங்குங்கள். பகலில் நோன்பு பிடியுங்கள். அன்றைய நாளில் சூரியன் மறைந்த பின் அல்லாஹ் கடைசி வானத்திற்கு இறங்கி வந்து 'என்னிடம் பாவ மன்னிப்பு கோருபவர் உண்டா? நான் அவருக்கு மன்னிப்பு வழங்குகிறேன். என்னிடம் உணவு கேட்பவர் உண்டா? நான் அவருக்கு உணவளிக்கிறேன். சோதனைக்கு ஆளானவர் உண்டா? அவருக்கு நிவாரணம் வழங்குகிறேன் என்று சுபுஹ் நேரம் வரை கேட்கிறான் என்று நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அலி (ரழி) அறிவிக்கிறார்கள். பராஅத் இரவின் சிறப்பு பற்றி கூறும் இந்த ஹதீஸ் இப்னு மாஜா மற்றும் பைஹகீ ஆகிய கிரந்தங்களில் பதிவாகியுள்ளது.

இது ஒரு பலவீனமான அறிவிப்பாளர் வரிசையைக் கொண்ட ஹதீஸ். இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் வரும் 'இப்னு அபீ புஸ்ரா' என்பவர் பலவீனமானவர். இவர் பொய்யான ஹதீஸ்களை இட்டுக் கட்டக் கூடியவர் என இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்களும், இமாம் இப்னு முயீன் (ரஹ்) அவர்களும் குறிப்பிடுகின்றனர்.

3) ஆயிஷா (ரழி) அறிவிக்கிறார்: 'நான் நபி (ஸல்) அவர்களை இரவில் படுக்கையில் காணாததால் அவர்களைத் தேடி வெளியில் சென்றேன். அப்போது அவர்கள் மதீனா மையவாடியான 'பகீயில்' வானத்தை நோக்கி தலையை உயர்த்தியவர்களாக பிரார்த்தனையில் இருந்தார்கள். ஆயிஷா (ரழி) அவர்களைக் கண்டதும் ஆயிஷாவே! அல்லாஹ்வும், அவனது தூதரும் உனது விவகாரத்தில் அநீதி இழைத்துவிடுவர் என நீ பயப்படுகின்றீரா? அதற்கு ஆயிஷா (ரழி) ஒருபோதும் இல்லை. அவ்வாறு நான் எண்ணவுமில்லை. ஆனால் நீங்கள் என்னை விட்டு விட்டு வேறு மனைவியரிடம் வந்து விட்டதாக நினைத்தேன். அப்போது நபி (ஸல்) அவர்கள்: 'ஷஃபான் மாதத்தின் நடுப் பகுதியான 15 ஆம் இரவில் அல்லாஹ் கடைசி வானத்திற்கு இறங்கி வந்து 'கல்ப்' கோத்திரத்திற்கு சொந்தமான ஆடுகளின் உரோமங்களின் எண்ணிக்கை அளவை விட அதிகமாக பாவ மன்னிப்பு வழங்குகிறான் என்று கூறினார்கள்.' (ஆதாரம் திர்மிதி, இப்னுமாஜா)

இதுவும் ஒரு பலவீனமான ஹதீஸ். இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் 'ஹஜ்ஜாஜ் இப்னு அர்தாத்' என்பவர் இடம்பெறுகிறார். இவர் தான் ஹதீஸைப் பெற்றதாகக் குறிப்பிடும் அறிவிப்பாளரான யஹ்யா இப்னு அபூ கஸீல் என்பவரிடம் எந்த செய்தியையும் செவியுற்றதில்லை. இது பலவீனமான ஹதீஸ் என்று இமாம் புகாரி (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளதாக இமாம் திர்மிதி (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

4) 'ஷஃபான் மாதத்தின் பதினைந்தாம் இரவில் அல்லாஹ் தன்னுடைய எல்லா படைப்பினங்களுக்கும் பாவ மன்னிப்பு வழங்குகிறான். இணை வைப்பவனையும், (இன்னொரு அறிவிப்பில் கொலைகாரனையும்) பரஸ்பரம் குரோதம் பாராட்டுபவனையும் தவிர என நபி (ஸல்) கூறினார்கள். (இப்னுமாஜா, முஸ்னத் அஹ்மத்)

இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் இடம்பெறும் இப்னு லஹீஆ என்பவர் பலஹீனமானவர் என்றும் வலீத் இப்னு முஸ்லிம் என்பவர் செய்திகளை இருட்டடிப்பு செய்பவர் என்றும் ஹதீஸ் துறை அறிஞர்கள் விமர்சனம் செய்கிறார்கள். இருப்பினும் இந்த ஹதீஸின் ஏனைய அறிவிப்பாளர் வரிசையை கருத்திற் கொண்டு இது ஹஸனான ஹதீஸ் என அல்லாமா அல்பானி (ரஹ்) கூறியுள்ளார்கள்.

எனவே சுருக்கமாகக் கூறுவதானால் பராத் இரவு குறித்து வந்துள்ள ஹதீஸ்கள் அனைத்தும் குறைபாடுகள் கொண்டதாகவும் ஹதீஸ் கலை வல்லுனர்களின் விமர்சனத்துக்கு உட்பட்டதாகவுமே காணப்படுகிறது.

இந்த ஹதீஸ்கள் பலவீனமானது, விமர்சனங்களுக்கு உட்பட்டது என்பதை முழுமையாக ஏற்பதுடன், குறித்த அந்த இரவுக்கு ஏனைய இரவுகளை விட ஒரு சிறப்பு இருக்கிறது என்பதனை காட்டுவதற்கு அது போதுமானதே என்ற முடிவுக்கு வரமுடியும். இது இமாம்கள் பலவீனமான ஹதீஸ்களை அணுகும் ஒரு வழிமுறையாகும். ஆனால் அமல்களின் சிறப்புக்களைக் கூறும் பலவீனமான ஹதீஸ்களை அடிப்படையாகக் கொண்டு ஒரு புதிய இபாதத்தை உருவாக்க முடியாது. நோன்பு, கியாமுல் லைல் போன்ற அமல்களை ஷரீஅத்தில் உள்ளபடி ஒருவர் அந்த இரவில் செய்கிறார் என்றால் அது ஆகுமானதே. அதைத் தடுக்க வேண்டிய அவசியம் கிடையாது. அமல்களின் சிறப்புக்களைக் கூறும் பலவீனமான ஹதீஸ்களை அடிப்படையாக கொண்டு ஷரீஆ அங்கீகாரம் வழங்கியுள்ள அமல்களைச் செய்வது தவறல்ல. ஆனால் ஆதாரமே இல்லாத ஒன்றை வணக்க வழிபாடாக எடுப்பதற்கு இந்த விதியை பயன்படுத்த முடியாது.

### பொது மக்கள் மத்தியில் நிலவும் நம்பிக்கையும், அமல்களும்

1) ஷஃபான் 15ம் நாள் இரவு ஒவ்வொரு விவகாரத்துக்குமான விவேக மிக்க தீர்ப்பு பிரித்துக் கொடுக்கப்படுகின்றது என்ற நம்பிக்கை. இது ஸூரா துகான் கூறும் பாக்கியம் நிறைந்த இரவு என்பதை ஷஃபான் பதினைந்தாம் நாள் என்த் தவறாகப் புரிந்து கொண்டதினால் வந்த விளைவு என்பதை ஏலவே குறிப்பிட்டுள்ளோம்.

2) பராஅத் இரவில் மக்ரிப் தொழுகைக்கு பிறகு பள்ளிவாசலில் ஓதப்படும் துஆப் பிரார்த்தனைக்கும் விஷேட தொழுகைக்கும் யார் சமூகம் தருகின்றாரோ அவர் இந்த வருடத்தில் மரணிக்க மாட்டார். அவருடைய காலக்கெடு திருத்தப்படுகிறது. அவ்வாறு சமூகம் தர தவறும்போது அவர்கள் துர்ப்பாக்கிய சாலிகளாகக் கருதப்படுவர். இது வடிகட்டிய மூட நம்பிக்கை. இதற்கு மார்க்கத்தில் எந்த அடிப்படையும் கிடையாது.

3) அன்றைய இரவில் மஃரிப் தொழுகைக்குப் பின் மூன்று யாசீன் ஓதப்படும். ஒன்று உணவு விஸ்திரணத்திற்கு, இரண்டாவது ஆயுள் நீடிப்புக்கு, மூன்றாவது பலாய் முஸீபத் நீங்குவதற்கு. இதற்கு ஷரீஅத்தில் எந்த ஆதாரமும் இல்லை. அல்குர்ஆனை எப்போதும் ஓத முடியும் என்பது உண்மை தான். ஆனால் குறிப்பிட்ட ஒரு ஸூராவை குறித்த ஒரு நாளில் விஷேட அமைப்பில் ஓதுவதற்கு ஸஹீஹான ஆதாரம் தேவை. இந்த விடயத்தில் எந்த ஸஹீஹான ஆதாரமும் கிடையாது.

4) பராஅத் இரவில் ஸலாதுல் கைர் ...

இருப்பதாக மக்கள் நம்புகின்றனர். அது நூறு ரக்அத் கொண்ட தொழுகை. ஒவ்வொரு ரக்அத்திலும் பாதிஹா ஸூராவிற்குப் பிறகு ஸூரதுல் இக்லாஸ் பதினொரு தடவை ஓத வேண்டும். இதனை சுருக்கித் தொழுவதற்கான குறுக்கு வழிமுறைகளும் சமூகத்தில் இருக்கின்றன. இமாம் கஸ்ஸாலி அவர்கள் இந்த விடயத்தை இஹ்யாவில் குறிப்பிட்டுள்ளார்கள். இந்த தொழுகையின் சிறப்புக்கள் பற்றியும் இட்டுக் கட்டப்பட்ட போலி ஹதீஸ்கள் உள்ளன. எனவே இதுவும் எந்த ஆதாரமும் அற்ற, ஷரீஆ அங்கீகரிக்காத ஒரு நூதன தொழுகை முறையாகும்.

மேற்கூறிய விடயங்களும் இன்னும் இது போன்ற புராணங்களுடன் கூடிய பல நிகழ்ச்சிகளும் மார்க்கத்தில் புதிதாக நுழைந்த நூதன வணக்கங்களாகும். வணக்க வழிபாடுகளில் மிகுந்த கவனமாக இருக்க வேண்டும். எந்தவொரு அமலையும் நன்மை கருதி சுயமாக உருவாக்கவே முடியாது. இதனால் தான் புகஹாக்கள் "வணக்க வழிபாடுகளில் அடிப்படை கொள்கை தடையாகும்" என்ற விதியை வகுத்துள்ளனர். எனவே நல்ல நல்ல வணக்கங்களை நாமாக உருவாக்க முடியாது. வணக்க வழிபாடுகளில் மனித மூளையின் கண்டுபிடிப்புக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது.

"யார் எமது மார்க்கமான வணக்க வழிபாடுகளில் புதிதாக ஒன்றை உருவாக்குகின்றாரோ அது மறுக்கப்படும்" என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள் (புகாரி, முஸ்லிம்).

எனவே ஷரீஆ சட்டரீதியான ஆதாரங்கள் எதுவுமின்றி வணக்கமாக ஒன்றை செய்ய முற்படுவது தடைசெய்யப்படும். மனிதன் வணங்குவதற்கான கடமைகளையும், வணக்க வழிபாடுகளையும் வகுத்துத் தருவது இறைவன் ஒருவன் மட்டுமே. அடிபணிந்து வணங்குவது தான் அடியானாகிய மனிதனின் கடமையாகும்.

### பராஅத் இரவில் ஓதும் விஷேட பிரார்த்தனை

இந்த இரவில் மஃரிபு தொழுகைக்குப் பின் துன்பம், துயரங்கள் நீங்கவும், நீண்ட ஆயுளைப் பெறவும் நிலையான செல்வத்தைப் பெறவும் மூன்று 'யாசீன்' ஓதி துஆ செய்வது ஊர் வழக்கத்தில் இருந்து வருகின்றது. அந்த துஆவில் யா அல்லாஹ்! நீ எங்களை மூதேவிகளாக பதிவு செய்து இருந்தால் அதை அழித்து எங்களை சீதேவிகளாக மாற்றி எழுதுவாயாக! நீ எங்களை சீதேவிகளாக எழுதி இருந்தால் அதை அப்படியே உறுதிப்படுத்துவாயாக! ஏனெனில், நீ நாடுவதை அழிப்பாய், நாடுவதை அழிக்காமல் உறுதிப்படுத்துவாய். உன்னிடம் தான் மூல நூல் எனும் 'உம்முல் கிதாப்' உள்ளது என்று பிரார்த்திப்பர்.

உம்முல் கிதாபில் உள்ளவை அழிப்பதற்கும் உறுதிப்படுத்துவதற்குமானவையல்ல. அல்லாஹ்வின் அறிவில் உள்ளவை, லவ்ஹுல் மஹ்பூழில் உள்ளவை மாற்றங்கள் நிகழாதவை என்று நம்புவதே ஒரு முஸ்லிமின் மிகச் சரியான நம்பிக்கையாகும். எனவே இந்த துஆவில் வரும் வாசகம் அகீதாவிற்கு முரணான மனித வார்த்தைகளாகும். அவை சிந்தனை சிக்கல்களுக்கு வழிவகுக்கும் வார்த்தைப் பிரயோகங்கள். இந்த துஆ ஒரு ஹதீஸுமல்ல. அதற்கு ஆதாரமும் இல்லை. மாறாக கருத்துச் சிக்கல் நிறைந்த ஒரு துஆ. இறைவனிடம் கேட்பதென்றால் உறுதியான வார்த்தைகளில் கேட்க வேண்டும். நீ நாடினால் தருவாயாக என்று கேட்பது நபிவழிக்கு முரணான பிரார்த்தனை வழிமுறையாகும்.

இதுவரை பார்த்த விடயங்களின் சுருக்கம்:

1) ஷஃபான் பதினைந்தாம் நாள் இரவு ஏனைய சாதாரண இரவுகளை விட சிறப்புக்குரிய இரவு எனக் கருத முடியும். அந்த இரவில் ஷரீஅத் அங்கீகரித்துள்ள முறைப்படி எந்த அமல்கள் வேண்டுமானாலும் செய்யலாம். அந்த நாள் பகல் பொழுதில் நோன்பும் வைக்கலாம். இவை விரும்பத்தக்கவையே.

2) அந்த நாளுக்கென்று விஷேட யாஸீன், விஷேட தொழுகை, விஷேட நோன்பு, விஷேட துஆக்கள் என எதுவுமே ஆதார மில்லாதவையாகும். எனவே அவற்றை வணக்க வழிபாடாகக் கொண்டாடுவதை முற்றாகத் தவிர்ந்து கொள்ள வேண்டும்.

3) அந்த நாளில் மூன்று யாஸீனுக்குப் பிறகு ஓதும் விஷேட துஆ நபிவழியில் வராதவை. அதில் கருத்துச் சிக்கல் மலிந்து காணப்படுகின்றன. எனவே அது தவிர்க்கப் பட வேண்டியதே.

### பராஅத் இரவை பொறுத்தமட்டில் மக்கள் நிலைப்பாடு இரண்டு வகைப்படுகிறது.

ஒரு சாரார் மரபு வழி வந்த பாரம்பரிய பராஅத் இரவு வழிபாடுகளுக்கு தீவிர ஆர்வம் காட்டுகின்றனர். அவற்றை கடமை என நம்பி விட்டுக் கொடுக்காமல் பாதுகாத்து வருகின்றனர். அதற்கான நியாயங்களையும், ஆதாரங்களையும் வலிந்து தேடுகின்றனர். இவர்களுள் பள்ளிவாசல் இமாம்களும் மௌலவி ஆலிம்களும் அடங்குவர். எனவே அவர்கள் காய்தல் உவத்தல் இன்றி சமநிலை மனதோடு இந்த விடயத்தை ஷரீஆவின் பின்னணியில் கூர்ந்து கவனிக்க வேண்டும், படிக்க வேண்டும். அப்போது இந்த தீவிரத் தன்மையை கை விட்டு விட்டு மிதவாதத்தை கடைப்பிடிப்பார்கள் என நம்புகிறோம்.

இதனை எதிர்க்கும் குழுவினரும் அதி தீவிரமான வெறியுடனே செயற்படுகின்றனர். இந்நிகழ்வுகளை கடுமையாக இழிவுபடுத்தி அதில் ஈடுபடுவோரை கடுமையாகத் திட்டித் தீர்த்து விடுகின்றனர். அதுவே கைகலப்பாக மாறி சமூகத்திற்குள்ளே பிளவும் பிரிவினையும் குரோத மனப்பாங்கும் தோன்றி விடுகிறது. எனவே இதனை எதிர்ப்பவர்கள் ஒரு விடயத்தை கருத்திற் கொள்ள வேண்டும். பராஅத் இரவை கொண்டாடும் பொது மக்கள் ஏன் அதனைச் செய்கிறார்கள்? அது மார்க்கத்தில் உள்ளது என்ற நல்லெண்ணத்துடனேயே இந்தத் தவறைச் செய்கிறார்கள். மார்க்கத்தின் மீது அவர்களுக்குள்ள ஆர்வமும் பற்றும் அதனால் வெளிப்படுகிறது.

இந்த நிலையில் கரடுமுரடான போக்கைக் கையாண்டு, இழிவுபடுத்தி, ஓரங்கட்டும் வகையில் அவர்களை எதிர்ப்பதானது, அவர் களது மார்க்க ஆர்வத்தை சிதைத்து விடும். தீனுக்கு வழங்கும் கண்ணியத்தை இழக்கச் செய்யும். தீமையை தடுப்பதில் உள்ள இந்த வெறி நன்மையை விட பாரிய தீய விளைவை கொண்டுவரும். அவர்கள் தீனை வெறுக்கும் நிலைக்குத் தள்ளப்படுவர்.

எனவே எதிர்க்கும்போது மென்மையை கடைப்பிடிக்க வேண்டும். இது இஸ்லாமிய பிரசாரத்தில் தீமையை தடுக்கும் உக்திகளில் ஒன்று. குறிப்பாக மக்கள் மத்தியில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ள இது போன்ற நிகழ்ச்சிகளைக் களைவதில் மிகுந்த கவனம் வேண்டும். மஸ்ஜிதுடன் தொடர்புள்ள மக்களை எதிர்கொள்ளும் தாயீக்கள் நுட்பமான வழிமுறைகளையும் சிறந்த அணுகுமுறைகளையும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும். அடுத்தவர்களது உணர்வுகளை மதித்து உள்ளத்தை காயப்படுத்தாமல் அன்பு ததும்பும் வழிமுறையை பின்பற்றினால் காலப் போக்கில் பொதுமக்கள் உண்மைகளை உள்வாங்கி அதன் பால் திரும்பிவிடுவர். சரியான பாதைக்கு வழிகாட்டுபவன் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே. அல்லாஹ் யாவும் அறிந்தவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடன் அட்டைகளைப் பயன்படுத்தல்

சமகால பொருளாதாரக் கொடுக்கல் வாங்கல்களில் கடன் அட்டைகளின் ஆதிக்கம் முன்பை விட அதிகரித்துள்ளது. 2050 இல் உலகின் முக்கால் பகுதி மக்கள் பணத்திற்குப் பதிலாக கடன் அட்டைகளையே பயன்படுத்துவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. இன்று பெரும்பாலான மேலை நாடுகளில் -குறிப்பாக வளர்ச்சியடைந்த நாடுகளில்- கடன் அட்டைகளே பெரும்பாலும் பயன்பாட்டில் உள்ளன.

கடனுக்குப் பணத்தை ரொக்கமாகப் பெற்றுக் கொள்ளவும் பொருட்கள், சேவைகளைக் கொள்வனவு செய்யவும் இத்தகைய கடன் அட்டைகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன. ATM Card, Debit Card போன்றவற்றிலிருந்து கடன் அட்டைகள் வேறுபடுகின்றன. ஒரு வங்கியில் வைப்புக் கணக்கே இல்லாத நிலையில், அவ்வங்கி குறிப்பிட்ட தொகைப் பணத்தைக் கடனாக ஒதுக்கீடு செய்யும். அப்பணத்தை இக்கடன் அட்டைகளைப் பயன்படுத்தி ஒருவர் விரும்பியவாறு விரும்பிய நேரத்தில் பொருட்கள் சேவைகளைக் கொள்வனவு செய்வதற்குப் பயன்படுத்த முடியும். இதற்கெனப் பயன்படுத்தப்படும் அட்டையையே கடன் அட்டை என்கிறோம்.

இக்கடன் அட்டைகள் அவற்றின் இயல்புகளைப் பொறுத்து பல வகைகளில் உள்ளன. எனினும், அதிகம் புழக்கத்தில் இருப்பது சுழலும் கடன் வசதி கொண்ட கடன் அட்டைகளே (Revolving Credit Card) என்பது குறிப்பிடத்தக்கது. இத்தகைய கடன் அட்டை வட்டியை அடிப்படையாகக் கொண்டது எனக் கருதப்படுகின்றது.

ஷரீஆவின் கண்ணோட்டத்தில் இத்தகைய கடன் அட்டைகளை ஆகாது எனத் தீர்ப்பளிக்கும் உலமாக்கள் அநேகர் உள்ளனர். இன்னொரு பக்கம் வரைமுறைகளுடன், நிர்ப்பந்தத்திற்காக கடன் அட்டைகளைப் பாவிக்கலாம் என்று கருதுவோரும் உள்ளனர். சமகால இஸ்லாமிய உலகின் சட்ட அறிஞர் கலாநிதி முஹம்மத் அலி அல் காரி இப்னு ஈத் என்பவர் இது குறித்துப் பின்வருமாறு விளக்குகின்றார்.

சுழலும் கடன் அட்டை ஏனைய வணிக அட்டைகளிலிருந்து வேறுபட்டது. காரணம், இது மாத்திரமே சுழலும் கடன் வசதி கொண்ட கடன் அட்டையாகும். இதன் அர்த்தம், கடன் அட்டை மூலம் பணமாகப் பெற்ற அல்லது கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுத்தி மொத்தப் பெறுமானத்தில் ஒரு குறிப்பிட்ட சிறிய வீதத்திலான தொகையையே மாதாந்தம் வங்கிக்கு மீளச் செலுத்த வேண்டும்.



முழுத் தொகையையும் மாத இறுதியில் செலுத்தி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனை இங்கு கிடையாது. எனவே செலுத்தப்படாத எஞ்சிய தொகையை அடுத்தடுத்த தவணைகளில் செலுத்துவதாயின், வட்டியும் சேர்த்தே அறவிடப்படும். மட்டுமன்றி, குறிப்பிட்ட அட்டையின் மூலம் பணத்தை ரொக்கமாகக் கையில் பெற்று மீளச் செலுத்துகின்ற போது அது குறித்த காலப் பகுதிக்குள் அமைந்தாலும் சரி, காலம் கடந்ததாக இருந்தாலும் சரி வட்டி அறவிடப்படும்.

அதேபோன்று கடன் அட்டையைப் பயன்படுத்தி கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுத்தி மொத்தப் பெறுமானத்தையும் வங்கியினால் நிர்ணயிக்கப்படும் காலப் பகுதிக்குள் செலுத்தி விட்டால் வட்டி அறவிடப்பட மாட்டாது.

எவ்வாறாயினும், இத்தகைய கடன் அட்டைகளுக்கான ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகளின் போது வாடிக்கையாளர்கள் குறித்த சலுகைக் காலப் பகுதிக்குள் பணத்தை முழுமையாக வங்கிக்கு திருப்பிச் செலுத்தாத போது அதற்கு வட்டி செலுத்தவும் உடன்படுகின்றேன் என்ற நிபந்தனையை ஏற்றுக் கொண்டே கைச்சாத்திடுவர். ஆதலால், இவ்வகையான சுழலும் கடன் வசதி கொண்ட கடன் அட்டை அதனது பண்புகள், நிபந்தனைகளை வைத்து நோக்கும் போது, வட்டியுடன் தொடர்புபட்டது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

எனவே, இக்கடன் அட்டைகளை அனுமதிக்க முடியாது என கலாநிதி முஹம்மத் அலி காரி தெரிவிக்கின்றார்.

வங்கிக் கடன் அட்டைகள் எனும் நூலில் மற்றொரு இஸ்லாமிய சட்ட அறிஞரான கலாநிதி அப்துல் வஹ்ஹாப் அபூ சுலைமான் பின்வருமாறு கருத்துரைக்கின்றார்.

இக்கடன் அட்டைகள் மூலம் நிகழும் கடன் கொடுக்கல் வாங்கல்கள் இஸ்லாம் த்தைசெய்துள்ள ஜாஹிலிய்யாக் கால கடன் கொடுக்கல் வாங்கல்களை ஒத்ததாகவே காணப்படுகின்றது. ஜாஹிலிய்யக் காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்த வேண்டிய காலக் கெடு நெருங்கி விட்டால், கால அவகாசத்தைக் கூட்டிக் கொள்வதாகவும் அதற்காக இன்னுமொரு தொகைப் பணத்தைக் கூடுதலாகத் தருவதாகவும் ஒப்பந்தம் புதுப்பிக்கப்படும். இதே நடைமுறைதான் கடன் அட்டை ஒப்பந்தத்தின் போதும் நிகழ்கின்றது.

கடன் அட்டை தொடர்பாக மஜ்மஉல் பிக்ஹில் இஸ்லாமி எனப்படும் மக்காவை தளமாகக் கொண்ட இஸ்லாமிய சட்ட சபை வெளியிட்ட பத்வா தொகுதியின் பத்தாவது பாகத்தில் ஷெய்க் நாதி அஜமி தலைமையில் வெளியிடப்பட்ட பத்வா உள்ளடக்கப்பட்டுள்ளது. கடன் அட்டைகள் குர்ஆன் உள்ளிட்டு அனைத்து வேத நூல்களும் தடை செய்துள்ள வட்டியுடன் தொடர்பான ஓர் நடைமுறையாகும் என அந்த பத்வாவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச இஸ்லாமிய பிக்ஹ் ஒன்றியமும் 150 தலைசிறந்த அறிஞர்களைக் கொண்ட இஸ்லாமிய ஆய்வுகளுக்கான ஒன்றியமும் 1965 இல் வெளியிட்ட ஓர் அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளது. அனைத்து வகையான கடன்களைப் பொறுத்தவரையிலும், அவற்றை மீளப் பெறுகின்றபோது மேலதிகமாக ஒரு தொகையைச் சேர்ந்து வட்டியாகப் பெறுவது ஹராமாகும். குறைவாகவோ கூடுதலாகவோ வட்டியை அடிப்படையாகக் கொண்ட கடன் கொடுக்கல் வாங்கல்கள் அனைத்தும் ஹராமாகும். வட்டியை அடிப்படையாகக் கொண்டு கடன் வழங்குவதை எந்தவொரு தேவையும் நிர்ப்பந்தமும் ஆகுமாக்காது.

அதேபோன்றுதான் வட்டியை அடிப்படையாகக் கொண்டு கடன் பெறுதலும் ஹராமாகும். மிக இக்கட்டான, நிர்ப்பந்தமான சூழ்நிலையின் போது அல்லாமல் வெறு எந்தவொரு நிலையிலும் இது ஆகுமாகாது. (தொடரும்)

# சித்தி பாழிலா

## உலகப் புகழ்பெற்ற இருதய நோய் நிபுணர்



சித்தி பாழிலா ஸுபாரி, இந்தோனேசியாவைச் சேர்ந்தவர். மத்திய ஜாவாவிலுள்ள சுரகாட்டவில் பிறந்தவர். உலக சுகாதார அமையத்திலும் பணியாற்றியவர். 2007 இல் தொற்று நோய் குறித்த அவரது ஆய்வுகள் சர்வதேச கவனத்தை ஈர்க்கும் அளவு அத்துறையில் அவரது அசாதாரண திறமைகளை வெளிப்படுத்தினார்.

இருதய சத்திர சிகிச்சை மற்றும் நோய்க் குறியியல் நிபுணராக நீண்டகாலம் பணியாற்றிய அவரை, இந்தோனேசியாவின் முன்னாள் ஜனாதிபதி சுசிலோ பம்பங் யுதயோனா அந்நாட்டின் 17 ஆவது சுகாதார அமைச்சராக நியமித்தார். அந்த வகையில் 2004 ஒக்டோபர் 27 திகதி முதல் 2007 ஒக்டோபர் 20 திகதி வரை சித்தி பாழிலா இந்தோனேசியாவின் 17 ஆவது சுகாதார அமைச்சராக பதவி வகித்தார்.

1949 நவம்பர் 06 இல் பிறந்த சித்தி பாழிலா, இந்தோனேசிய பல்கலைக்கழகத்திலும் கட்ஜா மாடா பல்கலைக்கழகத்திலும் பயின்றவர். 2006, ஒகஸ்டில் இந்தோனேசியாவில் பரவிய பறவைக் காய்ச்சல் வைரஸ் குறித்து அவர் பகிரங்கமாக வெளியிட்ட தகவல்கள் உலக சுகாதார அமையம் வரை எதிரொலித்தது.

இத்தகைய வைரஸின் மூலம், அது எவ்வாறு நோய்க்குக் காரணமாகின்றது, எவ்வாறு அழிந்து போகின்றது, எவ்வாறு பரவுகின்றது, அதனை எவ்வாறு தடுக்கலாம் என்பது குறித்து சித்தி பாழிலா பல்வேறு ஆய்வுத் தகவல்களை வெளியிட்டார்.

மருத்துவ, ஒத்துழைப்பு தொடர்பான இந்தோனேசியாவின் சுகாதாரக் கொள்கைகளை உலக நாடுகள் ஏற்றுச் செயற்பட வேண்டும் என வலியுறுத்திய அவர், இன்றைய முற்கூட்டிய நோய்த் தடுப்பு மருந்துகளை விட பறவைக் காய்ச்சலைப் பரப்பும் வைரஸைத் தடுப்பதற்கு இந்தோனேசியாவிடம் ஓர் புதிய ஆயுதம் உள்ளது என்று அவர் உலகிற்கு அறிவித்தார்.

H5N1 வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகள் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்தி விட்டால் பொருளாதாரத் தடை ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தில், அதனை மூடி மறைக்கின்றன. குறிப்பாக சீனா போன்ற நாடுகள் வெளிநாடுகளுக்குச் செல்லும் தனது மக்களின் பொருளாதார நன்மைகளைக் கருத்திற் கொண்டு தமது பிரஜைகள் பாதிக்கப்பட்டுள்ள வைரஸ்கள் பற்றிய உண்மைகளை வெளிக்கொணரத் தவறுகின்றன. இதனால்தான், இவ்வாறான வைரஸ்கள் வேகமாகப் பரவுகின்றன.

உலக சுகாதார மையத்தில் தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் தலைவராகப் பணியாற்றிய நான்சி கொக்ஸ் என்பவர் பாழிலாவின் அரிய தகவல்கள் மூலம், பறவைக் காய்ச்சலை உலக அளவில் கட்டுப்படுத்தலாம் என்று ஆலோசனை, வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

வைரஸ்களைக் கட்டுப்படுத்தும் ஓர் புதிய முறைமையை சித்தி பாழிலா தனது நாட்டில் அறிமுகப்படுத்தினார். இந்த அனுபவத்தை சர்வதேச நாடுகளுடன் பகிர்வதற்குத் தான் தயாராக உள்ளேன் என்றும் அவர் கூறினார்.

துரதிஷ்டமாக அமெரிக்காவின் ஊடகவியலாளர் ஒருவர் சித்தி பாழிலா வெளியிட்ட தரவுகளை மாற்றி வெளியிட்டதன் மூலம் அவரது ஆய்வுத் திறனையும் கண்டுபிடிப்பையும் முடக்குவதற்கு முயற்சித்தார். 2008 மே மாதம் உலக சுகாதாரக் கூட்டத்தில் சித்தி பாழிலா கலந்துகொண்டபோது, அவரது ஆய்வு முடிவுகளையும் பறவைக் காய்ச்சல் வைரஸைத் தடுப்பதற்கான பொறிமுறையையும் அறிமுகம் செய்தார்.

இன்னொரு உண்மையையும் அவர் வெளியிட்டார். மேற்கு நாடுகள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் பரப்புவதற்கென்றே புதிய வைரஸ்களை உற்பத்தி செய்வதாக அவர் குற்றம் சாட்டினார். மருந்துக் கம்பனிகளுக்கு இலாபமீட்டுவதற்காக இவ்வாறான முயற்சிகளில் மேலைநாடுகள் ஈடுபட்டுள்ளன என்றார்.

இந்தப் பின்னணியிலேயே 2006 இல் இந்தோனேசியாவில் H5N1 எனப்படும் பறவைக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் இரத்த மாதிரிகளை உலக சுகாதார அமையத்தின் ஆய்வாளருக்கு வழங்குவதை இந்தோனேசியா அரசாங்கம் தவிர்ந்து கொண்டது.

பறவைக் காய்ச்சல் வைரஸ் குறித்து உலகத்தில் நிகழும் மருத்துவ பார்வைகள் மிகவும் மங்கலானவை. பெரும்பாலும் இவை அபிவிருத்தி அடைந்து வரும் ஆசிய, ஆபிரிக்க நாடுகளிலேயே வேகமாகப் பரவுகின்றன. வளர்ச்சியடைந்த நாடுகளில் இவற்றின் பரவல் மிக அரிதாகும். இதற்கான காரணத்தை சித்தி பாழிலா வெளியிட்டார். இதய நோய் நிபுணரான இவர், நீண்டகாலம் ஜகார்த்தாவில் இத்துறையில் ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டார். 2009 இல் அவரது கணவர் இறந்து போனார். இந்தோனேசியாவில் பிறந்து அந்நாட்டில் மிகப் பிரபலம் பெற்றிருந்த இதய நோய் மருத்துவரான பாழிலா 5 ஆண்டுகள் சுகாதார அமைச்சராகவும் பணியாற்றினார்.

அவர் ஆரம்பித்த 6.15 பில்லியன் பெறுமதியான சுகாதாரத் திட்டம் தோல்வி கண்டதாக விமர்சிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், தனது அறிவுத் துறையிலும் ஆய்விலும் சித்தி பாழிலா ஒரு தனித்துவமான இடத்தை தக்கவைத்துள்ளார்.

# உள ஆரோக்கியமும் உடல் மாற்றங்களும்

மூளையில் ஏற்படும் எண்ண அலைகள், மனவெழுச்சி சமநிலையின்மைகள், மன அழுத்தம், மனச் சோர்வு, தீராத கவலை என்பவை உடலில் பல்வேறு அசாதாரண நிலைகளையும் உடல் நோய்களையும் உருவாக்கும் என்று மருத்துவ ஆய்வுகள் எச்சரிக்கின்றன. இதனால் மூளையின் உச்சி நடுப்பகுதியிலுள்ள பிட்யூடரி எனப்படும் முதன்மை வாய்ந்த நாளமில்லாச் சுரப்பி தூண்டப்பட்டு, அதன் செயலின்படி உடம்பிலுள்ள எல்லா நாளச் சுரப்பிகளும் அதீதமாகச் செயல்படுகிறது.

அட்ரினலின், நார் அட்ரினலின், காட்டிசோல் போன்ற ஹோமோன்கள் மிக் அதிகளவில் சுரந்து; இரத்தத்தில் கலக்கின்றது. இதனால் உடல் உறுப்புக்கள் பாதிப்படைகின்றன. முக்கியமாக இதயத் துடிப்பு 70 களிலிருந்து 100 ஐயும் தாண்டிச் சென்று இதயத்தின் வேலையை அதிகரிக்கின்றது. இரத்த அழுத்தத்தின் இயல்பான அளவை (120-50) 160/120 ஆகக் கூட்டுகின்றது. இரத்தத்தில் சக்கரையின் அளவையும் கூட்டுகின்றது. கல்லீரலினால் தயாரிக்கப்படும் கெட்ட கொலஸ்ரோலை கூட்டியும் நல்ல கொலஸ்ரோலை குறைக்கவும் இது காரணமாகின்றது. இறுதியில் ஒருவரது நோய் எதிர்ப்புச் சக்தி குறைகின்றது.

மேற்கூறிய மாற்றங்களால் இதயத்திற்குச் செல்லும் இரத்தக் குழாய் சுருங்கி அடைபடுவதற்கும் அடைபட்ட இடத்தில் இரத்தம் உறைவதற்கும் காரணமாகின்றது. மாரடைப்புக்குக் கூட இட்டுச் செல்கிறது. மனதின் ஆரோக்கியம் குறையும்போது குறிப்பாக ஒருவர் மன அழுத்தத்தினால் பாதிக்கப்படும் போது கொலஸ்ரோல், இரத்தக் கொதிப்பு, சக்கரை வியாதி என்பன ஏற்படலாம். சிலருக்கு மூளையின் இரத்தக் குழாயில் ஏற்படும் பாதிப்பின் விளைவாக ஸ்ரோக் எனும் பக்கவாதம், சிறுநீரக செயலிழப்பு என்பன ஏற்படலாம்.

உடலுக்கும் உள்ளத்திற்கும் இடையிலான தொடர்பு அற்புதமானது. இன்று மனிதனுக்கு ஏற்படும் 60 வீதத்திற்கும் அதிகமான உடல் நோய்களுக்கு உளக் காரணிகளே பின்னணியாய் உள்ளன. இதய நோய்கள், ஆஸ்துமா, ஒற்றைத் தலைவலி, சக்கரை வியாதி, உடற் சோர்வு, இலகுவான நோய்த் தொற்று உள்ளிட்டு சிலவகைப் புற்றுநோய்களை உருவாக்குவதிலும் உள நிலைமைகள் பங்களிப்பதாக புதிய மருத்துவ ஆய்வுகள் நிறுவுகின்றன.

அட்ரினலின், நார் அட்ரினலின், கட்டிசோல் போன்ற ஹோமோன்கள் சீராக இருப்பதனால்தான் மனிதன் ஆரோக்கியமாய் வாழ்கின்றான். இம்மூன்றும் மிகையாக சுரந்தால்தான் போராடி வெற்றி பெறும் வல்லமை, தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் சக்தி என்பவற்றை மனிதன் பெறுகின்றான்.

ஓர் இலக்கை நிர்ணயித்து, உதாரணமாக மேல் பட்டப்படிப்பு, பதவி உயர்வு, சொந்த வீடு, திருமணம், பொருளாதார முன்னேற்றம் என்பவற்றை அடைவதுதான் மகிழ்ச்சி என்று எண்ணி, அதில் தோல்வி காணும்போது மனிதன் மன அழுத்தத்திற்கு ஆளாகின்றான். மன அழுத்தம் வந்தால் உடலில் பல்வேறு வகையான மாற்றங்கள் நிகழ்கின்றன. அது வேறு பல உளப் பிரச்சினைகளையும் சங்கிலித் தொடராக உருவாக்குகின்றது.

உள அச்சம், நெருங்கிய உறவினர்களுடனான சண்டை, கடும் பொருளாதார நெருக்கடி, எதிர்பார்ப்புகள் நிறைவேறாமை என்பன மன அழுத்தத்திற்கான உடனடிக் காரணங்களாக உள்ளன. இதனால் உடலிலும் பல மாற்றங்கள் நிகழ்கின்றன. வயிற்று வலி, பசியின்மை, அதிகம் பசித்தல், மலச் சிக்கல் என மாறி மாறி பல்வேறு உடல் உபாதைகள் ஏற்படுவதற்கு மன அழுத்தம் காரணமாகின்றது. சிலருக்கு வாயில் புண், தொண்டையில் புண் என்பனவும் ஏற்படுகின்றது.

காய்ச்சல், சளித் தொந்தரவு, உடல் உளைச்சல் என்பனவும் மன அழுத்தத்தின் மறைமுக விளைவுகளே. சிலருக்கு உணவில் அக்கறையற்றுப் போய்விடும். உடம்பே சரியில்லை என்று புலம்பத் தொடங்குவார்கள். தலைசுற்றும் அதிகரித்து, சிந்தனைச் சக்தி குறையவும் மன அழுத்தம் காரணமாகின்றது. தலை அரிப்பது போன்ற உணர்வு, உடலின் எந்த இடத்தைச் சொறிந்தாலும் மேலும் மேலும் சொறியத் தூண்டும் உணர்வு, தோல் வரண்டு முடிச் சிக்கல் இருக்கும் இடத்தில் முட்கள் தோன்றுவது போல் சொர சொரப்பாக இருத்தல், நாளாவட்டத்தில் தோலே கறுத்துப் போதல் போன்ற தோல் வியாதிகளையும் சிலருக்கு மன அழுத்தம் உருவாக்குகின்றது.

சூழமைவை தூய்மையாக வைத்துக் கொள்வதுதான் இதிலிருந்து விடுபடுவதற்கான ஒரே வழி. மனதிலுள்ள கவலைகளையும் துன்பங்களையும் நண்பர்களோடு பகிர்ந்து கொள்ளல் வேண்டும். பிரச்சினைகளுக்கு ஆட்படும்போது அவற்றிலிருந்து வெளியேறுவதற்கான வழிகளை உடனடியாகக் காண வேண்டும். தியானம் செய்தல், மூச்சுப் பயிற்சி, வாசிப்பு, ஆக்கபூர்வமான கலந்துரையாடல்கள், வாசனை எண்ணெய்க் குளியல், வெந்நீர் குளியல் என் பனவும் மனதை அமைதிப்படுத்த வல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பலஸ்தீன சிறைக் கைதிகளுக்கு... (01 ம் பக்கத் தொடர்)

இவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இலங்கைப் பலஸ்தீன தூதரகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட கையெழுத்து வேட்டையில் இலங்கையர் பலரும் கையெழுத்திட்டனர்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, உலக நீதிக்கான இலங்கை ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் ஜயதிலக டி சில்வா, தேசிய ஊடக மையத்தின் தலைவர் இம்தியாஸ் பாகிர் மாக்கார் உள்ளிட்ட பலரும் இதன்போது கையொப்பமிட்டனர்.

இது தவிர அமைச்சர்களான ஹிஸ்புல்லா, எம்.எச்.எம். பௌஸி, முஜிபுர் ரஹ்மான் உள்ளிட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளும் கையொப்ப நிகழ்வில் கலந்து கொண்டதாகவும், இன்னும் ஏராளமான இலங்கையர்கள் வந்து கொண்டிருப்பதாகவும், இன்று (வெள்ளிக்கிழமை) 12 மணி வரை இலங்கையிலுள்ள பலஸ்தீன தூதரகத்துக்கு வந்து கையொப்பமிட முடியும் எனவும் அஷ். ரிஹான் மேலும் தெரிவித்தார்.

தமது நாட்டு மக்களுக்கு ஆதரவளித்து கையொப்பமிட்ட இலங்கையர்கள் அனைவருக்கும் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும், பலஸ்தீன் போராட்டம் நீட்சியானது என்ற வகையில் இவர்களுக்கு தமது ஒருமைப்பாட்டை வெளிப்படுத்துவதற்காக தாம் முன்னெடுக்கும் ஏனைய நிகழ்வுகளிலும் இலங்கையர்கள் அனைவரும் பங்கெடுக்க வேண்டும் என்றும் இலங்கைக்கான பலஸ்தீன் தூதுவர் சுஹைர் தார் அல் ஸைத் தெரிவித்தார்.

## மாயக்கல்லி... (10 ம் பக்கத் தொடர்)

எனவே இந்தப் பிரச்சினை தொடர்பில் எமக்கு நியாயமான தீர்வு கிடைக்க வேண்டும் என்பதற்காக மாயக்கல்லி மலை விவகாரம் மற்றும் காணி ஆக்கிரமிப்பு தொடர்பான ஒரு குழுவொன்றை ஆரம்பித்து கடந்த வெள்ளிக்கிழமை பாரிய ஆர்ப்பாட்டமொன்றை நடாத்தினோம். இந்தப் பிரச்சினையானது சமூகம் சார்ந்த ஒரு பிரச்சினை. ஆகவே அனைத்துத் தரப்பினரும் கட்சி, இயக்க வேறுபாடுகளுக்கு அப்பால் ஒன்றிணைந்து பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்காக குரல்கொடுப்பதோடு உரிய தீர்வினைப் பெற்றுத்தரவும் முன்வர வேண்டும்.

**சட்டத்தரணி பாரூக் சாஹிப்**

செயலாளர்- இறக்காமம் மாயக்கல்லி மலை மற்றும் காணி விவகாரக் குழு

இறக்காமத்தின் மாணிக்கமடு கிராமத்திலுள்ள மாயக்கல்லி மலை 2014ம் ஆண்டு அரசாங்க வர்த்தமானி மூலம் தொல்பொருள் திணைக்களத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த வர்த்தமானி அறிவித்தலுக்கு முன்னர் அந்த மலையை அண்டிய அனைத்துக் காணிகளும் 1990-08-30ம் திகதி அம்பாறை அரசாங்க அதிபரால் காணிக் கட்டளைச் சட்டத்தின் 19:02 சட்டத்தின் கீழ் காணி உத்தரவுப் பத்திரங்கள் அந்தப் பிரதேசத்திலுள்ள 22 பேருக்கு வழங்கப்பட்டது. 2014 வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம், இந்தக் காணிகளை உள்ளடக்காத வகையில் மாயக்கல்லி மலை மற்றும் அதனைச் சார்ந்த குறிப்பிட்ட சில பகுதிகளை தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமான இடமாக பிரகடனப்படுத்தப்பட்டது.

2015-11-15ம் திகதி நில அளவைத் திணைக்களத்தினால் இந்தப் பகுதியில் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு தெளிவான முறையில் தொல்பொருள் திணைக்களத்துக்குரிய பகுதிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. உண்மையில் நாங்கள் பௌத்த மக்களுக்கு எதிரானவர்கள் அல்ல. பௌத்த மக்களோடு எப்போதும் ஒற்றுமையோடும் புரிந்துணர்வோடும் வாழ்ந்து வருகின்ற ஒரு பிரதேசமாக இறக்காமத்தை சொல்ல முடியும். ஏனென்றால் இந்தப் பிரதேசத்தில் தீகவாபி உள்ளிட்ட பல விகாரைகளை அமைப்பதற்கு நாங்கள் காணிகளை வழங்கியிருக்கின்றோம். யுத்த காலத்தில் அந்த விகாரைகளைப் பாதுகாத்தவர்களும் நாங்கள்தான்.

ஆனால் இன்று எமது பிரதேசத்தில் நிரந்தர காணி உறுதிகள் உள்ள பகுதியில் ஞானசார தேரர் தலைமையிலான குழு வந்து கட்டிடங்களை அமைக்க முனைகின்றனர். இது தெளிவான ஒரு அத்துமீறலாகும். இதனால் விரக்தி அடைந்துள்ள இறக்காமத்தைச் சேர்ந்த ஒட்டுமொத்த மக்களும் இணைந்து கடந்த வெள்ளிக்கிழமை பாரிய ஆர்ப்பாட்டம் மூலமாக எதிர்ப்புத் தெரிவித்து, பிரதேச செயலாளர் மற்றும் அரசாங்க அதிபர் ஊடாக ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை கையளித்திருக்கின்றனர். அதேபோன்று மிக அவசரமாக முஸ்லிம் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து இந்த விவகாரம் தொடர்பில் உரிய தீர்வினைப் பெற்றுக் கொடுக்க ஜனாதிபதிக்கு நெருக்கடியை ஏற்படுத்த வேண்டும்.

**சட்டத்தரணி பீ.எம். றிஸ்வான் (LLB)**

இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மாணிக்கமடு, மாயக்கல்லி மலையில் எந்தவிதமான சிங்களக் குடியேற்றங்களும் இல்லாத நிலையில் இங்கு சிலை வைத்து விகாரை ஒன்றை அமைக்கும் இனவாதிகளின் இத்தகைய நடவடிக்கைகளுக்குப் பின்னால் தென்கிழக்கிலுள்ள முஸ்லிம்களின் அடர்த்தியை குறைக்க வேண்டும் என்ற நோக்கமே காணப்படுகின்றது.

மாயக்கல்லி மலையைச் சுற்றியுள்ள அரசாங்கக் காணிகள் தொல்பொருள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் அதற்கு மேலதிகமாக அருகிலுள்ள முஸ்லிம்களின் காணிகள் திட்டமிட்ட வகையில் இனவாதிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

2016ம் ஆண்டு இந்த மலையில் சிலை வைக்கப்பட்டபோது தமண பொலிஸ் பிரிவினால் இங்கு அமைதிக்குப் பங்கம் ஏற்படக்கூடிய ஒரு சூழ்நிலை இருப்பதைக் கருத்திற் கொண்டு, இந்த இடத்தில் இதற்குப் பிறகு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளக் கூடாது என வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. எனவே, இது பௌத்த நாடு, சமாதானத்துக்கு எதிரானவர்களாக எம்மை அடையாளப்படுத்தக் கூடாது என்ற நோக்கில் இனவாதிகளின் நடவடிக்கைகளுக்கெதிராக ஆர்ப்பாட்டங்களை செய்யாமல் அமைதியான முறையில் இதனைத் தீர்த்துக் கொள்வோம் என பள்ளிவாயலில் முடிவு எடுக்கப்பட்டது. அதேநேரம் குறித்த இடத்திலிருந்த சிலை அகற்றப்படும் என்ற வாக்குறுதி முஸ்லிம் தலைவர்களால் வழங்கப்பட்டது.

தற்போது நீதிமன்ற தடை உத்தரவையும் மீறி இனவாதிகள் முஸ்லிம்களின் காணிகளில் அத்துமீறி நுழைந்து அவற்றை ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இந்த இடத்தில் நாட்டின் சட்டத்தை நிலைநாட்டுமாறே அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுக்கின்றோம். இஸ்லாமிய சட்டத்தை நிலைநாட்டுமாறு நாம் கூறவில்லை. இவ்வளவு காலமும் இங்குள்ள தொல்பொருட்களை நாம்தான் பாதுகாத்து வந்திருக்கின்றோம்.

உண்மையில் இந்த இடத்தில் சிலை வைப்பதற்கான எந்த அவசியமும் ஏற்படவில்லை. இது ஒரு பௌத்த நாடாக இருந்தாலும் தொல்பொருட்களை பாதுகாப்பது இந்த நாட்டிலுள்ள அனைவரினதும் கடமையாகும். எனவே, தொல்பொருள் திணைக்களத்துக்கு சொந்தமான இடத்தில் சிலை வைப்பதானது சட்டத்தை மீறும் ஒரு செயலாகும். அந்தவகையில் இந்த விடயத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதுடன் அத்துமீறி சுவீகரிக்கப்பட்டுள்ள தனியாருக்கு சொந்தமான காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்.

## தமிழ்க் கூட்டமைப்புடன்... (01ம் பக்கத் தொடர்)

அவரது இடத்துக்கு வடமாகாணத்தைச் சேர்ந்த வேறொருவரை நியமிப்பதற்கு நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தலைமைத்துவ சபை தீர்மானித்துள்ளது.

அய்யூப் அஸ்மினை மீளழைப்பதற்காக ந.தே.முன்னணி ஏற்கனவே மேற்கொண்ட தீர்மானத்துக்கு காரணமாக அமைந்த நியாயங்கள் தொடர்ந்தும் உறுதி செய்யப்பட்டிருப்பதனாலும், அந்த இடத்துக்கு இன்னுமொரு முஸ்லிம் பிரதிநிதியை நியமிப்பதற்கு சட்டரீதியாக தற்போது சாதகமான சூழ்நிலை ஏற்பட்டுள்ளதனாலும் இத்தீர்மானத்தை அமுல்படுத்துவதற்கான நடவடிக்கைகளை விரைவாக முன்னடுக்க வேண்டுமென ந.தே.முன்னணியின் தலைமைத்துவ சபை தற்போது தீர்மானித்துள்ளதாக ந.தே.முன்னணி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வட மாகாண சபைத் தேர்தலைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நடைபெற்ற சந்திப்பில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ந.தே. முன்னணிக்கு வழங்கப்படும் போனஸ் ஆசனத்துக்கு நியமிக்கப்படுபவர், அவசியம் ஏற்படும் பட்சத்தில் இரண்டரை வருடங்களின் பின்னர் மீளழைக்கப்படுவது பற்றி பரிசீலிக்கப்படும் என ந.தே. முன்னணி, த.தே. கூட்டமைப்பிடம் தெரிவித்திருந்தது. இதற்கு ஒப்புதல் வழங்கிய பின்னரே அய்யூப் அஸ்மினுக்கு அந்தப் பதவி வழங்கப்பட்டது.

தற்போது வடமாகாண சபை தேர்தல் நடைபெற்று இரண்டரை வருடங்கள் கடந்துள்ள நிலையிலேயே அவரை மீளழைப்பதற்காக கட்சி தீர்மானித்தது என ந.தே.முன்னணியின் ஊடக அறிக்கை தெரிவிக்கிறது.

இது தொடர்பில் மீள்பார்வை வட மாகாண சபை உறுப்பினர் அய்யூப் அஸ்மினை தொடர்பு கொண்டு கேட்ட போது, இது தொடர்பில் தீர்மானம் எடுப் தற்கு இடமிருக்கிறது. தான் இது தொடர்பில் எந்தத் தீர்மானமும் எடுக்கவில்லை. த.தே. கூட்டமைப்புடன் பேசிய பின்னரே தீர்மானம் எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

மீளழைக்கும் தீர்மானங்களுக்கு எவ்வித இழுத்தடிப்புக்களும் இன்றி முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவேன் என்று இறைவனின் பெயரால் வழங்கப்பட்ட சத்திய வாக்குறுதியினை மக்கள் முன்பாக பகிரங்கமாக வழங்கியதன் அடிப்படையிலேயே அய்யூப் அஸ்மின் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டார் என ந.தே.முன்னணி தனது ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## மஸ்லஹா... (01ம் பக்கத் தொடர்)

முடியுமானவரை அனைத்து விடயங்களும் கலந்துரையாடலுக்குட்படுத்தப்பட்ட பின்னர் இம் மாதம் 21 ஆம் திகதி குழுவினர் கூடி முன்வரைபொன்றை வெளியிடுவதென்றும், பொதுமக்களின் மாற்றுக் கருத்துக்கள் இல்லையெனில் அது முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தத்துக்கான பாராளுமன்றக் குழுவிடம் கையளிக்கப்படும் எனவும் முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தக் குழுவின் தலைவர் நீதியரசர் ஸலீம் மர்சூப் மீள்பார்வைக்குத் தெரிவித்தார்.

## கடன் பொறியில்... (04ம் பக்கத் தொடர்)

சக்தியை மேம்படுத்திக் கொள்வதற்கான சந்தர்ப்பமாக அமைத்துக்கொள்ள வேண்டும். கடனை பராமரித்துச் செல்லும் இயலுமைகளை நாம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். வெளிநாட்டு வருவாய்களை நெருக்கடியான நிலைக்கு செல்ல விடாமல் முகாமை செய்ய வேண்டியுள்ளது. அதற்கு முறையான பொருளாதார கொள்கைகளை அமுல்படுத்தி, பொருளாதார சீர்திருத்தத்தை முன்னெடுக்க வேண்டும். நஷ்டமடையும் அரசாங்க நிறுவனங்களை புனரமைத்து தனியார்மயப்படுத்துவது கடன் சுமையை குறைப்பதற்குரிய வழிமுறையொன்றாக உள்ளது. அரசியல் ரீதியில் பிரபல்யமற்ற தீர்மானங்களை அங்கு மேற் கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு கடன் தொடர்பிலான அறிக்கை தகவல்கள் மாற்றமடையலாம். நாட்டின் உண்மையான கடன் சுமையளவு மேற்குறிப்பிட்ட அறிக்கை தகவல்களை விடவும் பாரதூரமானதாக இருக்கலாம். ஏனெனில், மேற்குறிப்பிட்ட அறிக்கை தகவல்கள் அரசாங்கத் திட்டங்களுடன் தொடர்பான கடனையும் சர்வதேச திரைசேறி முறிகளுடன் தொடர்பான கடனையும் அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. இப்பிரிவுகளுக்கு வெளியால் பெறப்பட்டுள்ள ஏனைய கடன் தொகைகளையும் கணக்கிடும் போது நாட்டின் உண்மையான கடன் சுமை இருப்பதையும் விட அதிகரிக்கலாம்.

(2017 ஏப்ரல் 23ம் திகதி நிமல் சதரத்ன சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு எழுதிய Sri Lanka's Massive Foreign Debt Generates A Debt Trap எனும் கட்டுரையின் தமிழ் வடிவம்)

-தமிழில்: ஹெட்டி ரம்ஸி

## ஒன்றிணைந்த... (07 ம் பக்கத் தொடர்)



அரசாங்கம் கொழும்பு மாநகர எல்லைக்கு உட்பட்ட பகுதியை நிலைபேறான அபிவிருத்திக்குரிய மாநகர எல்லை என்பதாக பிரகடனப்படுத்தியுள்ளது. எனவே இது வார்த்தை அளவில் மாத்திரம் இருந்தால் போதாது. அதற்கான திட்டம் நில அளவில் காணப்பட வேண்டும்.

- **குப்பைகளை இடும்போது கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விடயங்கள் என்ன?**

குப்பைகளை அகற்றுவதற்கு சிறந்த இடங்களைத் தெரிவுசெய்ய வேண்டும். விவசாய பிரதேசங்கள், நல்ல தாவரப் போர்வைகள் உள்ள இடங்கள், சிறந்த மண்வளம் உள்ள பகுதிகள், எப்பொழுதும் மழைபொழியும் இடங்களில் குப்பைகளை போடக் கூடாது. அத்துடன் மக்களின் பாதுகாப்பு தீர்மானிக்கப்பட வேண்டும். மக்கள் சுகாதாரம் பேணப்பட வேண்டும். சமூகவியல் குற்றங்களிலிருந்து அவர்கள் பாதுகாக்கப்பட வேண்டும். எங்கு குப்பைகள் உள்ளதோ அங்கு அத்துமீறல்கள் அதிகம். சட்டரீதியற்ற கட்டிட தொகுதிகளும் அதிகம். சமூக விரோத குற்றச்செயல்கள் அதிகமாக இடம்பெறும் இடங்களாக இக்குப்பை மேட்டுப்பகுதிகள் காணப்படுகின்றன. அங்கு பொலிஸார் செல்வதுமில்லை. அமைச்சர்கள் செல்வதுமில்லை. குறைந்த வருமானங்களை பெறுகின்ற மக்கள் வாழும் பகுதிகளில் குப்பை போடும் போதே இவ்வாறான பிரச்சினைகள் மேலெழுகின்றன.

இன்று பல்வேறு சமூக நிலைப்பாடுகளும் காணப்படுகின்றன. குப்பை மேட்டுப் பகுதிகளில் வசிக்கும் பிள்ளைகள் பாடசாலைக்கு சென்றால் அங்கு நண்பர்களால் ஒதுக்கப்படுகிறார்கள். திருமணம் பேசிப் போனாலும் அவனுடைய வீடு குப்பை மேட்டுக்கு அருகில் உள்ளது எனக் கூறி தாழ்த்தி விடுவார்கள். எனவே அம்மக்களுக்கு சமூக அந்தஸ்து வழங்கப்படுவதில்லை. புறக்கணிக்கப்படுகிறார்கள். இதனால் அவர்கள் உள ரீதியாக தாக்கப்படுகிறார்கள். அம்மக்கள் குற்றச் செயல்களில் ஈடுபடுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

- **மீதொட்டமுல்ல குப்பை மேடு தொடர்பில் அரசாங்கம் பாராமுகமாக இருந்தமைக்கான சான்றுகள் முன்வைக்கப்படுகின்றன. இது குறித்து...**

இதற்கு முன்னர் 2012இல் புளுமெண்டல் குப்பை மேடு சரிந்தது. அப்போது நீதிமன்றம் தற்காலிகமாக 1 வருடத்திற்கு மீதொட்டமுல்லையில் குப்பை போடுமாறு உத்தரவு பிறப்பித்தது. ஆனாலும் இதுவரை காலமும் அங்கு குப்பை போடப்பட்டு வருகிறது. அரசாங்கம் எப்பொழுதும் குறுகிய நோக்கிலேயே சிந்திக்கிறது. நிலைபேறானதொரு திட்டத்தின் அடிப்படையில் செயற்படுவதில்லை.

அண்மையில் 15 லட்சம் ரூபா பணத்தைக் கொடுத்து அங்கிருந்த மக்களுள் சிலரை அரசாங்கம் அகற்றியது. அவர்களை எழுப்பிவிட்டு வீடுகளை தரைமட்டமாக்கி மீளவும் குப்பை கொட்டப்பட்டது. அவ்வாறு போடப்பட்ட குப்பைகளே தற்பொழுது சரிந்துள்ளது. ஒரு அனர்த்தம் அங்கு இடம்பெறப் போகின்றது என்பது தொடர்பில் 7 நாட்களுக்கு முன்னரே கொழும்பு மாநகர சபை ஆணையாளருக்கு தெரிந்திருந்தது என்றும் இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை என்றும் பாராளுமன்றத்தில் பேசப்பட்டதாக ஒரு ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.

அனர்த்தம் இடம்பெறப் போகின்றது என்றால் ஏன் அந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தால் உயிர்களை பாதுகாக்க முடிந்திருக்கும் அல்லவா. இது பெரியதொரு அழிவு. இந்த நாட்டில் மனிதர்களுக்கு பெறுமதியில்லை. இங்கு குப்பை கொட்ட வேண்டாம் என மீதொட்டமுல்லை மக்கள் எத்தனையோ தடவை ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

2013 இல் நான் ஒரு ஆய்விற்கு அங்கு சென்ற போது அங்குள்ள மக்கள், மழை பெய்து கழிவு நீர் வீட்டிற்குள் வருவதாகவும் கூடுதலானவர்களுக்கு எலிக் காய்ச்சல் பீடித்திருப்பதாகவும் அண்மையில் ஒரு கர்ப்பிணித் தாயார் எலிக் காய்ச்சலால் இறந்து போனதாகவும் என்னிடம் கூறி அழுதார்கள். அங்கு போய் நின்றால் தூசு படிந்த காற்றையே சுவாசிக்க முடிகிறது. மக்கள் எந்தளவுக்கு மாசடைந்த காற்றை சுவாசிக்கிறார்கள் என்பது புலனாகும்.

எனவே இப்பகுதி மிகவும் மோசமானதொரு கழிவகற்றல் பகுதியாகும். இதற்கு கடந்த அரசாங்கமும் தற்போதைய அரசாங்கமுமே பொறுப்புச் சொல்ல வேண்டும். இனிமேலும் அங்கு குப்பை போட இடமில்லை. தற்பொழுது குப்பையை அகற்ற வேண்டும் எனக் கூறுகிறார்கள். இது இயற்கை அனர்த்தமல்ல. மனிதனால் தோற்றுவிக்கப்பட்டதொரு பேரழிவு. சர்வதேச அளவில் களங்கத்தை ஏற்படுத்திய நிகழ்வாக இது உள்ளது.

- **மீதொட்டமுல்ல குப்பை மேடு இதுவரைகாலமும் அகற்றப்படாமல் இருந்தமைக்கான காரணங்கள் என்ன?**

சில வெளிநாட்டு நிறுவனங்கள் திட்டங்கள் அடிப்படையில் மீள்சுழற்சி செய்வதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக கேள்விப்பட்டேன். சில அரசியல்வாதிகள் தனது சுய இலாபத்திற்காகவும் இதை வைத்துக்கொண்டுள்ளார்கள். கொழும்பில் ஒரு நாளைக்கு 750 மெட்ரிக் டொன் குப்பை இருப்பதாக சொன்னாலும் உண்மையாகப் பார்த்தால் ஒரு நாளைக்கு 650 மெட்ரிக் டொன் குப்பையே உள்ளது. எஞ்சியவை தொழிற்சாலைக் கழிவுகள்.

தொழிற்சாலைகளே அதனது கழிவுகளை பொறுப்பேற்க வேண்டும். மாநகர சபையில் உள்ளவர்கள் தொழிற்சாலைக் கழிவுகளையும் அகற்றி அதற்கான தொகையை பெறுவதாகவும் சொல்லப்படுகின்றது. அண்மையில் தொம்பேயில் 71 டொன் குப்பை போடப்பட்டதாக சொல்லப்பட்டது. ஆனால் மத்திய சுற்றாடல் அதிகார சபை அதிகாரிகள் போய்ப் பார்த்தபோது 51 டொன் குப்பைகள் இருந்ததாக சொன்னார்கள். ஜனாதிபதியின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டுள்ளது. அதாவது சிலர் குப்பையை வைத்துக் கொண்டு இலாபம் தேடுகிறார்கள்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 13 இதழ்கள் | - ரூபா 650.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 26 இதழ்கள் | - ரூபா 1300.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0112 691258 People's Bank A/c: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொது அறிவுத் தகவல்கள்

- பூச்சி இனங்களில் அறிவு மிக்கது எறும்பு.
- உடலில் ரத்தம் பாயாத பகுதி கருவிழி.
- PhD பட்டம் பெற்றிருந்த ஒரே அமெரிக்க அதிபர் வூட்ரோவில்சன்.
- ஆபிரிக்கக் கண்டத்தில் மட்டுமே வரிக்குதிரை காணப்படுகிறது.
- கங்காருதான் அதிக தூரம் தாண்டும் மிருகமாகும். அது ஒரே தாவுதலில் 13 மீட்டர் நீளம் தாண்டிவிடும்.
- தேனீக்கு இரண்டு இரைப்பைகள் உள்ளன. ஒன்று சேமிப்பு அறையாகவும், மற்றொன்று ஜீரண உறுப்பாகவும் பயன்படுகிறது.
- ஆமைக்கு பற்கள் கிடையாது.
- டியூப் லைட் சுமார் 6 ஆயிரம் மணி நேரம் வரை எரியும் திறன் கொண்டது.
- வாத்தை தேசிய பறவையாகக் கொண்ட இரு நாடுகள் கனடா, ஜாவா.
- கோள்களின் இயக்கத்தை கண்டுபிடித்தவர் கெப்லர்.
- ஈகிள் என்ற நட்சத்திரம் சூரியனை விட 8 ஆயிரம் மடங்கு பிரகாசமுடையது.
- மனித உடல் 60 சதவீதம் நீரால் ஆனது.
- மிகப்பெரிய விரிகுடாவான வங்காள விரிகுடாவின் நீளம் 2,250 மைல்கள்.
- உலகில் அதிக அருங்காட்சியங்கள் உள்ள நாடு ஜெர்மனி
- திராட்சை மலரை தேசிய மலராகக் கொண்டுள்ள நாடு சீனா
- கண் இல்லாத உயிரினம் மண்புழு.
- தோலினால் சுவாசிக்கும் உயிரினம் மண்புழு.
- மேல் தாடையை அசைக்கும் விலங்கு முதலை.
- மூக்கில் பல் இருக்கும் விலங்கு முதலை.
- வயிற்றில் பல் இருக்கும் உயிரினம் நண்டு.
- வயிறும் ஜீரண உறுப்பும் இல்லாத உயிர் ஈசல்.

# வானமும் எல்லையல்ல!



தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

ஒரு மைல் தூரத்தை ஓடிக் கடக்க குறைந்த பட்சம் நான்கு நிமிடங்கள் வேண்டும் என்று பல காலமாக எல்லோரும் நம்பி இருந்தார்கள். 1954 ஆம் ஆண்டு வரை வெளியான எல்லா அறிவியல் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் மனித உடலால் அதற்கு மேல் வேகமாக ஓட முடியாது என்று ஒருமித்த கருத்தை அறிவித்தன. ஆனால், 1954 ஆம் ஆண்டு மே மாதம் ஆறாம் திகதி ரோஜர் பேனிஷ்டர் என்பவர் ஒரு மைல் தூரத்தை நான்கு நிமிடங்களுக்கு முன்னதாக ஓடிக் கடந்து அது வரை நிலவிய அறிவியல் நம்பிக்கையைப் பொய் ஆக்கினார்.

அவர் பயிற்சியின்போது தன் இலக்கான மைலை நான்காகப் பிரித்துக் கொண்டார். ஒவ்வொரு கால் மைலையும் 58 வினாடிகளுக்கு முன் கடக்க வேகத்தை மேற்கொண்டார். மிகவும் கஷ்டமான அந்த வேக இலக்கை எட்டி சிறிது ஓய்வு எடுத்துக் கொள்வார். பின் அடுத்த 'கால் மைலைக் கடப்பார். பல முறை பயிற்சி எடுத்து சிறிது சிறிதாக வேகத்தைக் கூட்டி, ஓய்வைக் குறைத்துக் கொண்டு வந்தார். கடைசியில் அவர் பந்தயத்தில் 3 நிமிடம் 59.6 வினாடிகளில் அந்த மைல் இலக்கைக் கடந்தார். அடுத்த நான்கு வருடங்களில் அவரைப் போல் 46 பேர் அந்த ''ஒரு மைல்-நான்கு நிமிடம்'' என்ற உடற்கூறு ஆராய்ச்சியாளர் களின் கருத்தை முறியடித்தார்கள்.

ஆகவே, எதையும் இதுவரை சாதித்தவர்களை வைத்தோ, வல்லுனர்களின் கருத்தை வைத்தோ தீர்மானிக்காதீர்கள். முடியாதது என்பது முயலாதது மட்டுமே. மனித சக்தி எல்லை இல்லாதது. அதன் எல்லைகளைக் கண்டவர் கள் இன்று வரை இல்லை. முடியாதது என்பது கிடையாது.

எல்லா சாதனையாளர்களும் 'முடியாது' என்ற கருத்தை ஏற்றுக் கொள்ளாமல் தொடர்ந்து முயன்றவர்கள் தான். சுற்றிலும் 'முடியாது, ஆகாது' என்று பலரும் சொல்லும் போதும், ஆரம்பத் தோல்விகள் அடைந்த போதும், தொடர்ந்து முயன்றவர்களுக்குள் சாதித்துக் காட்ட வேண்டும் என்ற ஒரு அக்னி இருந்திருக்கிறது.

ஒவ்வொருவரும் அப்படியொரு அக்னியை உங்களுக்குள் வளர்த்துக் கொள்ளுங்கள். அந்த அக்னி உங்களைச் சோம்பலாக இருக்க விடாது. சலிப்படைய விடாது. அரை குறை முயற்சிகளோடு திருப்தியடைய விடாது. விதியையோ, அடுத்தவர்களையோ தடையாக நினைக்க விடாது. அப்படி ஒரு அக்னி உங்களுக்குள்ளும் இருக்குமானால் வானம் கூட உங்களுக்கு எல்லையல்ல.

# நினைவுத் திறனை அதிகரிக்கும் வழிகள்



1. எதையும் தாய் மொழியிலேயே சிந்திக்க வேண்டும். நீங்கள் படிப்பது ஆங்கிலமோ, தமிழோ எதுவாக இருந்தாலும் உங்கள் தாய் மொழியிலே சிந்தித்து மனதில் பதியச் செய்ய வேண்டும்.
2. விளங்காமல் எதையும் படிக்கக்கூடாது. ஒரு வரி விளங்குவதற்கு ஒரு நாள் கழிந்தாலும் பரவாயில்லை.
3. முழுக் கவனம் மிக அவசியம்.
4. Mnemonics வைத்து படிப்பது ஒரு கலை . அதை உங்கள் குழந்தைக்கு கற்றுக் கொடுங்கள் . உதரணம் NEWS – North, East, West, South
5. படித்தவுடன் எழுதிப் பார்க்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். வீட்டு வேலை என்ற பெயரில் கடமைக்கு எழுதுவதால் பயனில்லை.
6. படங்களுடன் கூடிய தகவல்கள் மனதில் பதியும். பட விளக்கங்களை திருப்பத் திரும்ப வரைந்து பார்க்கச் சொல்ல வேண்டும்.
7. நல்ல உறக்கம் அவசியம். குறைந்தது 8 மணி நேர தூக்கம் கண்டிப்பாகத் தேவை
8. இரவில் சீக்கிரம் தூங்கி அதிகாலை படிக்க வேண்டும்.
9. தூங்கச் செல்லும் முன் அன்று படித்த அனைத்தையும் ஒரு முறை மேலோட்டமாக நினைவுபடுத்திப் பார்க்க வேண்டும். அப்படி செய்யும்போது நாம் தூங்கினாலும் நம் மூளையின் சில மூலைகள் விழிப்புடன் இருந்து தகவல்களை குறுகிய கால ஞாபக சக்தியிலிருந்து நீண்ட கால ஞாபக சக்தியில் பதிவுசெய்து கொண்டிருக்கும். இது மிக முக்கியமான பயிற்சி ஆகும்.
10. புரதச் சத்து உள்ள உணவுகள் மந்த நிலையை ஏற்படுத்தும். எனவே, புரதம் நிறைந்த எளிதில் செரிக்கும் உணவை சேர்த்துக் கொள்வது நல்லது.

# நூல் அறிமுகம்

## நோன்பு: தெளிவுகளும் வழிகாட்டல்களும்




**பக்கங்கள்: 62**

**விலை: 150.00**

**வெளியீடு: உரையாடல் தொடர்கிறது, வெலிகம.**

மனித நலனைக் கருத்திற் கொண்டு இஸ்லாம் அதன் போதனைகளை முன்வைத்துள்ளது. எந்த நிலையிலும் இஸ்லாத்தின் ஒழுங்குகளுக்குள்ளால் வாழ முடியுமான வழிகாட்டல்கள் இஸ்லாமிய ஷரீஆவில் காணப்படுகின்றன. இந்த வகையில் நோன்புடைய சட்ட ஒழுங்குகளும் மிகவும் நெகிழ்வுத் தன்மை கொண்டவையாக அமைந்திருப்பதனை இந்த மொழிபெயர்ப்பு நூலை வாசிக்கும் போது தெளிவாகிறது. நோயாளிகள், பயணிகள், பாலூட்டும் பெண்கள், கருத்தரித்தோர், முதியோர் முதலானோரின் நிலைமைகளை அவதானித்து நோன்பு நோற்பதற்கான இலகுவான வழிகாட்டல்கள் இஸ்லாமிய ஷரீஆவில் முன்வைக்கப்பட்டிருப்பதானது அது முழு மனித சமூகத்தினதும் நலனை கவனத்திற் கொண்டதோர் மார்க்கம் என்பதற்கு போதிய சான்றாகும்.

பத்வாக்கள் அன்றாட வாழ்வில் எழும் சட்ட ரீதியான சிக்கல்களுக்கு இஸ்லாமியத் தீர்வை முன்வைக்கும் அருமையான முயற்சியாகும். இஸ்லாமிய சட்டத் துறையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட அறிஞர்களால் மேற்கொள்ளப்படும் சட்ட ஆய்வுகளின் முடிவுகளே பத்வாக்களாகும். ஷரீஆவின் சட்ட வசனங்கள், அதன் உயரிய இலக்குகள், சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்ட இஜ்திஹாத் முயற்சியாக பத்வா காணப்படும்.

இஸ்லாமிய சட்டப் பகுதியின் கிளை விவகாரங்கள் பொதுவாக பல நிலைப்பாடுகள், முடிவுகளை உணர்த்தும் வகையிலே அமைந்திருக்கின்றன. அறிஞர்களது ஆய்வு முறை, அவர்களது சூழ்நிலை, பெற்றுக் கொள்ளும் தகவல்களைப் பொறுத்து சட்ட நிலைப்பாடுகள் வித்தியாசப்பட முடியும்.

இஜ்திஹாத் மிகவும் சரியானதொரு தீர்ப்பைப் பெற்றுத் தரும் போது குறித்த ஆய்வில் ஈடுபடுபவருக்கு இரு நன்மைகளும், தவறு ஏற்படும்போது ஒரு நன்மையும் வழங்கப்படுவதாக இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறியதிலிருந்து பத்வாக்கள் எவ்வாறு விரிந்த பார்வையில் அணுகப்பட வேண்டும் என்பது தெளிவாகிறது.

அறிஞர்களது இஜ்திஹாதின் விளைவாகத் தோன்றும் வித்தியாசமான சட்டத் தீர்ப்புகள் சிலபோது நாம் பாரம்பரியமாகப் புரிந்து, ஏற்றுவந்த உண்மைகளுக்கு அந்நியமானதாக இருக்க முடியும். அவற்றை புரிந்துகொள்ளும் விரிந்ததொரு மனோநிலையை எமது இலங்கை சூழலில் கட்டியெழுப்ப வேண்டிய தேவையுள்ளது. இறுக்கமான, மூடுண்டநிலையில் நின்றுகொண்டு இஸ்லாத்தையோ அதன் அறிஞர்களையோ எம்மால் புரிந்துகொள்ள முடியாது. இஸ்லாமிய சட்ட ஆய்வுகள், சட்ட முடிவுகள் எப்போதும் பன்முகத் தன்மை கொண்டவையே. அதன் பரந்துபட்ட தன்மையை விசாலமான உள்ளத்தினூடாக பார்க்கத் தவறும் போது அறிவு முயற்சிகளுக்கூடாக பெற வேண்டிய பயனை இழக்க நேரிடும்.

இத்தகையதொரு விரிந்த பார்வையை இந்நூலை வாசிக்கும்போது புரிந்துகொள்ள முடிகின்றது. நோன்போடு தொடர்பாக அன்றாடம் எழும் பல்வேறு மயக்கங்கள், சந்தேகங்களுக்கான போதிய வழிகாட்டல்கள் நவீனகால அறிஞர்கள் பலரினால் மேற்கொள்ளப்பட்ட இந்த பத்வாக்கள் தெளிவுபடுத்துகின்றன. மிகவும் இலகுவான மொழிநடையில் சமகால அறிஞர்கள் மேற்கொண்ட நோன்போடு தொடர்பான சட்ட ரீதியான விளக்கங்களை தமிழ்மொழியில் கொணர்ந்த ஷெய்க் ஸியாப் (நளீமி) மிகவும் பாராட்டத்தக்கவர்.

இதற்கு முன்னரும் இந்த கூட்டு முஸ்லிம் சமூகம் வேண்டி நிற்கும் பல்வேறு பத்வாக்களை மொழிபெயர்த்துத் தந்தவர். அத்தொடரில் இரண்டாம் நூலாக நோன்பு தொடர்பான 27 பத்வாக்களை இங்கு மொழிபெயர்த்துள்ளார். அவரது எழுத்துப் பணி தொடரவும் அவரது அறிவில் மேலும் விருத்தியேற்படவும் அவருக்கூடாக முஸ்லிம் சமூகம் அதிக பயனைப் பெறவும் பிரார்த்திக்கிறேன்.

**- அஷ்ஷெய்க் அரபாத் கரீம் (நளீமி)**

அணிந்துரையிலிருந்து....

# உயிர்த்தெழப் போவதில்லை

குழைத்துச் சாப்பிடுவதற்குச் சீமெந்தும் வெயிலுமுண்டு
கால்வலியைப் பொருட்படுத்தாமலே
மேலும் இரண்டு சுமை மணல் வந்து விட்டது
கொட்டிப் பரப்புவதற்கென்று
அப்படியே கருங்கற்கள். சீமெந்து, இரும்புக் கம்பிகள்,
ஆணி, பலகை, முட்டுக்கம்பு
எல்லாம் வந்து நிறைந்தன
தின்று முடிய
எப்போதும் அழிகின்றன பாதியிரவுகள்.
ரொட்டியும் சம்பலும் பிளேன்ரீயும் அவனும்
ஒரு நேர்கோட்டில் சந்திப்பதை
KFC யும் McDoanld ம் தடுக்கவே முடியாமல்
கழிந்தது இன்றும்.
எவ்வளவோ முயன்றும் அவனை
Food City யை நோக்கித் தள்ளி விட முடியவில்லை
என்று நிதியமைச்சரைக் கடிந்தன International Traders.
இரவை எரித்து விடுகிறது கடன் தீ
பகலில் நீரூற்றாகப் பெருக வைக்கிறது
பனங் கள்ளு
சுருள் குலைந்து மேலெழும் பீடிப்புகையின் முன்னே
நடந்து செல்லும் அவனைக் கடந்து போகின்றன
மணல் லொறிகள்
கிறேன்கள்
தள்ளு வண்டிகள்
எல்லாம் போய் முடிய
அருகே நின்ற மரநிழலில் தன்னையாற்றியவன்
காதலும் காமமும் பொங்கி ருஸியாகும்
புணர்ச்சியைப் பற்றி யோசித்தேயாக வேணும்
என்றெண்ண
வந்ததோர் கட்டளைக் குரல்
''அங்கெயென்ன மசிரையா புடுங்கிறாய்
இங்க வா'' என்று.
வானத்தை ஏந்தி வைத்திருக்கும் அக் கட்டிடத்தை விட்டு
எப்படி ஓரடி நகர்வதென
நின்றொரு கணம் நிதானித்துக் கழிவதற்குள்
கல்லையும் மணலையும் இரும்பையும்
விடக் கடினமான அக்குரல்
குருதியோலம் மேலெழ ஆணியறைந்தது
அவன் மீது.
மூன்றாம் நாளென்ன
முப்பது நாளின் பிறகும் உயிர்த்தெழப்போவதில்லை அவன்



- கருணாகரன்

நன்றி- naduweb.net

# மாயக்கல்லி மலையும் இழுத்துக்கட்டப்பட்ட செக்கு மாடுகளும்



நாங்கள் வழமை போலவே
வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.
எந்தவிதமான நிந்தனைகளையும்
எவருக்கும் எப்போதும் ஏற்படுத்தியதில்லை.
நாங்கள் எப்படியான தேசத்தில்
நிலை கொண்டிருக்கிறோம் என்பதையிட்டு
பல தருணத்தில் நாம்
அடிக்கடி வெட்கித்து மௌனிக்கிறோம்.
சில தருணத்தில்
ஆத்திரமும் கொள்கின்றோம்.
நிலைபேறுகளின் இருப்பிடத்தில் நாமெல்லாம்
சிறுபான்மைகளாக சித்தரிக்கப்பட்டு
அடிமை சாசனம் பொறிக்கப்படாத
பலிக்கடாக்களாக்கப்பட்டிருக்கிறோம்.
நேற்றும் இன்றும் எங்களிடையே
திடீர் பேச்சுப்பரவியது.
மாயக்கல்லி மலையின்
மண்டையில் புத்தர் உட்கார்ந்து கொண்டிருக்கிறார் என்று.
வழமை போலவே இயலாமையின் இருப்பிடத்தில்
நாமெல்லாம் இழுத்துக்கட்டப்பட்ட செக்கு மாடுகளாக
இஸ்திரியிடுபவனை மட்டும் நம்பி
முகத்தில் கவலையை சலவை செய்யாமல்
உட்கார்ந்து கொண்டிருப்போம்.
ஏனென்றால் நாமெல்லாம்
அடிமை சாசனம் பொறிக்கப்படாத செக்கு மாடுகளாக்கப்பட்டிருக்கிறோம்.

-நஸார் இஜாஸ்
கிண்ணியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீள்பார்வை

# விளையாட்டு

## இலட்சியத்துக்காக கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறும் வீரர்




இங்கிலாந்து கிரிக்கெட் அணிக்காக 1 ஒருநாள் போட்டி மற்றும் 3 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய 25 வயதான சகலதுறை வீரர் ஸபர் அன்சாரி கிரிக்கெட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவ தாக அறிவித்துள்ளார். சர்ரே அணிக்காக முதல் தர போட்டி களில் விளையாடி வந்த ஸபர் அன்சாரி 2015ம் ஆண்டில் அயர்லாந்துக்கு எதிரான ஒருநாள் போட்டியில் அறிமுக மானார்.

கடந்த ஆண்டில் நடந்த பங்களாதேஷ் மற்றும் இந்தியா வுக்கு எதிரான டெஸ்ட் போட்டித் தொடரில் இங்கிலாந்து அணியில் இடம் பிடித்து இருந்தார். ஓய்வு பெறும் முடிவு மிகவும் கடினமானது என் றாலும், தனது இலட்சியமான சட்டப்படிப்பில் கவனம் செலுத்தும் நோக்கில் கிரிக் கெட்டில் இருந்து விடைபெறுகிறேன் என்றும் ஸபர் அன்சாரி தெரிவித்துள்ளார்.

## சம்பியன்ஸ் கிண்ணத்தில் மலிங்க சாதிப்பார்

இலங்கை அணியின் நட்சத்திர பந்துவீச்சாளர் லசித் மலிங்க சம்பியன் கிண்ண போட்டிக்கு முழு அளவில் தயாராகி விடுவாரென இலங்கை அணியினர் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். எதிர் வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் ஆரம்பமாகவுள்ளது. இதற்கான இலங்கை அணியில் லசித் மலிங்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் லசித் மலிங்க ஒருநாள் போட்டிகளில் பங்கேற்கவுள்ளார். காயத்திலிருந்து அவர் முழுமையாக குணமடைந்துவிட்டாலும் அவரது பந்துவீச்சு இன்னமும் பழைய நிலைமைக்குத் திரும்பவில்லை. ஐ.பி.எல்லில் மும்பை அணிக்காக களமிறங்கியுள்ள மலிங்கவின் பந்துவீச்சு மிக மோசமாகவே இருக்கின்றது. எதிர்பார்த்ததை விட அவரது பந்துவீச்சு மோசமாக இருப்பதாகவும் நான்கு ஓவர்களே ஒரு போட்டியில் மலிங்க வீசும் நிலையில், அதில் கூட பெருமளவு ஓட்டங்களைக் கொடுப்பதுடன் விக்கெட்டுகளை வீழ்த்துவதிலும் அவர் பெரிதும் சிரமப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது.




இந்த நிலையில் மலிங்க ஜூன் மாதமளவில் நடைபெற இருக்கும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பழைய நிலைமைக்குதட திரும்பி விடுவார் என எதிர்பார்ப்பதாக அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது. இலங்கை அணியின் மிக முக்கிய பந்துவீச்சாளராக சம்பியனஸ் கிண்ணத் தொடரில் மலிங்கவே கருதப்படுவதால், அவர் பழைய நிலைமைக்கு திரும்பி சிறப்பாக பந்து வீச வேண்டுமென்பதில் அணி நிர்வாகம் பெரிதும் அக்கறை காட்டி வருகிறது.

இலங்கை அணிக்கு தற்போது வேகப்பந்து பயிற்சியாளராக அழைக்கப்பட்டுள்ள அலன் டொனால்ட் மற்றும் அணியின் பிரதம பயிற்சியாளர் கிரஹம் போர்ட் ஆகியோர் மலிங்கவுடன் கூடிய நேரத்தை செலவளிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கை அணிக்கு புதிய பந்துவீச்சுப் பயிற்சியாளர்



இலங்கை கிரிக்கெட் அணிக்கு தென் ஆபிரிக்காவின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அலன் டொனால்ட் தற்காலிக பயிற்சியாளராக நியமிக்கபட்டுள்ளார். இலங்கை கிரிக்கெட் அணி இங்கிலாந்தில் நடைபெறும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் பங்கேற்று விளையாடவுள்ளது. அந்தத் தொடருக்கான தற்காலிக பயிற்சியாளராக தென் ஆபிரிக்காவின் முன்னாள் ஜாம்பவான் அலன் டொனால்ட் நியமிக்கப்பட்டுள்ளார். இரண்டு மாதங்களுக்கு மட்டுமே இவர் பயிற்சியாளராக செயற்படுவார் என இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. எதிர்வரும் 9ஆம் திகதியிலிருந்து பல்லேகல சர்வதேச மைதானத்தில் தொடங்கும் சிறப்புப் பயிற் சியில் டொனால்ட் கலந்து கொள்ளவுள்ளார்.

## ஐசிசி சம்பியன்ஸ் கிண்ணம்: இந்தியாவின் நிலை பரிதாபம்



சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்திய அணி பங் கேற்பது தொடர்பாக நிர்வாகக் குழுவின் முன் அனுமதியின்றி எந்தவொரு முடிவையும் மேற் கொள்ள வேண்டாம் என அந்தக் குழு இந்திய கிரிக்கட் சபைக்கு (BCCI) அறிவுறுத்தி யுள்ளது.


இது குறித்து, பிசிசிஐ நிர்வாகக் குழுத் தலைவர் தெரிவிக்கையில், ஐசிசியின் புதிய வருமானப் பகிர்வு முறை மற்றும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் இந்தியா பங்கேற்பது போன்ற விவகாரங்கள் தொடர்பாக முடிவுகள் மேற்கொள்ள் சில பிசிசிஐ அதிகாரிகள் (பிசிசிஐ முன்னாள் தலைவர் ஸ்ரீனிவாசன் ஆதரவாளர்கள்) காணொளிக் காட்சியில் கலந்தாலோசனையில் ஈடுபட்டது எங்களது கவனத் துக்கு வந்துள்ளது.

இதையடுத்து, பிசிசிஐயின் சிறப்புப் பொதுக் குழு கூட்டத்தின்போது, ஐசியின் புதிய வரு மானப் பகிர்வு முறை தொடர்பாக எந்தவொரு முடிவும் மேற்கொள்ளக் கூடாது எனவும், சம்பி யன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து இந்தியா விலகு வது தொடர்பாக எங்களின் அனுமதி இல்லாமல் ஐசிசிக்கு எந்தவொரு பதிலையும் அனுப்பக்கூடாது என்றும் பிசிசிஐக்கு அறிவுறுத்தியுள்ளோம்.

இத்தகைய முடிவை அவசரமாக மேற்கொள்ளக் கூடாது என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும். சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து இந்தியா விலகினால், அடுத்த 8 ஆண்டுகளுக்கு ஐசிசியின் போட்டிகளில் இந்திய அணியால் பங்கேற்க முடியாமல் போகும்.

எனவே, ஒரு சில உறுப்பினர்களின் விருப்பத்திற் கேற்ப முடிவுகள் மேற்கொள்ளப்படக் கூடாது. ஒருவேளை சம்பியன்ஸ் கிண்ணத் தொடரிலிருந்து இந்தியா விலகுவது என முடிவெடுத்தால், பிசிசிஐ சிறப்புக் குழுவின் கூட்டத்தில் 30 உறுப்பினர்களும் அதற்கு ஒருமனதாக ஆதரவு தெரிவிக்க வேண்டும் என பிசிசிஐ நிர்வாகக் குழுத் தலைவர் வினோத் ராய் குறிப்பிட்டுள்ளார். இந்தப் பிரச்சினை தொடர்பில் முடிவு எடுப்பதற்கான இந்திய கிரிக்கெட் சபையின் சிறப்பு பொதுக்குழுக் கூட்டம் டெல்லியில் எதிர் வரும் 7ஆம் திகதி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத் தக்கது.









இக்ரஃ இஸ்லாமிய சங்கத்தின் 25 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்திருந்த "Volleyball" சுற்றுப் போட்டி அண்மையில் மிகவும் சிறப்பாக நடந்து முடிந்தது. இப்போட்டியில் குவைத் வாழ் இலங்கை முஸ்லிம்களது 16 கரப்பந்தாட்டக் குழுக்கள் கலந்து கொண்டன. வேலைப்பளுக்களுடன் இங்கு வாழ்ந்து கொண்டிருக்கும் பலருக்கும் விடுமுறை நாட்களை இவ்வாறு சந்தோசமாகக் களிக்கவும் இன்னும் மார்க்க வழிகாட்டல்களையும் இக்ரஃ இஸ்லாமிய சங்கம் கடந்த 25 வருடங்களாக குவைத் நாட்டில் செய்து கொண்டு வருகிறது.

## முஸ்லிம் அரசியல் கட்சிகளில் ஒரேயொரு மே தின நிகழ்வு!










காத்தான்குடி கடற்கரை வீதியில் அமைந்துள்ள NFGGயின் பிராந்திய காரியாலயத்தில் இடம்பெற்ற மே தின நிகழ்வானது NFGGயின் காத்தான்குடி பிராந்திய தலைமைத்துவ ஆலோசனை சபையின் செயலாளர் MACM. ஜவாஹிரின் தலைமையில் தொழிலாளர்களை கௌரவிக்கும் நிகழ்வாக இடம்பெற்றது. இதில் NFGGயின் தவிசாளர் பொறியியலாளர் அப்துர் ரஹ்மான், பிரதித் தவிசாளர் சிறாஜ் மஷ்ஹூர் அதன் தேசிய அமைப்பாளர் M.B.M. பிர்தௌஸ் நழீமி ஆகியோர்களும், ஓட்டமாவடி, ஏறாவூர் மற்றும் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த NFGGயின் செயற்குழு உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.